கல்கி



ஹர ஹர சங்கர

KALKI 9.9.1962 30 காசு

சுபகிருது, ஆவணி 24உ

கல்கி

செப்டம்பர் 9, 1962

பொருளடக்கம்

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.



சிகரெட் உற்பத்திக்கான ஆள்பலம், நிதி, பொருள் நிறைவு ஆகிய எவ்வளவோ வசதிகள் நம் நாட்டுக்கு உள்ளன. எனினும் பாரதத்திலே, சிகரெட்டுத் தொழில் தனக்குரிய உயர் நிலையை இன்னும் எய்த முடியவில்லையென்றால், அது இந்திய மூலதனம் சுணங்கிப்போயிருக்கிறது என்பதனாலோ, அல்லது தேர்ச்சிவாய்ந்த தொழிலினம் இல்லாமையாலோ அல்ல. ஆனால் இந்தியாவில் வாணிபக் கூட்டுறவு அமைத்த அந்நியர்களின் ஏகபோக உரிமையாட்சியினால்தான்.

இந்திய சிகரெட் தொழிலுக்கென்ன இடர்?



பனாமா

ஒரு நல்ல சிகரெட்—
இறுதிவரை இன்பமூட்டுவது

பம்பாய்—57.

பாரதத்தில் இத்தகைய தேசிய ஸ்தாபனங்களில் மிகப் பெரியது.

GT. 709-A.TM

Grants' Advtg.



மலர் 22 | தமிழ்த்திரு நாடுதன்னைப்—பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார் | இதழ் 6

விலைவாசி குறையுமா?

பாரத அரசாங்க திட்ட அமைச்சர் ஸ்ரீ குல்ஜாரிலால் நந்தா விலைவாசிகளைக் கட்டுப்படுத்தப் போவதாகச் சொல்லுகிறார். இதற்காகப் பல நடவடிக்கைகள் பல கட்டங் களில் எடுக்கப்படுமாம்.

லைசென்சுகளும் பெர்மிட்டுகளும் வழங்குதல், நியாய விலைக் கடைகள் வைப்பது, கடைக்காரர்களை நிர்ப்பந்தம் செய்வது, கையிருப்புச் சரக்கை முடக்கிவைக்குமாறு செய்தல், விற்பனைக்குச் சீட்டு வழங்குதல், நியாய விலைப் போர்டுகள் தொங்கவிடுதல், அவ்வப்போது சர்க்கார் சிப்பந்திகளின் தணிக்கை, அவசியமானால் ராஜ்யவாரி அல்லது மண்டலவாரி கட்டுப்பாடுகள்—இவைதான் சர்க்கார் நடவடிக்கைகள்.

உணவு வகைகளில் கட்டாயக் கொள்முதல், அதற்காக விலை நிர்ணயம், உற்பத்தித் தொழில்களுக்குத் தேவைப்படும் கச்சாப் பொருள்களின் விநியோகக் கட்டுப்பாடு முதலி யனவும் இப்போது இந்த வரிசையில் இடம் பெறும். ரேஷன் முறையை மட்டும் மேற் கொள்ள மாட்டார்களாம். தாற்காலிகமாகவாவது அந்தக் கருணை ஏற்பட்டதே, போகட்டும்!

விலைவாசி உயர்வுக்குக் கடைக்காரர்கள்தான் காரணம்; வியாபாரிகள் எல்லாருமே அயோக்கியர்கள்; அவர்களைக் கட்டுப்படுத்தி, சர்க்காரே வியாபாரத்தை மேற்கொண்டு விட்டால் நிலைமை கட்டுக்கடங்கிவிடும் என்ற கொள்கையின் விளைவால் உதிப்பவை இந்த நடவடிக்கைகள்.

இந்தக் கருத்துக்களே தவறானவை. தவறான அடிப்படையில் மேற் கொள்ளப்படும் நடவடிக்கைகள் தவறாகவேதான் இருக்கும். அவை மூலம் எதிர் பார்க்கும் பலன்கள் கிடைக்காது. நாம் ஏற்கனவே அனுபவித்துப் பழக்கப்பட்ட, கள்ள மார்க்கெட்டுகள், பற்றாக்குறை, கியூவரிசைகள், கலப்படச் சாமான்கள், லஞ்ச ஊழல்கள் முதலிய எல்லாத் தீமைகளும் மறுபடியும் தலைகாட்ட ஆரம்பிக்கும்.

விலைவாசிகள் உயர்ந்திருப்பதற்கு உண்மைக் காரணங்களை உணர வேண்டும். சில வற்றை மட்டும் இங்கே குறிப்பிடலாம். முதலாவது, உயர்ந்து கொண்டே போகும் வரிகள். இவற்றைத் தவிர்க்க முடியாது என்கிறார் ஸ்ரீ நந்தா. நேர்முக வரிகள் உச்ச நிலையை அடைந்து விட்டதால், மறைமுக வரிகள் விதித்தே தீரவேண்டும் என்கிறார். இதனால் பண் டங்களின் விலை உயரவே செய்யும்; மக்கள்தான் இந்த விலை உயர்வைக் கொடுக்கவேண்டும்.

இரண்டாவது — மின் சக்தி குறைவு, நிலக்கரிப் பற்றாக்குறை, போக்குவரத்துத் தடங்கல்கள், கச்சாப் பொருள்கள் தட்டுப்பாடு, யந்திர பாகங்கள் கிடைக்காதது—இப்படிப் பலவித காரணங்களால் உற்பத்தி பெருகவில்லை. இதை ஒப்புக்கொள்ள வேண்டும். உற்பத்திப் பொருள்களின் அடக்கவிலை தொழிற்சாலை கட்டத்திலேயே, சர்க்கார் நட வடிக்கைகளின் விளைவாக எந்த அளவுக்கு உயர்ந்துள்ளது என்பதை எவரும் பரிசீலனை செய்ததாகத் தெரியவில்லை. இதை ஆராய்ந்தால் பல விஷயங்கள் தெரியக்கூடும்.

மூன்றாவது, பண வீக்கம். உற்பத்தியைக் கணிசமாகப் பெருக்காத பல இனங் களுக்காக நோட்டு அச்சடித்து மிக தாராளமாக வழங்கப்பட்டிருக்கிறது. ஆண்டுதோறும் இது அதிகரித்துக் கொண்டு செல்லுகிறதே தவிர, குறையும் வழியைக் காணோம். வெளிநாடுகளிலிருந்து பெறும் கடன்களிலுங்கூட சில இனங்களுக்காக நம்முடைய புது நோட்டுக்கள் கொடுத்து அந்தத் தொகைகளும் உள்நாட்டில் பரவுகின்றன.

நான்காவது, அந்நிய நாட்டு உதவி, முக்கியமாக உணவு வகைகளில் கணிசமாகக் கிடைத்துக் கொண்டிருப்பதால் நமது உண்மை நிலைமையை நாம் உணரவில்லை. விவசாய உற்பத்தி பெருக இதுவரை செலுத்திய கவனம் போதாது.

இன்னும் பல காரணங்கள் உள்ளன. இந்த உண்மைக் காரணங்களுக்குப் பரிகாரம் தேடுவதில் காங்கிரஸ் சர்க்கார் இன்னமும் தீவிரமாக ஈடுபடவில்லை. உருப்படியான நடவடிக்கை எடுக்க வேண்டுமானால், பகாசுரத் திட்டத்தின் படாடோப இனங்களைக் கைவிட வேண்டும். சர்க்காருடைய அதிகாரத்திலும், மேற்பார்வையிலும்தான் தொழில்கள் நடைபெற வேண்டும் என்ற கொள்கையைக் கைவிட வேண்டும்.


இதையெல்லாம் இப்போதுள்ள காங்கிரஸ் அரசாங்கம் செய்யாது. செய்தால் திட்டம் தவறாகப் போடப்பட்டது என்பதை ஒப்புக் கொள்ள வேண்டும். அப்படி ஒப்புக் கொண்டால் காங்கிரஸ்காரர்களுடைய செல்வாக்கு குறையும். அவர்கள் தொடர்ந்து பதவியில் இருக்க முடியாது. அவர்களைச் சார்ந்து வளர்ந்து கொழுத்து விட்ட ஒரு வர்க்கத்தினரின் பிழைப்புக்கும் பங்கம் ஏற்படும். அதனால்தான் மக்கள் சபை அங்கத்தினர்கள் திட்டத்தில் பல குறைகளை எடுத்துக் காட்டிய பிறகும், திட்டத்தை எப்படியும் நிறைவேற்றியே தீருவோம் என்று ஸ்ரீ நந்தா வீராப்பு பேசியுள்ளார். திட்டத்தை வைத்துக் கொண்டே விலைகளைக் குறைப்பது நடவாத காரியம்.

என்ன சேதி?


மதிய உணவுத் திட்டம்

உச்சவரம்பு யுகம் இது. பள்ளிக்கூடங்களில் ஏழைப் பிள்ளைகளுக்கு மதிய உணவு அளித்து வந்த திட்டத்துக்கும் சென்னை சர்க்கார் உச்சவரம்பு கட்டத் திட்டமிட்டிருக்கிறார்கள். இப்போது உணவு பெற்று வரும் பிள்ளைகளில் மூன்றில் ஒரு பங்கினருக்கு உணவளித்தால் போதும் என்று சொல்கிறார்கள். இப்படித் திடீரென்று உச்சவரம்பு கட்ட நேர்ந்ததற்குக் காரணம் வருஷா வருஷம் இந்த இனத்தின் செலவு அதிகமாகிறதாம். சென்ற வருஷம் ஒன்றரை கோடி ரூபாய் செலவாயிற்றாம். அந்தச் செலவைக் குறைக்கத்தான் உச்ச வரம்பு என்கிறார்கள்! இந்த ஏழை நாட்டில் இப்படி

அரசனை நம்பி....



ஊர் வம்பு



யொரு திட்டம் ஆரம்பித்தால் ஏராளமாகச் செலவாகும் என்பது யாரும் எதிர்பார்த்திருக்கக் கூடியதுதான். ஆனால் அப்போது தேர்தல் நெருங்கிக் கொண்டிருந்தது. ஏழைகளின் வோட்டுக்களைப் பெற இத்திட்டத்தைத் தொடங்கினர். காரியம் நிறைவேறிவிட்டது. மெல்லக் கைகழுவப் பார்க்கிறார்கள்!

அந்நிய உதவி

"வெளிநாட்டு உதவி பெறுவது ஓரளவுக்கு நல்லதுதான்; உலகம் சுருங்கி வரும் இந்நாளில் அவசியமும் கூடத்தான். ஆனால் இந்தியா வெளிநாட்டு உதவியை ரொம்பவும் எதிர்பார்த்து வாழ்கிறது. இப்படி அளவுக்கு மிஞ்சிப் பிற நாடுகளை எதிர்பார்ப்பதை நாம் குறைத்துக் கொள்ள வேண்டும்!"

இம்மாதிரி யாரோ சுதந்திரக் கட்சித் தலைவர் பேசியிருப்பதாக நினைத்தால் ஏமாந்துதான் போவீர்கள். ராஷ்டிரபதி டாக்டர் ராதாகிருஷ்ணன்தான் இம்மாதிரி பேசியிருக்கிறார்.

இதற்கு மேல் நாம் ஒன்றும் சொல்ல வேண்டாம் என்றே கருதுகிறோம்!

சித்தூர் வெற்றி

சித்தூர் தேர்தலில் சுதந்திரக் கட்சித் தலைவர் ஆசாரிய ரங்கா அவர்கள் வெற்றியடைந்தார் என்ற செய்தி வந்ததிலிருந்து தேசமெங்கும் ஒரு புது உற்சாகம் காணப்படுகிறது. நாலு பேர் சந்தித்தால் இதைப் பற்றியே பேசுகிறார்கள். குடிசையில் வாழும் குப்பன் முதல் மாளிகையில் வாழும் மாணிக்கம் வரையில் புதுத் தெம்பு பெற்று விளங்குகிறான்!

இந்த மாபெரும் உற்சாகத்தின் உருவத்தைச் சென்னையில் 29-ம் தேதி செயின்ட் மேரீஸ் மண்டபத்தில் நடைபெற்ற ஆசாரிய ரங்காவின் பாராட்டுக் கூட்டத்தில் நிதரிசனமாகக் காண முடிந்தது. மாலை ஆறு மணிக்குக் கூட்டம் ஆரம்பம் என்று போடப்பட்டிருந்தது. ஐந்து மணிக்கே மண்டபம் நிரம்பி வழியத் தொடங்கியது. மண்டபத்தின் பக்கத்திலிருந்த விசாலமான திறந்த வெளி வராந்தா எங்கிலும் மக்கள் நிரம்பி விட்டனர். அரண்மனைக்காரத் தெருவின் மத்தியில் ஒரு வண்டி போகும் அளவுக்கு இடம் விட்டு விட்டு ஒரு பர்லாங்கு தூரத்துக்கு மக்கள் நெருக்கி நின்று உள்ளே நடக்கும் பேச்சுக்களை ஒலிபெருக்கி மூலம் மிகுந்த ஆர்வத்தோடு கேட்டனர். அன்று ரங்காஜிக்கு விழுந்த மாலைகளைக் கணக்கெண்ணி முடியாது.

அன்றைய கூட்டத்தில் முதலில் பேசியவர் ராஜாஜிதான். ராஜாஜியின் ஒவ்வொரு வார்த்தையையும் கூர்ந்து கேட்டுப் பலத்த ஆரவாரத்தோடு கரகோஷம் செய்தனர் மக்கள்.

"சித்தூரில் காங்கிரசுக்குப் பணபலம் இருந்தது. அதிகார பலம் இருந்தது. இவற்றுக்கு மேலாகத் தமிழ்நாடு, ஆந்திரம், கர்நாடகத்திலிருந்து மந்திரிகள் சென்று தங்கள் சாதியின் பெயரால் காங்கிரஸுக்குப் பலம் தேடினார்கள். இவ்வளவு செய்தும் காங்கிரஸ் தோல்வியுற்றது என்பதில் உங்களுக்கெல்லாம் சந்தோஷம்!" என்றதும் அங்கெழுந்த கரகோஷத்தில் எங்கே மண்டபம் இடிந்து விழுந்து விடுமோ என்று தோன்றியது.

ரங்கா அவர்கள் 1553 வோட்டு வித்தியாசத்தில் ஜெயித்ததைப் பத்திரிகைகள் சொற்ப வோட்டு வித்தியாசத்தில் வெற்றி பெற்றதாகக் குறிப்பிட்டு, சுதந்திரக் கட்சியின் வெற்றியைக் குறைக்கப் பார்த்ததை ராஜாஜி பரிகசித்தார்.

"இமய மலைத்தொடரில் காஞ்சன சிருங்கம் என்ற சிகரம் இருக்கிறது. அதன் உயரம் 27,000 அடி. தவளகிரியின் உயரம் 28000 அடி. எவரெஸ்ட் மலையின் உயரம் 29000 அடி. 'எவரெஸ்ட் மலை ஆயிரம் அடி வித்தியாசத்தில் தானே பெரிய மலையாக இருக்கிறது. இது என்ன மகாமலை!' என்று யாரும் சொல்வதில்லை. உலகில் மிக உயரமான மலை எவரெஸ்ட் என்றுதான் போற்றுகிறார்கள். அதைப் போல் போற்றப்பட வேண்டிய வெற்றி ரங்காவின் வெற்றி!" என்றாரே பார்க்கலாம்.

மறு நாள் லட்சுமிபுரம் இளைஞர் சங்கக் கூட்டத்தில் பேசிய போதும் இதே விஷயத்தைக் குறிப்பிட்டு, "காங்கிரஸ் சிறிய வோட்டு வித்தியாசத்தில் தோற்றதைப் பற்றி மகிழ்கிறேன். எழுபத்தைந்து ஆண்டுகளாக வேரூன்றிய ஒரு ஸ்தாபனம் ஒரேயடியாகத் தோல்வியடைவதை நான் விரும்பவில்லை. எங்கும் காங்கிரஸை விடச் சிறிதளவு அதிக வோட்டுப் பெற்றே சுதந்திரக் கட்சி வெற்றி பெற வேண்டும் என்று விரும்புகிறேன்" என்றார் ராஜாஜி.

அதையொட்டி ஜனநாயக ஆட்சி முறையைப் பற்றி ஓர் அரிய கருத்தை வெளியிட்டார். "ஜனநாயக ஆட்சிமுறை என்பதே சிறிய மெஜாரிட்டியுள்ள ஆட்சிதான். பெரிய மெஜாரிட்டி இருந்தால் அது ஜனநாயகமாக இராது, ஏதேச்சாதிகாரமாக முடியும்!" என்று எடுத்துரைத்தார்.

செயின்ட் மேரீஸ் மண்டபத்திலும், லட்சுமிபுரத்திலும் பேசிய ரங்காஜி, சித்தூர் பொது மக்களின் ஆதரவினாலும், ராஜாஜியின் ஆசியினாலும், கடவுள் அருளினாலும் தாம் வெற்றி பெற்றதாகக் கூறி நன்றி தெரிவித்தார்.

"சித்தூர் தேர்தலில் சுதந்திரக் கட்சிக்கு ஆதரவாக தி. மு. க. வினர் வேலை செய்தனர். அவர்கள் தங்கள் கொடியைப் பறக்க விடாமல் சுதந்திரக் கட்சியின் கொடியோடு வேலை செய்தனர். அவர்களுக்கு நன்றி" என்று சொன்னபோது பலத்த வரவேற்பு இருந்தது.

சித்தூர் தொகுதியில் கம்யூனிஸ்டுகள் தங்கள் கொடியோடு காங்கிரஸ் அபேட்சகருக்காக வேலை செய்தனர். இனி அவர்கள் காங்கிரஸோடேயே ஒன்றிப் போகலாமென அவர்களுக்கு ராஜாஜி யோசனை கூறினார்.



திரு வீரஜின்னு செட்டியாரும் திரு லச்சன்னாவும் காங்கிரஸார் கையாண்ட தகாத முறைகளை எடுத்துக் கூறினர்.

திருச்செங்கோட்டின் கட்ட புலியை உடனடியாகச் சித்தூரில் வீழ்த்திய மகிழ்ச்சியோடு பொது மக்கள் திரும்பினர்.

நாட்டில் ஒரு புலி மட்டும் இல்லை. புலிக் கூட்டமே உலவி வருகிறது. அவற்றை அடுத்த தேர்தலில் வீழ்த்த இப்பொழுது பிடித்தே தயார்ப்படுத்திக் கொள்ளவேண்டும் என்ற எச்சரிக்கையோடு மக்கள் திரும்பிச் சென்றனர்.

தலைநகரில் கலை விழா

ஆண்டுதோறும் சங்கீத நாடக அகாடமியினர் லலித கலை வல்லுநர்களுக்கு ராஷ்டிரபதியைக் கொண்டு விருது அளித்து வருகிறார்களல்லவா? இவ்வருஷம் இந்தத் தேசியக் கலை விழா ஆகஸ்ட் 20-ம் தேதி நடைபெற்றது. விழா இன்னும் சிறப்பாக நடைபெற்றிருக்கலாம் என்பதனை இவ்விதழ் 'வட்ட மேஜை'ப் பகுதியில் வெளியாகியுள்ள 'சுப்புடு'வின் கடிதம் தெரிவிக்கிறது. அடுத்த ஆண்டிலிருந்து இவ்விதக் குறைபாடுகள் நீங்கும் என எதிர்பார்ப்போம்.


வாய்ப்பாட்டு இசைக்காக ஸ்ரீமதி டி. கே. பட்டம்மாள் அவர்களும், வாத்திய இசைக்காக நாகஸ்வர வித்துவான் ஸ்ரீ திருவீழிமிழலை சுப்பிரமணியப்பிள்ளை அவர்களும், நாட்டியத்துக்காக ஸ்ரீமதி முத்து ரத்தினம்பாள் அவர்களும், நடிப்புக்கு ஸ்ரீ டி. கே. ஷண்முகம் அவர்களும் விருது பெற்றனர். இவர்களில் ஸ்ரீமதி முத்துரத்தினம்பாள் தவிர மற்றவர்கள் ராஷ்டிரபதி ராதாகிருஷ்ணன் அவர்களிடமிருந்து நேரிலேயே பாராட்டிதழைப் பெற்றனர்.


சாகித்திய கர்த்தா ஸ்ரீ பாபநாசம் சிவன் அவர்களும் ஹரிகதை வித்துவான் திருவையாறு ஸ்ரீ அன்னுசாமி பாகவதர் அவர்களும் அகாடெமியின் கௌரவ அங்கத்தினர்களாவதற்கான சான்றிதழைப் பெற்றனர். ஸ்ரீ டி. என். விசுவநாதன் அவர்கள் நாடக இலக்கியப் பரிசைப் பெற்றார்.

தலைநகரில் தமிழகத்தின் கலைப் பெருமையை நிலைநிறுத்தி வரும் பல சபையினர் நமது வித்துவான்களின் விஜயத்தை ஒட்டி அவர்களுக்கு வரவேற்பு அளித்தனர். கர்நாடக சங்கீத சபை, தட்சிண பாரத சமாஜம் இவை அமோகமான வரவேற்பு விழா நடத்தின. ஃபைன் ஆர்ட்ஸ் கிளப்பில் ஸ்ரீ அன்னுசாமி பாகவதரின் ஹரிகதைத் தொடர் சிறப்புற நடைபெற்றதையும் குறிப்பிட வேண்டும்.

பாபநாசம் சிவன் அவர்கள் தமது அற்புத கீதங்களால் இன்று இசை உலகுக்குப் புரிந்து வரும் அரும் தொண்டு அளவிட முடியாததாகும். வயசாலும், வித்தையாலும் முதிர்ந்த அப்பெரியாரின் பெருமையை உணர்ந்து ஃபைன் ஆர்ட் கிளப், தட்சிண பாரத சமாஜம், பஜன சமாஜம் ஆகியன அவருக்கு நிதி வழங்கிக் கௌரவித்தது போற்றுதலுக்குரியதாகும்.

சங்கீத நாடக அகாடெமியின் கௌரவ உறுப்பினரான ஸ்ரீ பாபநாசம் சிவன், ஸ்ரீ அன்னுசாமி பாகவதர், ஸ்ரீ உதயசங்கர் ஆகியோரையும், ஸ்ரீமதி பட்டம்மாள், ஸ்ரீ டி. கே. எஸ்., ஸ்ரீ சுப்பிரமணியப் பிள்ளை ஆகியோர் விருது பெறுவதையும் இங்கே காணலாம்.





பரமேசுவரன் முதலான உத்தம உபாசகர்களாகிய ஆசாரியர்கள் அழைத்து வர, காமகோடி பீடத்தில் எழுந்தருளியவளும், உள்ளன யாவும் தன் உரு ஆனவளும், செம்மையின் பூரிப்பாகப் பொலிபவளுமான அன்னை காமாக்ஷிக்கு நமது இதயத்தை அர்ப்பணிப்போமாக!

— ஸ்ரீமூக பஞ்சசதீ.

18. காமகோடி

கயிலையிலிருந்து கிளம்பினார் சங்கரர். நேபாளத்தில் உள்ள நீலகண்ட க்ஷேத்திரத்தை அடைந்தார். பஞ்ச லிங்கங்களைப் பெற்று வந்த பரிவிராஜகருக்கு பஞ்ச முகங்களுடன் அங்கு தரிசனம் அளித்தான் பசுபதி நாதன். பசுபதி நாதன் ஆலயத்தில் ஈசன் அளித்த பஞ்ச லிங்கங்களில் வரலிங்கத்தை ஸ்தாபித்து, மகா திரிபுர சுந்தரியையும் பிரதிஷ்டை செய்தார் ஆசாரியர். துவாதச லிங்க க்ஷேத்திரங்களில் ஒன்றான கேதாரி நாதத்தில் கேதாரீசுவரனை சேவித்த சங்கரர் அங்கு பஞ்ச லிங்கங்களில் மற்றொன்றான முக்திலிங்கத்தை ஸ்தாபித்தார்.

கங்கா சமவெளியை அடைந்து அந்நிய மத வாடையை அறவே களைந்து, வேதாந்தத்தை வேரூன்றினார் ஜகத்குரு. மீண்டும் புனித காசிக்கு விஜயம் செய்தார் தமது சீடர்களுடன். அப்போதுதான் வயோதிக தசையில் உள்ள பண்டிதன் ஒருவன் இலக்கணச் சூத்திரத்தை நெட்டுரு போட்டுக் கொண்டிருப்பதை அவர் கண்டு, 'பஜ கோவிந்தம்' பாடியது. காலன் நெருங்கும் போது கல்வி காப்பாற்றாது; கருணாகரன்தான் காப்பாற்றுவான் என்று உபதேசித்தார் ஆசாரியர். ஆசாரியரின் உபதேசத்தைத் தொடர்ந்து, அப்போதே அவரது அருமைச் சீடர்களும் சில சுலோகங்களைப் பொழிந்தார்கள். அவை யாவும் அடங்கியதே இன்று நாம் காணும் 'பஜகோவிந்தம்'.

மத்திய பாரதத்திலுள்ள பல பதிகளிலும் அத்வைதத்தை அசைக்க முடியாதபடி நிலைக்கச் செய்தபின், கிழக்குக் கடற்கரையை அடைந்தார் சங்கரர். புரி என்றால் நகரம் எனப் பொருள். புரி என்றாலே அது ஜகந்நாத புரியைத்தான் குறிக்கும். சகோதர பாசத்தின் உருவகமாக பலராமனுடனும், சுபத்திரையுடனும் கோவிந்தன் வதியும் பதி அது. உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் ஜகந்நாத அஷ்டகத்தால் அவனைத் துதித்தார் ஆசாரியர். நாட்டின் தெற்கே சிருங்ககிரியிலும், மேற்கே துவாரகையிலும், வடக்கே பதரியிலும் மட ஸ்தாபனம் செய்தது போல் கிழக்குத் திசைக்குரிய மடத்தைப் புரியில் ஸ்தாபித்தார். கோவர்த்தன மடம் என அதற்குப் பெயரிட்டார். விமலா பீடத்தை அங்கு நிறுவி, ஹஸ்தாமலகரை அங்கு முதல் பீடாதிபதியாக நியமித்தார். சில கிரந்தங்கள் பத்மபாதரை நியமித்ததாகக் கூறும். 'அரண்ய' என்ற ஆசிரம நாமம் பெற்றவர்கள் இந்தப் பீடத்து அதிபதிகள்.

பாரத தேசத்தில் ஒரு பகுதி மிகுதியின்றி அத்வைதத்தைப் பரப்பிய ஆசாரிய சங்கரர் மீண்டும் சிருங்ககிரியை அடைந்தார். பரமன் அளித்த லிங்கங்களில் போக லிங்கத்தை அங்கு பிரதிஷ்டை செய்தார். பிறப்பு இறப்பிலிருந்து விடுபடும் அமர நிலைதானே அத்வைதத்தின் இலட்சியம்? அமர நிலையைத் தருவது அமுதம். அமுதத்தைப் பெருக விடுபவன் சந்திரன். அந்த மதியத்தைச் சிரஸில் அணிபவன் ஈசன் என்பதை உணர்த்தும் சந்திர மௌளீசுவரன் என்ற திருநாமத்தை அத்வைத மடம் இரண்டிலுமுள்ள ஸ்படிக லிங்கங்களுக்குச் சூட்டினார் சங்கரர்.

சிருங்ககிரியிலிருந்து புறப்பட்ட ஆசாரியர் தொண்டை மண்டலத்தைச் சேர்ந்த பல பதிகளில் பயணம் செய்தார். திருவொற்றியூரில் திரிபுரசுந்தரி அன்னையின் திரு முன்னர் அம்பாளுக்குரிய ஸ்ரீ சக்கரத்தைப் பிரதிஷ்டை செய்தார். இன்றைய சென்னையைச் சூழ்ந்துள்ள பகுதிகளில் ஆசாரியர் விசேஷ மரியாதையுடன் வரவேற்கப் பட்டிருக்கிறார் என்பது திருவொற்றியூர், பூவிருந்தவல்லி, மாங்காடு முதலிய இடங்களில் அவருக்கு உள்ள சிலாமூர்த்தங்களிலிருந்து வெளியாகிறது.

அவதாரம் எடுத்ததில் எஞ்சி நிற்கும் மகோன்னதமான பணியினை ஆற்றுவதற்காகக் காஞ்சிபுரியை வந்தடைந்தார் ஜகத்குரு. கயிலைவாழ் ஞானவித்து காலடியில் கருணைக் கொழுந்தாகத் தோன்றி, காசியில் மொட்டு விட்டு, காசினியெல்லாம் மலராக விரிந்து ஆத்ம வித்யையின் மணத்தைப் பரப்பி விட்டு, கனியாக முதிர்ந்து காஞ்சியை வந்தடைந்தது.

காஞ்சி! உள்ளத்தில் பக்திப் பயிரைச் செம்மையாக வளர்த்த புண்ணியசாலிகள் ஒவ்வொரு மண்ணிலும் தெய்வ சாந்நித்தியத்தைக் காணும் பிருத்வி க்ஷேத்திரம் அது. ஏழு மோட்ச ஸ்தலங்களில் ஒன்றாக விளங்கும் தலம் அது. பரம்பொருளின் மூன்று முக்கிய மூர்த்திகளான — ரத்தின த்ரயமான — ஏகம்பனும், வரதராஜப் பெருமாளும், காமாக்ஷி மகா திரிபுரசுந்தரியும் குடிகொண்டுள்ள நகரம் அது. பதினெட்டு சக்தி பீடங்களில் தலைசிறந்ததாக மதிக்கப்படுவது காஞ்சி.

பிரபஞ்சத்தின் மையப் பிரதேசம் என்பதாலேயே காஞ்சி என்று பெயர் பெற்ற நகரம் அது. பெரியதொரு மையத்தில் சிறு சூத்தாசியால் தூக்கினாலும் அந்த வட்டம் சம நிலையில்

நிற்பது போல் இந்தக் காஞ்சிபுரியில் மனசை ஒருமுகப் படுத்தித் தியானித்தால் சகல புவனங்களும் தர்மத்தில் நிலை நிற்கும் என்பதற்காகவே காஞ்சிக்கு ஏகினார் பகவத் பாதர். சத்திய விரத க்ஷேத்திரம் எனப் பெயர்பெற்ற காஞ்சி சத்தியத் தத்துவத்தின் தலைநகராக விளங்க வேணுமென அங்கு வந்தார் ஜகத்குரு.

காஞ்சியின் எல்லையிலுள்ள விகவேசுவரர் ஆலயத்தில் தங்கினார் சங்கரர். ஆசாரியரை எதிர்கொண்டழைத்தான் மன்னன் ராஜசேனன்.

தாம் நகருக்குள் பிரவேசிக்கு முன் காஞ்சிபுரத்தின் அமைப்பை அம்பாளின் உருவகமாகவும் உறைவிடமாகவும் போற்றப்படும் ஸ்ரீசக்கர உருவில் மாற்றிச் செப்பம் செய்யுமாறு பணித்தார் பகவத் பாதர். அந்தச் சக்கரத்தின் மையத்துள்ள பிந்துஸ்தானமாகக் காமாட்சி ஆலயம் அமைய வேணுமென்று கூறினார். அவரது ஆக்ஞையைச் சிரசால் வகித்து முடித்துத் தந்தான் மன்னன். 'நகரேஷு காஞ்சி' என்று அந்நகரம் பெயர் பெற்றதற்குக் காரணம் ஆதிசங்கரர்தாம்.

விஷ்ணு காஞ்சியில் வரதனை வழிபட்டார் குரு. பிரமன் யாகம் செய்த போது, நேரிலேயே வந்து ஹவிர்பாகத்தை உண்டு, அந்த ஹவிஸ் மணக்க மணக்கத் திருவாயைத் திறந்து வரமருளிய வரதப்பெருமாளை ஏத்தினார்.

சிவ காஞ்சியில் ஏகாம்ர நாதனைத் தரிசித்தார். ஒரே ஒரு ஒட்டு மாங்கனிதான் அவனது தலவிருட்சத்தில் பழுக்கும். ஞானியரின் தவப் பலன் சிவமும் சக்தியும் ஒட்டிய ஒன்றேயான பழம்பொருளே என்பதை உணர்த்துபவனல்லவா ஏகாம்ரநாதன்?

இவனை மணம் புரிய வந்தவள்தான் அன்னை காமாக்ஷி.

கைலாசத்தில் கங்காதரனின் கண்களை விளையாட்டாகப் பொத்தினாள் கௌரி. சூரிய சந்திரர்களே அவனது நேத்திரங்களாகையால் அப்போது சகல புவனங்களையும் கனந்தகாரம் கவ்விக் கொண்டது. அவ்வளவுதான்! ஈசுவரனுக்குத் தனது அன்பு சக்தியின் மீதே கோபம் பொத்துக் கொண்டு விட்டது. அன்னையை மானுட உலகில் பிறக்குமாறு சபித்து விட்டான். அந்தச் சாபம் நமக்கெல்லாம் அளித்த நல்வரமாயிற்று. தமிழகத்தில், தொண்டைமண்டலத்தில் காட்டுக் குடியில் அரசகுமாரியாக வந்து பிறந்தாள் தேவி. முன் வாசனை மறவாமல் பாலாற்றங்கரையில், அந்த ஆற்றங்கரை மணலையே லிங்கமாகப் பிடித்து வைத்து நெஞ்சு நைந்து போக அநுதினமும் ஆராதித்தாள்; தவமிருந்தாள். வறண்ட பாலாற்றிலும் வெள்ளம் வந்தது; பெரு வெள்ளமாக வந்து அன்னையை அணுகி விட்டது. அப்போது தேவி தான் பிடித்துவைத்த லிங்கத்தை அப்படியே தேகமுறச் சேர்த்துத் தனது இரு கரங்களாலும் அணைத்துக் கொண்டாள் — மரணம் நேர்ந்தாலும், தன் உள்ளத்தால் பதியாக வரித்த பரமனுடைய பூசனையிலேயே அது நேர வேண்டும் என்று. கங்காதரனின் அன்பு வெள்ளம் பெருகியது. பாலாற்று வெள்ளம் அடங்கியது. அன்னையின் முன் ஆவிர்பவித்து அவளை அங்கீகரித்தான் அத்தன்.

ஆஹா! அங்கீகாரம் என்ற பதம்தான் எவ்வளவு அற்புதமாகப் பொருந்துறது! அவளைத் தனது அங்கமாகவே —தனது மேனியின் இடது புறம் முழுதுமாகவே — அல்லவா செய்து கொண்டு விட்டான்!

தமிழ் மண்ணில் பிறந்து, தமிழ் மண்ணை ஈசனாகப் பிடித்துப் பூஜை புரிந்து வந்த அந்தக் குமாரியே காமாக்ஷி. ஈசனைக் குறித்து அவள் தவமிருந்த திருக்கோலமே சிலையாக உறைந்து காமாக்ஷியின் திவ்விய பிம்பமாயிற்று.

அம்பிகையின் தவம் என்றால் அதன் பெருமையைச் சொல்லியும் முடியுமா? தவம் தான் செய்த தவப்பயனாக அவளைச் சென்றடைந்தது. தட்சிணாமூர்த்தி எவ்வாறு தவமியற்றும்போது தன்னுள்ளேயே சதியை அடக்கிக் கொண்டு, சிவமும் சக்தியும் ஒன்றி அத்வைதானந்தனாக இருக்கிறானோ, அவ்வாறே காமாக்ஷியும் தவம் புரிகையில் தனக்குப் பிரிதாக ஈசனைக் கொள்ளாமல், தன்னுள்ளேயே அவனைக் கொண்டு அத்வைத ஸ்வரூபியாகவிளங்கியவள். ஆனால் உலகம் உய்வதற்கும், அநாதியான ஜீவர்கள் தமது கர்ம வினைகளை அநுபவிக்கவும், மோட்ச நிலையை அடைய அவர்கள் ஒரு வாய்ப்புப் பெறவும் வேண்டுமானால் அம்பாளும், ஐயனும் தவத்தை விட்டு உலகின் புறம் தங்கள் பார்வையைத் திருப்ப வேண்டுமல்லவா? இதற்காகவே தான் தேவி சிவத்தைப் புறத்தே ஏகம்பனாகக் கண்டு கடிமணம் புரிந்தது. எனினும் அவள் தவமிருந்ததன் திவ்வியச் சின்னமாகச் சிலை வடிவில் சாந்நித்தியம் அடைந்தாள். நம்முடைய கண்களால் கிரகிக்க வொண்ணாத சௌந்தரியமும் நமது இதயத்தால் தாங்கவொண்ணாத அருட் பெருக்கும் கொண்ட மூர்த்தம் கஞ்சி காமாக்ஷி.

தவங்கலைந்த காமாக்ஷியை இறைவன் அங்கீகரித்தார். ஆனால் தவத்திருந்த காமாக்ஷியோ இறைவனை அங்கீகரித்திருக்கிறாள்! ஆம். அவனைத் தனது நெற்றிக் கண் என்ற அங்கமாகப் பெற்றிருப்பவள் அவள். எவனது கண்களைப் பொத்தியதற்காக சாபம் பெற்றாளோ அவனே அவளது 'கண்ணானாக' வந்து விட்டான்! பிரமனும், திருமாலும் அவளது மற்ற இரு கண்களாயினர். க என்றால் அயனைக் குறிக்கும். ஓம்காரத்தில் அ, ம என்ற அட்சரங்கள் சிவனையும், விஷ்ணுவையும் குறிக்கும். க, ம, அ, மூவரையும் அக்ஷமாகக் கொண்டவளே காமாக்ஷி. அவள் மும்மூர்த்தியரில் சம்ஹாரம் செய்பவனான ருத்திரனின் சதி அல்ல. மும்மூர்த்தியருக்கும் மேலாக, தன்னையன்றி வேறற்றிருந்த பிரம்மத்தை அசைத்து அதனை உலகத் தோற்றத்துக்குக் காரணமான மாயையுடன் சேர்த்து வைத்த எண்ணமே காமாக்ஷி. பின்னர், அந்தத் தோற்ற உலகைப் படைக்கவும், காக்கவும், அழிக்கவும் அவளே பிரம்ம, விஷ்ணு, ருத்திராதியரையும் பெற்றெடுத்தாள். குழந்தைகளை 'என் கண்ணே' என்று நாம் கொஞ்சுவது அவள் விஷயத்தில் முற்றிலும் உண்மையாகவே ஆயிற்று.

பண்டு சிவனிடத்து உதித்து இவ்வண்டம்
முழுவதையும் உதவும் பரிவினாலே
கண்ட துண்டக் கனற்பால விழிக்கால
உருத்திரனைத் தரணி யாவும்
உண்ட கொண்டல் நிறத்தானை முண்டகனை
விழிகளினால் உதவும் பான்மை
கண்டதனால் அபிதானம் காமாட்சி எனும்
உமையைக் கருதி வாழ்வாம்

என்று பாடலும் உள்ளதே!

தனது கடாட்சத்தால் அடியார் இச்சைகளை யெல்லாம் நிறைவேற்றுவதாலும் அவள் காமாக்ஷி.

அத்தகைய காமாக்ஷி அன்னையின் திருக் கோவிலை வந்தடைந்தார் ஆசாரிய சங்கரர். நகரத்துக்கு நடு நாயகமாக, உத்ஸவாதிகளில் வரதனும் ஏகம்பனும் தன்னை வலம் வருமாறு அமர்ந்திருக்கும் லோக நாயகியின் சந்நிதியை அடைந்தார். காமாக்ஷியின் உக்கிரத்தை எண்ணி அஞ்சியபடியேதான் மக்கள் ஆசாரியரைப் பின் தொடர்ந்தனர். உக்கிரம் என்றால் கோபமா அது? தவம் காந்தும் ஞான ஜ்வாலையைக் கண்டு தான் மக்கள் உக்கிரம் என அஞ்சினர். ஞானகரனாகிய ஆசாரியரோ அவளைக் கருணாமூர்த்தியாகவே கண்டு கண்ணீர் மல்கிக் கசிந்தார்.

ஆசாரியர் தேவியின் திருமூர்த்தத்தின் முன்னர் தமது பொற்கரத்தாலேயே ஸ்ரீ சக்கரத்தைப் பொறித்து அம்பாளின் அபரிமிதமான ஞானக்கினியை அதில் அடக்கி சமனம் செய்தார். அப்புறம்... தேவியின் சௌம்யத்துக்குக் கேட்கவும் வேண்டுமா என்ன? மிகமிக மிருதுவான, அதி நளினமான, பரம கோமளமான, லலிதமான பரம்பொருளாகக் குளிரக் குளிரத் தரிசனம் தந்தாள் அன்னை. தன்னையன்றி இரண்டாவது பொருளற்ற, அகண்டமான, சத்திய வஸ்துவுக்குப் பேர் லலிதா என்கிறது ஓர் உபநிஷதம். அந்த லலிதையாகக் காட்சி தந்தாள் காமாக்ஷி. மென்மையும், இனிமையும், அழகும் முற்றி முறுகியதால் மட்டும் அவள் லலிதையல்ல. குழந்தைகளைத் தாய் கொஞ்சியும், கெஞ்சியும் நல்வழிப் படுத்துவது போல் நம்மிடமெல்லாம் லாலனம் செய்வதாலும் அவள் லலிதை.

நமது உள்ளத்தின் வேகத்தை—முக்கியமாக, கோபத்தை — அடக்க ஒரு கையில் அங்குசம் தாங்கியிருக்கிறாள் அவள். நம்முடைய உலக பாசத்தையெல்லாம் நீக்கித் தன்னோடு நம்மைப் பிணைத்துக் கொள்ளப் பாசமும் தாங்கியிருக்கிறாள். கரும்பினாலான கோதண்டத்தால் நமது மனசை இலக்காகக் கொண்டு எய்து வசப்படுத்திக் கொள்கிறாள். அந்த வில்லில் தொடுக்கும் ஐந்து மலர் அம்புகளால் நமது ஐம்புலன்களையும் செப்பம் செய்கிறாள். கரும்பு வில்லாவது, மலர் பாணமாவது? இதென்ன இவ்வளவு அஹிம்சையான ஆயுதமும் உண்டா என்று எண்ணத் தோன்றும். ஆனால் அதைத் தரிப்பவளின் இதயமோ அந்தக் கரும்பைவிட இனியதாயிற்றே! அந்த மலரைவிட மென்மை வாய்ந்ததாயிற்றே!

அவள் தபஸ்வி; கையில் தண்டம்-கோதண்டம்; இடையில் சிவப்பு வஸ்திரம். ஆசாரியருக்கும் அவளுக்கும் பேதமே தெரியாமல் பக்த கோடிகள் புளகிதமடைந்தனர். காஞ்சியில் வாழ்ந்த அந்த பக்தர்களைப் போல் பாக்கிய சாலிகளும் உண்டா?

காஞ்சி மக்கள் பரம பாக்கிய சாலிகள்தாம்! இன்னும் பல அற்புதமான கோலாகலக் காட்சிகளைக் காணவும் அவர்கள் கொடுத்து வைத்திருந்தார்கள்.

அத்வைதத்தைச்சாராதவர்களையெல்லாம் இறுதியாக ஒன்றுகூட்டி வாதிட்டுச் சந்தேகமற்ற சத்திய சித்தாந்தத்தைப் பாரதம் முழுதும் ஏற்கச் செய்ய வேண்



டும் என்று எண்ணம் கொண்டார் சங்கரர். இதற்காகவே காஞ்சிபுரியில் ஒரு சர்வக்ஞ பீடத்தை ஸ்தாபித்தார். காச்மீரத்தில் பிராசீனமாக சர்வக்ஞ பீடம் இருந்து வந்ததாகவும் அதில் ஆசாரியர் ஆரோகணித்ததாகவும் முன்பு கண்டோம். வட மதுரை தென் மதுரை என்பதுபோல தட்சிண காச்மீரம் என்று பெயர் பெற்றது காஞ்சிபுரம். அங்கு சங்கரர் தாமே ஒரு சர்வக்ஞ பீடத்தை நிர்மாணித்தார்.

காஞ்சியில் ஜைன, புத்த மதத்தினரும் இருந்தனர். இன்னும் நாட்டின் மற்றப் பகுதிகளிலும் சில பரமத பண்டிதர்கள் இருந்து வந்தனர். இவர்கள்யாவரும் ஆசாரியருடன் வாதிட்டனர். தாமிரவருணிக் கரையிலிருந்து வந்திருந்த பலரில் ஏழு வயசுச் சிறுவன் ஒருவன் இருந்தான். அவன் மூன்று நாட்கள் அவருடன் அயராது வாதிட்டான். இறுதியில் ஆசாரியரே வென்றார். அந்தக் குழந்தையை சர்வக்ஞரான தமது ஆத்மாவாகக் கருதி அவனுக்கு சர்வக்ஞாத்மன் என்றே நாமமிட்டுத் துறவியாக்கினார்.

சங்கரரது பெருமையை உலகுக்கு அறிவிப்பதற்காக சரஸ்வதி தேவியே பிரத்தியட்சமாகத் தோன்றி அவருடன் வாதம் புரிந்து தோல்வியுற்றாள். சரஸ்வதி என்ற விருதையும் அவருக்கு அளித்துச் சென்றாள்.

சர்வக்ஞ பீடமேறி ஞானச் சிம்மமென சிம்மாசனத்தில் ஒளிர்ந்தார் சங்கரர். கனிவும் அதில் பிறந்த குழைவுமே இதுகாறும் தம் தேகம் முழுவதும் துலங்க அன்னையாகக் காட்சி தந்தவர்—எளிமையின் இருப்பிடமாகவும் பணிவின் பிறப்பிடமாகவுமே காட்சி தந்தவர்—இன்று வித்யையின் காம்பீரியம் உடலில் பூரணமாகப் பிரகாசிக்க மேரு மலை போல உன்னதமாக சர்வக்ஞ பீடத்தில் அமர்ந்திருந்தார். மக்கள் யாவரும்,

ஜய ஜய சங்கர
ஹர ஹர சங்கர

என்று வான் முகடு முட்ட ஆர்ப்பரித்துப் போற்றிப் பணிந்தனர். அந்த ஒலியைச் செவியுற்றே வந்தது போல வானவரும் ஆகாயத்தில் கூடினர்; மலர் மாரி பொழிந்தனர்; மகா வித்துவான்களும் மறையோரும் முனிவரும் வாழ்த்துக் கூறினர்; மன்னாதி மன்னர்களும் துறவி வேந்தரின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினர்.

சிங்காசனாதிபர்களாய்...
என்றைக்கு மழியாத சிவராஜயோகமாய்
இந்த்ராதி தேவர்களெலாம்
விஜய ஜயஜய வென்ன வாசி சொலவே
கொலு
இருக்கு நம் பெருமை எளிதோ?

என்று நாம் எல்லோரும் எண்ணி எண்ணி அஞ்சலி செலுத்திக் களிப்

புறவே, தம் வாழ்விலே ஒரு நாளாகக் கல்வியின் பெருமை புலப்படுமாறு ஜகஜ்ஜோதியாகத் துலங்கினர் சங்கரர்.

அந்தக் காட்சியையும் கண்டவர்களல்லவா அன்று வாழ்ந்த காஞ்சிமக்கள்?

எல்லாம் அறிந்த பண்டிதர்களை வெல்வதற்காக ஏற்பட்டது சர்வக்ஞ பீடம். ஏதும் அறியாதவர்களையும் அருளினால் வென்று மெய்ப்பொருளில் சேர்க்கும் மற்றொரு பீடத்தையும் காஞ்சியிலேயே ஆசாரியர் ஸ்தாபித்தார். இதுவே அவரது அவதாரத்தில் புரிந்த அரும் பணிகளுக்கெல்லாம் அணியான, சிரோமணியான, திருப்பணியாகும். இதற்காகவே காஞ்சி வந்தடைந்தான் கயிலைநாதன். அன்புக்கும் ஆசாரத்துக்கும் உறைவிடமான அந்த அமுத பீடத்தைத் தான் நாம் காமகோடி என்று பெயரிட்டு அழைத்துப் புனிதம் பெறுகிறோம்.

ஐந்து என்ற இலக்கத்துக்கு விசேஷம் அதிகம். ஆக்கல், காத்தல், அழித்தல், இவை நடைபெறும் மாயா உலகத் தோற்றத்தால் பரம்பொருளை மறைத்தல், அந்த மறைப்பை நீக்கி ஜீவனையும் பிரம்மமாக்கி அருளுதல் ஆக ஆண்டவன் ஐந்தொழில் புரிகிறான். பரமேசுவரனுக்கு ஐந்து முகங்கள். அதைக் குறிக்கவே பஞ்சாட்சரன் ஆசாரியருக்கு ஐந்து லிங்கங்கள் அருளியதும். ஆகாசம், தீ, வாயு, நீர், மண் என்று பூதங்கள் ஐந்து. நமது கர்மப் புலன்களும், ஞானப்புலன்களும் ஐந்தைந்தே. அன்ன, பிராண, மன, விஞ்ஞான, பிரம்ம மயமெனக் கோசங்கள் ஐந்து. பிராணன்கள் ஐந்து. ஆதித்தன், அம்பிகை, விஷ்ணு, கணநாதன், மகேசுவரன் ஆகிய ஐந்து மூர்த்தியரின் ஆராதனையை அத்வைதிகளுக்கு விதித்தார் ஆசாரியர். அம்பாளுக்குப் பஞ்சமி என்றே ஒரு திருப்பெயர் கூறுகிறது லலிதா சகஸ்ரநாமம். அத்வைதத்துக்கு அம்பாள் மிகவும் முக்கியம். ஒன்றாக இருந்ததைப் பலவாகக் காட்டுபவள் அவள்தான். அந்தப் பேத புத்தியைப் போக்கி அத்வைத நிலையை அருளும் பிரம்ம வித்யையும் அவளேதான். எனவே பஞ்சமியில் அவதரித்த ஆசாரிய சங்கரர் சாக்த ஸ்தலங்களில் தலைசிறந்த காஞ்சியில் அம்பாளின் உருவகமாகத் தமது ஐந்தாவது பீடமான காமகோடி பீடத்தை ஸ்தாபித்தார். நான்கு திக்குகளிலும் உள்ள பீடங்களுக்கு மூல ஸ்தானம் போல நிறுவிய இந்தப் பாவன பீடத்தில் தாமே ஆரோகணித்தார்.

காமகோடி! ஆசைகள் யாவும் முடியுமிடம் அது! சிந்தனையற்றிருந்த பரப்பிரம்மத்தின் மூல சங்கல்பமான காமாக்ஷியின் திருநாமம் அது. அவளது சாந்நித்தியம் பொங்கிப் பரவிப் பொலிய, ''வேதாந்தமாவது வேட்கையொழிந்திடம்'' என்ற திருமந்திரத்துக்கு இலக்கணமாக அமைந்த திருப்பீடம் காமகோடி பீடம். 'காமங்கள் அழியும் போதே சாகும் இயல்புள்ள மனிதன் அமரனாகிறான்; பரம்பொருளை அநுபவிக்கிறான். இதயத்திலுள்ள பாச முடிச்சுக்கள் அவிழும் போது தான் மனிதன் அமுதமாகிறான்' என்று கூடி 'இதுவே உபதேசத்தின் முடிவு' என்று மறைமுடி கூறுகிறதல்லவா? அந்த முடிவான தத்துவத்தின் விளக்கமே காமகோடி பீடம்.

அக்ஷரங்களின் பிறப்பிடமான காமாக்ஷியன்னை வாக்தேவி எனப் போற்றப்படுபவள். எனவே காஞ்சிபுரத்தில் நிறுவிய மடத்துக்கு சாரதா மடம் என்று திருநாமமிட்டார் ஆசாரியர். சாரதா மடத்தில் காஞ்சி காமகோடி பீடத்தில், ஜகத்குரு ஸ்ரீ பரமஹம்ஸ பரிவிராஜகாசாரிய சங்கராசாரிய 'இந்திர சரஸ்வதி'யாக எழுந்தருளி ஞானச் செங்கோல் ஓச்சினர்.

'இந்திர சரஸ்வதி' என்பதே காமகோடி பீடாதிபதிகளின் சந்நியாச நாமமாகும். சரஸ்வதி தனது விருதை அளித்ததால் 'சரஸ்வதி'. 'இந்திர' என்ற பெயர் எப்படி வந்தது?

காஞ்சியில் ஒரு சமயம் சுரேசுவராசாரியர் உடல் நலம் குன்றியிருந்தார். அப்போது சங்கரர் அசுவினிதேவதைகளைக் கொண்டு அவரைக் குணப்படுத்தினர்.



அசுவினி தேவர்கள் இந்திரனின் ஆஸ்தான வைத்தியர்கள். அரசர்களின் இறுமாப்பு அடிக்கடி தலைக்கேறி விடுவதுண்டல்லவா? தன் உத்தரவைக் கேளாது பணி புரியப் போனதற்காக அசுவினி தேவர் மீது வஜ்ராயுதத்தைப் பிரயோகித்தான் தேவராஜன். ஆசாரியர் தமது தவ வலிமையால் அது அவர்களை நெருங்காதவாறு செய்தார். வஜ்ராயுதத்தின் தோல்வி தனது தோல்வியே என்று கருதிய தேவராஜன் தன் விருதாகிய 'இந்திரன்' என்பதை சங்கரருக்கு அளித்துச் சென்றான்.

இந்த உலகையெல்லாம் உள்ளபடி கண்ட பரம ஞானியாகிய 'இதம் த்ரன்' தான் இந்திரன் என்கிறது உபநிஷதம். வேத வாக்கியங்கள் பலவற்றில் இந்திரன் என்பது பரப்பிரம்மத்தையே குறிக்கிறது. இப்படிப் பார்த்தாலும் பரமாசாரியர்களுக்கு இந்திரப் பட்டம் பொருந்தியது தானே?

காமகோடி பீடத்தில் யோக சந்திர மௌளீசுவர லிங்கத்தைப் பிரதிஷ்டை செய்தார் ஆசாரியர். யோகம் என்றால் 'சேர்க்கை' எனப் பொருள்; பரம் பொருளுடன் ஜீவனைச் சேர்ப்பது யோக லிங்கம். யோகீசுவரரான ஆசாரியர் யோக சந்திர மௌளீசனையும், மேரு பிரஸ்தாரமாக அமைந்த ஸ்ரீ சக்கரத்தில் இலங்கும் மகா திரிபுர சுந்தரியையும், காமாக்ஷியையும் ஆராதித்துக் கொண்டு காஞ்சியில் ஆனந்த கிரணங்களைப் பரப்பிக் கொண்டிருந்தார்.

முப்பிறவியில் புண்ணியம் செய்தவர்களெல்லாம் பகவத்பாதர் புரிந்த அப்பூஜையைக் கண்டு மறு பிறப்பழிந்தனர். பூஜிக்கப்படும் பரமகுரு பக்தியுடன் பூஜிப்பதையும், யோகத்துக்கு யோகம் அடித்ததன் பலனைப் பிறந்த அந்த மகனீயர் யோகத்தி லிருப்பதையும் கண்டார்கள். பூஜையும் தவமும் போக மீதிப் பொழுதில் மக்களுடன் அந்த அருள் வடிவம் உரையாடும்; உபந்நியாசம் புரியும்; அவர்களைத் தேடிச் சென்று உய்விக்கும். பேச்சில் பரிவு; பார்வையில் கனிவு; செயல் எல்லாவற்றிலும் தாய்மையின் குழைவு. இருந்தாலும் அது பேசாத அத்விதிய வஸ்து; மக்கள் மனத்தையெல்லாம் ஊடுருவிப் பார்க்கும் அப்பார்வை அவர்கள் உள்ளத்தையும் தாண்டி எங்கும் குடிகொண்டுள்ள ஒரே மெய்ப் பொருளையே பாராமல் பார்க்கும். அந்தப் புண்ணிய மூர்த்திக்குச் செயலும் இடையாது. தேகம் தரித்திருப்பது போல் இருந்தாலும் உண்மையில் அது பக்தர்கள் எதையோ ஒன்றைப் பிடிப்பாகக் கொண்டு மேன்மையுற வேண்டுமே என்பதற்காக ஏற்பட்ட ஒரு தோற்றம்தான். இந்த திவ்விய தேகத்தை தேவி ஆராதனையில் தரிசித்த காஞ்சி மக்கள் பாக்கியசாலிகள்தாமே!

நாற்புறமும் விழுது விட்டு நெடிதோங்கி வளர்ந்த ஆல விருட்சம்போல நாடெங்கிலும் மடங்கள் ஸ்தாபித்து அவற்றில் உத்தம சிஷ்யர்களை நியமித்து விட்டு நடுநாயகமாகக் காஞ்சி பீடத்தில் திகழ்ந்தார் சங்கரர். அந்தச் சீடர்களும் அடிக்கடி ஆசாரியரை வந்து தரிசித்துச் சென்றனர். நாளுக்குநாள் வளர்ந்து வரும் அவரது அன்புப் பிரவாகத்தில் சீடர்களுக்கிடையே இருந்த சிறு பூசல்களும், தாபங்களும் மறைந்தன. அவர்கள் பரஸ்பரம் அன்பால் இணைந்தனர். சுரேசுவரரின் பெருமையையும் மற்றவர்கள் உணர்ந்தனர். நைஷ்கர்ம்ய சித்தி என்ற நூலை எழுதி அவர் தமது பரிபூரணமான அத்வைத ஈடுபாட்டை வெளிப் படுத்தியதோடு ஆசாரியரின் உபநிஷத பாஷ்யங்களில் சிலவற்றுக்கும் விருத்தியுரை செய்தார். தக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்திரத்துக்கும் உரை எழுதியருளினார்.

ஆசாரியரின் ஞானத் திருத்தொண்டு பூர்த்தியாயிற்று.

பரமகுருவின் பக்தித் தொண்டினையும் நிறைவேற்றி வைத்தனர் சீடர்கள். சகல தேவதைகளின் ஆராதனை முறையையும் விவரிக்கும் ஆசாரியரின் 'ப்ரபஞ்ச ஸாரம்' என்ற நூலுக்கு விளக்கம் எழுதினார் பத்மபாதர். அறுசமய நீதியைப் பரப்பினர் ஆறு சிஷ்ய ரத்தினங்கள். காணபத்தியம் என்ற விநாயக வழிபாட்டு முறையை கிரிஜா குமாரரும், கௌமாரம் என்ற முருக மதத்தை வடுகநாதரும் பரப்பினர். இவர்கள் பிரம்மசாரிகள். சைவத்தைப் பரமத காலானலரும், வைஷ்ணவத்தை லக்ஷ்மணரும், ஸௌரம் என்ற சூரிய சமயத்தை திவாகரரும், சாக்தத்தைத் திரிபுரா குமாரரும் நிலைநாட்டினர். தங்களது பணி சிறப்புற நிறைவடைந்ததைக் காஞ்சிக்கு வந்து ஆசாரியரிடத்தும் அறிவித்தனர். காஞ்சி காமாக்ஷி ஆலயத்திலுள்ள ஆசாரிய பிம்பத்தின் அடியே இந்த அறுவர் உருவையும் இன்றும் காணலாம்.

இவ்வாறு பாரத வர்ஷத்தில் சநாதன தர்மத்தை ஆழ வேரூன்றியதுடன் அவதார காரியமும் முழுமை பெற்று விட்டது.

'காரியமெல்லாம் ஆயிற்று! கயிலையில் கல்பகாலமாக அமர்ந்தே இருந்ததற்கு ஈடாக அல்லும் பகலும் அனவரத

மூம் அடிகள் நோக அலைந்து அத்வைதத்தை நாடெங்கும் பரப்பியாயிற்று. மோன மூர்த்தியாக இருந்ததற்கெல்லாம் சேர்த்து வைத்து உபந்நியாஸங்களையும், துதிகளையும், வாதங்களையும் பொழிந்து தள்ளியாயிற்று. யுக யுகமாகக் காரியமற்று மோன முத்திரை தாங்கி நின்ற கையால் மலை மலையாக நூல்களை எழுதித் தள்ளியாயிற்று; மலை மலையாக மலர்களை எடுத்துத் தெய்வத் திரு உருவங்களுக்குப் பூசனையும் புரிந்தாயிற்று. இனி...?' இவ்வாறு ஓடியது ஆசாரியரின் எண்ணம்.

அன்று காஞ்சியில் வாழ்ந்தோர் பாக்கியசாலிகள் என்றோம். காஞ்சி முழுதும் ஆனந்த கிரணம் பரவிற்று என்றோம். ஆனால் ஆசாரியருக்கு முப்பத்திரண்டாம் பிராயம் நிரம்பிய நாளிலிருந்து அம்மக்களை இனம் தெரியாத ஒரு சோகம் பற்றிக் கொண்டது. எல்லையற்ற அமைதியுடன் எல்லாச் செயல்களையும் குறைத்துக் கொண்டே வந்த ஆசாரியரின் திரு உள்ளக் கருத்து அவர்களுக்கு ஒருவாறு ஊகமாகப் புரிந்தது. கருணையால் சிவந்த கண்களையுடைய ரக்தாக்ஷியாகிய காமாக்ஷியின் திருத்தலத்தில் வாழ்ந்தோருக்கு அந்த ரக்தாக்ஷி ஆண்டில் அடிக்கடி கண் கலங்கிச் சிவந்தது.

ஊருக்குப் புறப்படத் தயாராவது போல் ஆசாரியர் சீடர்களையெல்லாம் வரவழைத்து, அவர்களது காரியங்களை அறிவதும், அவர்களுக்கு உபதேசித்தனுப்புவதும் அவர்களுக்கு ஐயங்களை எழுப்பின.

சுரேசுவரரைக் காமகோடி பீடாதிபதிகளாக அவர் நியமித்தார். சுரேசுவரர் இன்று எல்லாச் சீடர்களின் அன்பையும் பெற்றுவிட்டாரெனினும் பழைய பேச்சுக்கள் மீண்டும் கிளம்ப இடம் தரலாகாது என்று கருதினார் சங்கரர். எனவே சந்திர மௌளீசனையும், திரிபுரசுந்தரியையும் ஆராதிக்க சர்வாக்ஞாத்மரை நியமித்தார். கடவுளரும் காணத்தக்க காட்சியாகப் பூஜை புரிந்து வந்த புண்ணியர் அந்த வழிபாட்டையும் நிறுத்தியபோது பொது மக்களின் வேதனை வலுத்தது.

வைகாசி மாசம். சுக்ல பட்ச ஏகாதசி தினம். அடியார்களையெல்லாம் கூட்டி வைத்து உபந்நியசித்தார் ஆசாரியர். மக்களின் கடமை இன்னின்ன என்பதை ரத்தினச் சுருக்கமாக உபதேச பஞ்சகம் என்ற ஐந்து சுலோகங்களில் எடுத்தியம்பினார்.

என்றுமே பரம்பொருளிடம் பதிந்த அகம்தான் எனினும் அன்று புறத்திலும் பிற பொருளைப் பிறபொருளாக பாவிக்க முடியாமல் பரம்பொருளாகவே கண்டார் பரமகுரு. வாய் பேசினாலும் ஞான வெளியாகிய சிதம்பரத்தில்தான் அவரது உள்ளம் உலவிக் கொண்டிருந்தது. பிரபஞ்சத்துக்குக் காஞ்சி மைய ஸ்தானமென்றால் சிற்றம்பலம் இதய ஸ்தானமாகும். பஞ்ச லிங்கத்தில் எஞ்சியிருந்த மோக்ஷ லிங்கத்தை அந்தத் திருத்தலத்துக்கு அனுப்பி வைத்தார் அவர். நிர்க்குணமான ரகசியத்தையும், சகுணமான சபாபதியையும் இணைக்கும் அந்த லிங்கம் 'புவனத்ரய சுந்தரம்' என்று மார்க்கண்டேய புராணத்தில் கூறப்படுகிறது. 'அழகிய திருச்சிற்றம்பலம் உடையார்' என்று அழகிய தமிழில் பெயர் பெற்று இன்று ஆறு கால பூஜையும் பெறுவது அந்த ஸ்படிகலிங்கம்தான்.

பரம்பொருள் பில ஆகாச வடிவில் உருவற்றும், காமாக்ஷி எனும் சிலையில் உருவெடுத்தும் விளங்கும் காஞ்சியில் அருஉருவான ஸ்ரீ சக்கரத்தைப் பிரதிஷ்டித்த ஆசாரியரே தில்லையிலும் அரு உருவான லிங்கத்தை ஸ்தாபிக்கச் செய்தது விசேஷமாகும்.

யாவரும் மௌனமாகப் பின் தொடர, தமது மெல்லடி பெயர்த்து சாந்த நடையிட்டு காமாக்ஷி அன்னையின் சந்நிதியை அடைந்தார் சங்கரர்.

சந்நிதிக்குள் கண்டறியாத காட்சியெல்லாம், காணாத காட்சியெல்லாம் கண்டார் குருபரன். அங்கே அமிருதக் கடல் அலை வீசிற்று. அதற்குள் மணித்திவு மின்னியது. கற்பக விருட்சங்கள் கிளை தாழ்த்திக் குளுமை பொழிந்தன. கடம்ப மலர்கள் மணம் சொரிந்தன. அந்த வனத்துக்குள் மகோன்னதமான கோபுரம் கொண்ட அழகிய மதில் சுவர்கள் தெரிந்தன. உள்ளே கமல வனம். அதற்குள் மணித் தோரணமும், சுவர்ணக் கொடுமுடியும் அமைந்த மாளிகையில் திவ்வியமான ஸ்ரீ சக்கரம்பொலிந்தது. ஐந்தொழில் புரியும் பிரமனும், திருமாலும், ருத்திரனும், சிவனும், சதாசிவனும் நான்கு கால்களாகவும், மஞ்சமாகவும் அமைந்த பீடம் ஸ்ரீ சக்கரத்தில் ஒளிவிட்டது. அதில் சாந்த ஸ்வரூபனாகத் திகழ்ந்தான் காமேசுவரன். அவனது இடது தொடைமீது, உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் திவ்ய தரிசனம் தருகிறாள் மணிவிளக்கான காமேசுவரி—காமாக்ஷி.

இத்தனை அற்புதக் காட்சியும் காணக் காண சங்கரரின் மதுர கண்டத்திலிருந்து தேன் வாக்கு பெருகிப் பாய்ந்தது. திரிபுர சுந்தரி வேத பாதஸ்தவம் என்ற அற்புதத் தோத்திரமாக அது வடிவெடுத்தது. அதில் ஒவ்வொரு சுலோகத்தின் இறுதி அடியும் வேத வாக்கிய-

மாகும். வேத முடியே தேவியின் அடியைக் காண முடியாமல் திரும்பிற்று என்பார்கள். ஆசாரியரோ வேத பாதத்தாலேயே அவளது சிரகவரை தரிசனம் செய்து வைக்கிறார்.

பேதமெல்லாம் நீங்கக் கண்ட சங்கரர் காமேசுவரனும் காமேசுவரியிலேயே ஐக்கியமுறுவதைக் கண்டார். அவளே அத்வைத ரூபிணி, பிரம்ம வித்யை, இதய குகையில் துலங்கும் சின்மயமான ஏக வஸ்து என்றெல்லாம் போற்றினார்.

சிறிது சிறிதாக அந்த ஏக வஸ்துவில் கசிந்து, கனிந்து, கரைந்து, கலந்து போகவும் தொடங்கினார்.

ஒலி அமுதத்துடன், ஒளி அமுதமும் சங்கரரின் திரு உருவிலிருந்து பெருக ஆரம்பித்தது. அந்த ஒளி வெள்ளத்தில் அவரது திருமேனியும் மெல்ல மெல்லக் கரையலாயிற்று. ''ஸ்ரீ சக்கரத்தோடும், தேவியின் ஆத்மாவுடனும் ஐக்கியம் ஏற்படட்டும். இதுவே உபதேசங்களின் முடிவான பயன்'' என்று ஆனந்த நாதம் பரப்பிக் கொண்டு அந்த ஒளிவெள்ளம் அடர்ந்து இறுதி கர்ப்பக் கிருகத்தில் பிரவேசித்தது. ஸ்ரீ சக்கரத்தையும் கடந்தது. இந்தக் கருவறை மட்டுமின்றி பிரபஞ்சத்தின் இதய அறைக்குள், சிற்றம்பலத்தில் சுடர் விடும் சிவானந்தத்துக்குள்ளும் பிரவேசித்தது.

''மனக செல்லுமிடமெல்லாம் அம்பிகே, உன் ஸ்வரூபம் நிற்க வேணும். சிரக வணங்குமிடமெல்லாம், தாயே, உன் தாளிணைகள் துலங்க வேணும்'' என்ற தேன் வாக்கு வெளிப்பட்டு பிராகாரத்தில் அமுதத் துளிகளாகத் தெறித்து எதிரொலித்தது. அதே சமயத்தில் சங்கர ஜோதியும் காமாக்ஷியின் வடிவத்தில் இரண்டற ஐக்கியமாயிற்று.



வாழ்நாள் எல்லாம் அத்வைதத்தைப் போதித்த குருபிரான் வாழ்வை முடிக்கும் போதும் சிவ—சக்தி அத்வைதத்தை நிலைநிறுத்திவிட்டார். சக்தியை உள்ளடக்கிய தென்முகத் தெய்வத்திலிருந்து உதித்தவர் சிவத்தை உள்ளடக்கிய காமகோடியில் மறைந்தார்.

எங்கு மறைந்தார் அவர்?

உடலில் இருக்கும்போதே முக்தி நிலையிலிருந்த அந்த மகானின் புனித சரீரம் எங்கு மறைந்தது?

இந்த நாடெங்கிலும் சஞ்சரித்து பக்தியாலும் ஞானத்தாலும் தேசிய ஐக்கியத்தை ஸ்திரமாக நாட்டிய தெய்வம் எங்கே?

இந்தத் தேசத்தின் புழுதியெல்லாம் படிந்த அந்தப் பொன்னுடல் எங்கே?

பாரத புண்ணிய பூமியிலுள்ள தீர்த்தங்களிலெல்லாம் திளைத்த திருமேனி எங்கே?

அண்டியவர்களுக்கெல்லாம், அஞ்சியவர்களுக்கெல்லாம் அபயம் அளித்த அழகுக்கரம் எங்கே?

கருணைப் பிரவாகத்தைக் குறைவறப் பொழிய விட்ட கமலக் கண்கள் எங்கே?

நொந்து வந்த நெஞ்சங்களின் நோக்காட்டை ஆற்றி அருள் வாக்கு கூறிய திரு முகம் எங்கே?

கற்பூரம் எரிந்த பின் சாம்பல் நிற்பதில்லையல்லவா? அதே போல உடலையும் கரைந்து இவ்வுலகிலிருந்து மறைந்து விட்டார் சங்கரர்.

சங்கரர் மறைந்துதான் விட்டாரா?
அவரால் எப்படி மறைய முடியும்?
அமுதத்துக்கு ஏது அழிவு?
அறிவுக்கு ஏது முடிவு?
சிவம் சாசுவதமானது அல்லவா?
தியாக பூரணத்துக்குத் தேய்வு என்பதும் உண்டா?
அன்புக்குக்கூட மரணம் உண்டா என்ன?


* * *

அருளோடு இணைந்த அறிவு இலங்குமிடங்களிலெல்லாம் ஆசாரிய பகவத்பாதர் உயிர் வாழ்கிறார்.

கலி மலிந்த இன்றும் ஞானத்தோடு பிணைந்த அந்தக் கருணைப் பிரவாகம் வற்றி விடவில்லை. காஞ்சி காமகோடி பரமாசாரியர்களாகத் திருவுருவு தாங்கி அன்போடு இணைந்த அறிவு ஒளிர்கிறது; அத்வைதம் உலவுகிறது; அம்பிகை உரையாடுகிறாள்; அம்பிகையை உபாசித்து, அத்வைதத்தை உபதேசித்த ஆதி ஆசாரியரும் உயிர் வாழ்கிறார்; உய்யும் வழியை உணர்த்தி வருகிறார்.

தேன் அனைய பராசக்தி
திறத்தைக் காட்டி
சித்தின் இயல் காட்டி
மனத்தெளிவு தந்தான்;
வானகத்தை இவ்வுலகி
லிருந்து நீண்டும்
வகையுணர்த்திக் காத்தபிரான்
பதங்கள் போற்றி!


OK
GOLDEN
SALAD OIL



நாவுக்கினிய நாமம் காதுக்கினிய கானம்

குலந்தரும் செல்வம் தந்திடும் அடியார் படுதுயராயின வெல்லாம்
நிலந்தரம் செய்யும் நீள்விசும்பருளும் அருளொடு பெருநிலமளிக்கும்
வலந்தரும் மற்றும் தந்திடும் பெற்றதாயினும் ஆயினசெய்யும்
நலந்தரும் சொல்லை நான் கண்டு கொண்டேன் நாராயணா என்னும் நாமம்.

—திருமங்கை ஆழ்வார்

பல்லவி

நாராயண திவ்ய நாமம்—நான்மறை சொல்லும்
நாயகன் திருநாமம்—நாவிற்கினிய (நாராயண)

அநுபல்லவி


ஆரா அமுதாய் ஆறு வயதிலே
அன்பு செய் துருவன் உணர்ந்த மந்திரம் (நாராயண)


சரணம்

நாரதாதி முனிவரும் சனகாதி யோகியரும்
பிரஹ்லாதனும்
என்னாளும் மனோலயமுற வாயார பஜிக்கும்
ஆனந்த நாமம்
பேர் அனந்த மிருந்தாலும் கோர பவ சாகரத்தில்
ஆழ்ந்துழலும் நம்மை—மிகு
பிரேமையுடன் கைதூக்கி அபயமருள்
வேதஸார தாரக நாமம்
பூரணன் திருமகள் மணவாளன் பாற்கடலில்
அரவணை துயில் வரதன்
புனித கருட வாஹனன் நீலமுகில் போலும்
மேனி அழகன்—திரு நாமம்
மார ஜனகன் கருணாலயன் அன்பர் துன்பம்
அகல மங்களம் அருள்வோன்
வைகுண்ட பதி பாவன நாமம்
வணங்கும் ராமதாஸன் கண்டு கொண்ட (நாராயண)



வைகுண்டபதிக்கு எத்தனை எத்தனையோ நாமங்களுண்டு. 'பேரிரை நூறு எப்பொழுதும் சாற்றியுரைத்தல் தவம்' என்று அவனது ஆயிரம் நாமங்களையும் போற்றுகிறார் ஆழ்வார். ஆனால் அவற்றுள் அஷ்டாக்ஷரி என்ற அமிருத மந்திரத்தில்





பொதிந்திருப்பது 'நாராயண' என்ற திருப் பெயரே ஆகும். அந்த நாமத்தின் வைபவங்களையும் அந்த வைபவங்களில் திளைத்த மகாநுபாவர்களின் மகிமையையும் உய்த்துணர்ந்து ஓர் அருமையான கீர்த்தனையாக வழங்கியிருக்கிறார் ஸ்ரீ பாபநாசம் சிவன் அவர்கள். அந்தப் பாடலைத்தான் மேலே காண்கிறீர்கள்.

பாடலைக் கண்டால் மட்டும் அதன் முழுப் பயனையும் பெற்றுவிட முடியுமா? அதன் பொருள் நயத்தை உணர்ந்து இசை நயத்துடன் குழைத்துப் பாடக் கேட்கும்போது தானே, பொன் மலர் நாற்றமும் பெற்று அந்த சுகந்தத்தை நாம் நுகர முடியும்?

அத்தகைய கேள்வி இன்பத்தை நமக்குக் குறைவற வழங்குகிறது ஹிஸ் மாஸ்டர் வாய்ஸ் கம்பெனியின் புதிய வெளியீடான N. 95275 என் கொண்ட இசைத் தட்டு. இந்த இசைத் தட்டில் ஜகன் மோகனனைக் குறித்து மோகன ராகத்தில் இயற்றப்பட்டுள்ள இப்பாடலை மனமோகனமாகப் பாடி மகிழ்விக்கிறார் ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி அவர்கள்.

நாரணன் நாமத்தின் மகிமையைக் கூறும் திருமங்கை ஆழ்வாரின் பாசுரம் ஒன்றினை ஸ்ரீமதி எம். எஸ். அவர்கள் இறுதிக்கு முகப்பு போல் விருத்தமாகப் பாடியிருப்பது பாடலின் சுவைக்கு மேலும் இனிமை கூட்டுகிறது.

சிந்தனை மேடை

அரவிந்தன்

12. பாரதி கண்ட பெண்மை

உலகத்தில் முதன்மையாகவும் சரி, இறுதியாகவும் சரி, பெண் வணக்கத்துக்குரியவள் என்பதை அநேகமாக எல்லாரும் ஒப்புக் கொள்வார்கள் என்று நினைக்கிறேன். நம்முடைய சிந்தனைமேடையில் இது இறுதிக் கட்டுரை. சிந்தனைக்கு இதுதான் எல்லைப் புள்ளி என எதுவும் வரம்பு கிடையாது. ஆனாலும் எந்த இடத்திலாவது அது அழகாகவும் அளவாகவும் நிறைய வேண்டுமல்லவா? இந்த இடத்தில் பாரத நாட்டின் தாய்த் திருக்குலமாகிய பெண்களின் புதிய தலைமுறை வாழ்க்கையைப் பற்றிய சிந்தனையோடு இத் தொடர் நிறைவிறதென்று வைத்துக் கொள்வோம்.

ஒரு நூற்றாண்டுக் காலத்துக்கு முற்பட்ட பாரத நாட்டுப் பெண்ணின் சமுதாய வாழ்க்கைக்கும் இன்றைய பாரத நாட்டுப் பெண்ணின் சமுதாய வாழ்க்கைக்கும் நடுவே எத்தனை எத்தனையோ மாறுதல்கள் உண்டு. ஒரு நூற்றாண்டுக் காலத்துக்கு முன்பு இந்த நாட்டுப் பெண்ணின் சமுதாய வாழ்க்கை மிகவும் சுருங்கிய எல்லைகளுக்கிடையே இருந்தது. இன்று அந்த எல்லைகள் ஓரளவு விரிவடைந்திருக்கின்றன என்பது எல்லார்க்கும் தெரிந்ததே. புதிய தலைமுறையில் பெண்களின் நிலையைப் பற்றிச் சிந்திக்கிற இந்தச் சமயத்தில்தான் பெண்மைப் புகழ் பாடிய மகாகவி பாரதியின் விழாவும் வருகிறது. 'பெண்மை வாழ்கென்று கூத்திடுவோமடா' — என்று பரந்த மனப்பான்மையோடு தாய்த்திருக்குலத்தை வாழ்த்திய கவியரசனை நினைத்துப் பெருமைப்பட இந்த நாட்டுப் பெண்ணினத்துக்குத்தான் அதிகமான உரிமை உண்டு. பாரதி பெண்களின் கட்சி பேசுகிற ஆண்மை வீரர். இப்படி அவர் பெண்களின் கட்சி பேசுகிற இரகசியத்தை அவருடைய கவிதைகளே பல இடங்களில் பறைசாற்றுகின்றன. பாரதிக்கு முன்பு மாபாரதக் கதையைப் பாடிய அத்தனை கவிகளும் பாரதத்தின் எல்லாக் கதாபாத்திரங்கள் மேலும் சிறப்பாகப் பாண்டவர்கள் மேலும் கவனமும் கருணையும் செலுத்தியிருக்கிறார்கள். ஆனால் மகாகவி பாரதி பாடிய பாஞ்சாலி சபதத்திலோ கவியின் கவனமும், கருணையும், எல்லாமே பாஞ்சாலியின் மேல் மட்டும் செலுத்தப்பட்டிருப்பதைக் காணலாம். இதிகாச கதாபாத்திரங்களில் பாஞ்சாலியைப் போலவே மகாகவி பாரதியின் அநுதாபத்துக்குரிய மற்றொரு பெண்ணும் உண்டு. அவள்தான் சகுந்தலை.

"ஆடை குலைவுற்று நிற்கிறாள்:— அவள்
 ஆவென் றழுது துடிக்கிறாள் — வெறும்
மாடுநிகர்த்த துச்சாதனன் — அவள்
 மைக்குழல் பற்றி இழுக்கிறான்"

என்று பாஞ்சாலிக்காகக் குமுறும் இதே மகாகவி சகுந்தலைக்காகவும் குமுறியிருக்கிறார்: ஆனால் அந்தக் குமுறல் இப்படி வெளிப்படையாக அமையவில்லை. மிகவும் அந்தரங்கமாகவும், நாகரிகமாகவும் அது வெளிப்பட்டிருக்கிறது என்பதனைச் சுட்டிக்காட்ட முடியும்.

"சகுந்தலை பெற்றதோர் பிள்ளை
 சிங்கத்தினைத்
 தட்டி விளையாடி — நன்று
உகந்ததோர் பிள்ளைமுன் பாரதராணி
 ஒளியுறப் பெற்ற பிள்ளை"

என்று பாடி வைத்திருக்கிற இடத்தில்தான் எத்தனை குறும்பு பாருங்கள். பரதன், துஷ்யந்தன், சகுந்தலை, இருவருக்கும் பிறந்த குழந்தையே யானாலும் அந்தப் பிள்ளை சிங்கத்தைத் தட்டி விளையாடக் காரணமான வலிமையும் வீரமும் சகுந்தலையிடமிருந்து மட்டுமே அதற்குக் கிடைத்து விட்டதாகச் சொல்லுவதைப் போல் 'சகுந்தலை பெற்றதோர் பிள்ளை' என்று கம்பீரமாக ஆரம்பித்த கவிதைத் துணிவை இங்கு நாம் எந்த நல்ல சொற்களால் போற்றுவது?

புதுமைப் பெண்

இப்படி இந்தத் தேசத்தின் பழைய தலைமுறைப் பெண்களை வணங்கிக் கூப்பிய இதே கைகளில்தான் புதிய தலைமுறைப் பெண்மையை வாழ்த்தும் புதுமைக் கவிதைகளும் உருவாகிப் பிறந்தன என்பதை நாம் நினைவு கூர வேண்டும்.

'பெண்மை' — என்ற பதத்திற்குக் 'கண்ணுக்குப் புலனாவதோர் அமைதித் தன்மை' — என்று பழைய உரையாசிரியர்கள் விளக்கம் எழுதியிருக்கிறார்கள். ஆனால் மகாகவி பாரதியின் இலட்சியப்படி புதுமைப் பெண் வீரமும், நிமிர்ந்த நடையும், நிலத்தில் எவர்க்குமே அஞ்சாத ஞானச் செருக்கும் உடையவளாக இருக்க வேண்டும்.

"முறத்தினால் புலியை ஓட்டும்
 மொய்வரைக் குறப் பெண் போலத்
திறத்தினால் எளிய ஆகிச்
 செய்கையால் உயர்ந்து நின்றாய்."

என்று மகாகவி பாரதியே பாடியிருப்பதைப் போல் திறத்தினால் எளியவளாய் இருந்து செய்கையால் மேல் எல்லைக்கு உயர்ந்து நிற்கவேண்டும் நவபாரதத்தின் இலட்சியப் பெண்.

'பெண்ணாகி வந்ததொரு மாயப் பிசாசம்' என்றும் 'நுண்ணறிவு உடைய நரனொடு பழகினும் பெண்ணறிவு என்பது பெரும் பேதைமைத்தே' — என்றும் பாடி வைத்திருக்கிற இந்த நாட்டுப் பழங் கவிகளின் புதிய பரம்பரையில் வந்த அதே மகாகவி பாரதிதான்.

"பெண்ணுக்கு அறிவை வைத்தான்
புவி பேணிவளர்த்திடும் ஈசன்
மண்ணுக்குள்ளே சிலமூடர் — நல்ல
மாதர் அறிவைக் கெடுக்கின்றார்."

என்று பெண்ணறிவைக் குறை சொல்லும் பித்தர்களைச் சாடிக் கவி புனைந்தான். இந்தப் புதுயுகக் கவியின் முற்போக்கான நினைவுகளுக்கும், துணிவுகளுக்கும் இந்த நாட்டின் பெண் குலம் எத்தனை நூற்றாண்டுகள் நன்றி சொல்லிக் கொண்டிருந்தாலும் ஏற்கும். சக்தி, பாரத ராணி, பாரதத் தாய், என்று தேசத்தையும், இலட்சியங்களையும், சகலத்தையும் பெண்ணாக வழிபட்ட அற்புதமான மகா கவிஞன் பாரதி.

"ஜாதிகள் இல்லையடி பாப்பா — குலத்
தாழ்ச்சி உயர்வு சொல்லல்பாவம்."

என்று புன்மைய பாவத்தையே சமூகத்திற்கு நன்மை தருகிற புதுக் கோணத்தில் திருப்பிப் பார்த்த சீர்திருத்த வீரன் பாரதி. மனித இனத்திலேயே சாதிப்பிரிவு பாவம் என்று கருதிய மறுமலர்ச்சிக் கவி, ஆண், பெண், என்ற சாதிப் பிரிவை அறிவின் மிகுதி குறைவுகளை வைத்து எடை போடுவான் என்று நாம் எதிர்பார்க்கலாமா?

சீர்திருத்த நோக்கம்

'பாஞ்சாலி சபதம்'—என்ற பழங்காப்பியக் கதையை எழுதுகிற போதே புதுமைப் பெண்ணுக்குத் தேவை என்று நான் கருதுகிற உரிமைகளைப் பாரதியால் அங்கும் சொல்லாமல் இருக்க முடியவில்லை. எதைப் பாடினாலும், எங்கே பாடினாலும், 'பெண்மை வாழ்க என்று கூத்திடும்' ஞாபகம் இந்தக் கவியின் இதயத்திலே மறவாமல் நிறைந்திருக்கிறதென்று நாம் உணர முடிகிறது. திரௌபதி சபை நடுவில் அவமானமுற்று நிற்பதைப் பாரத தேசம் சுதந்திரமின்றி நிற்கிற நிலையாகக் கருதிக் கொதிக்கிறான் இந்த மகாகவி.

"பெண்ணொளி வாழ்த்திடுவார் — அந்தப்
பெருமக்கள் செல்வத்தின்
பெருகுதல்போல்
கண்ணபிரான் அருளால், — தம்பி
கழற்றிடக் கழற்றிடத் துணிபுதிதாய்
வண்ணப்பொற் சேலைகளாம் — அவை
வளர்ந்தன, வளர்ந்தன, வளர்ந்தனவே!"

என்று திரௌபதியின் துகில் அளவற்று முடிவற்று வளர்ந்துகொண்டே போவதைக் கூற வேண்டிய இடத்திலும் கூட ஞாபகமாகப் 'பெண்ணொளி வாழ்த்திடும் பெருமக்கள் செல்வம் பெருகுதல் போல்' என்று இந்தக் கவியிலும் தன் இலட்சியக் கருத்தையே உவமையாகச் சொல்வதற்கு முடிகிறது. சுதந்திர இயக்கத்தையே, 'சுதந்திர தேவி' வழிபாடாக மாற்றிப் பெண்மைக்கு மரியாதை செய்த கவியல்லவா நம் பாரதி?

"நன்றுபல் வேதம் வரைந்தகை பாரத
சாயிதன் இருக்கை."—

என்று வேதங்களின் படைப்புப் பெருமையையே தேச மாதாவுக்குச் சார்த்தி மகிழ்கிற அளவு துணிவுள்ள கவி பாரதி. வந்தேமாதர

தேத்தில், 'குறுநகை இன்சொலார் குலவிய மாண்பினே' என்று அழகிய பெண்கள் நிறைந்திருப்பதையும் இந்தத் தேசத் தாய்க்கு ஒரு பெருமையாகச் சொல்லித் துதிக்கிறான் இந்தப் புதுயுகக் கவிஞன். மொழியையும், நாட்டையும், இயக்கத்தையும், எல்லாவற்றையும் தாய் மயமாகக் கண்டு, தமிழ்த் தாய், பாரதத் தாய், சுதந்திர தேவி, என்று உருவகங்களாலும் பெண்ணையே தொழுகிற இந்த உயர்வை வேறு எந்தக் கவியிடம் நாம் காண முடியும்?



''நம்ம சேகர் அவரோட முதலாளியின் வலது கையா இருக்கிறானே ! அது எப்படின்னு தெரியல்லையே!''
'' முதலாளிக்குக் கொஞ்ச நாளாக வலது கை ஸ்வாதீனம் இல்லாமல் இருக்கு என்று கேள்வி... அதனால் இருக்குமோ என்னமோ!''

'பிஜித் தீவிலே கரும்புத் தோட்டங்களிலே தமிழ்ப்பெண்கள் துன்பத்தினால் விம்மி விம்மி அழுகிற குரலை அந்தப் பக்கத்திலிருந்து வருகிற காற்றாவது கேட்டுக் கொண்டு வந்து சொல்லக் கூடாதா?' என்று கடல் கடந்து போய் வாழும் தாய்த் திருக்குலத்துப் பெண்களுக்காக ஏங்குகிறான் இந்தக் கவியரசன்.

'' விம்மி விம்மிவிம்மி விம்மியழுங்குரல்
கேட்டிருப்பாய் காற்றே — துன்பக்
கேணியிலே எங்கள் பெண்களழுத சொல்
மீட்டு முரையாயோ — அவர்
விம்மியழவுந் திறங்கெட்டுப் போயினர்.''

'பெண்ணுக வந்ததொரு மாயப் பிசாசம்'— என்று பாடியும் 'பெண்களைக் கண்ணெடுத்துப் பார்ப்பதே கேவலம்'— என்று ஆஷாடபூதி வேடமிட்டும் அந்தப் பெண் வெறுப்புக் குணத்தினாலேயே பிறர் தங்களை மதிக்கும்படி செய்து கொண்டு வந்த நிலையை மாற்றிப் பெண்களின் துன்பத்துக்காகக் கண்ணீர் சிந்தும் ஒரு புதுயுகக் கவிஞனை இந்தப் பாடலில் பார்க்கிறோம். இதைச் சீர்திருத்த நோக்கம் என்று பாராட்டத்தானே வேண்டும்?

'திருமகளைச் சரண்புகுதல்' — என்ற பாடலில் திருமகள் எந்த எந்தப் பொருள்களில் வாசம் செய்கிறாள் என்பதைச் சொல்லத் தொடங்கிய பாரதி,

'' பொன்னிலும் மணிகளிலும் — நறும்
பூவிலும் சாந்திலும் விளக்கினிலும்
கன்னியர் நகைப்பினிலும்''

என்று வளர்த்துப்போகிறார். 'பெண் என்பவள் மாயப் பிசாசு' என்று வறட்டு வேதாந்தம் பேசுகிறவர்களிடம், 'பெண்ணின் புன்னகையில்தான் திருமகள் வாசம் செய்கிறாள்' என்று பாடுகிற கவியின் வாக்கைச் சொல்லப் போனாலும் முகத்தைச் சுளிப்பார்கள். ஆனாலும் பாரதியைப் போல் ஒரு வீர மகாகவி இப்படிப் பெண்களைக்கண்டுபயந்து ஓடும் வறண்ட வேதாந்திகளுக்குச் சிறிதும் பயப்பட மாட்டாரென்று நாம் நம்பலாம். துஷ்யந்தன் எத்தனையோ யுகங்களுக்கு முன் சகுந்தலையை மறதியால் ஏமாற்றியதைத் தன் யுகத்தில் தான் திரும்ப நினைத்துப் பார்க்கும்போதே அந்தக் குற்றத்தைப் பொறுத்துக் கொண்டு துஷ்யந்தனை மன்னிக்க முடியாமல் வேதனைப் பட்டிருக்கிறான் மகாகவி பாரதி. எத்தனை மென்மையான மனம் இருந்தால் இப்படிக் கடந்த காலத்தில் மாண்டுபோன நல்லவர்களுக்காகவும் தன் காலத்தில் இரங்கமுடியும் என்று சிந்திக்கும்போது நம்முடைய மகாகவியைப்பற்றி நமக்கு மிகவும் பெருமையாக இருக்கிறது.

'' காதலினால் மானுடர்க்குக்
கவிதை யுண்டாம்.''

என்று பாடிய கவியிடம் எவ்வளவு நளினமான உள்ளம் இருந்திருக்க வேண்டும். இவற்றையெல்லாம் பார்க்கப் போனால் தமிழ் நாட்டில் பெண்கள்தான் பாரதியை அதிகமாகப்படித்து மூழ்கி நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறார்கள் என்று தோன்றுகிறது. ஆனால் படித்த பெண்களில் எத்தனைபேர் பாரதியை இரசித்துப் போற்றியிருக்கிறார்கள்? ஏதோ சிலர் இருக்கலாம். ஆனால் சிலர் மட்டும் போதுமா? தமிழ் நாட்டுப் பெண்கள் பாரதிக்கு இப்போது செலுத்திக் கொண்டிருப்பதைவிட இன்னும் அதிகமான மரியாதை செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறார்கள் என்பதை மறுபடி ஞாபகமூட்டுகிறேன்.

'' அன்னமூட்டிய தெய்வமணிக்கரத்தின்
ஆணைகாட்டில் அனலை விழுங்குவோம்''

என்று பாடிய வாய் தாய்க்குலத்துக்கு எவ்வளவு மரியாதை செய்திருக்கிறதென்று உணருகிறபோது நமக்கு மெய் சிலிர்க்கிறது. இந்தத் தேசமாதாவுக்குப் பிறந்த கவிப் புதல்வர்களில் ஒருவரென்ற முறையில் வங்காளிக் கவிஞராகிய தாகூரையும்கூடத் தன் வாக்கினால் பெருந் தன்மையோடு புகழ்ந்திருக்கிறான் பாரதி. ஆனால் தாகூரோ பாரதி என்று தன் காலத்தில் தெற்கே ஒரு கவி இருந்ததை நினைவூட்டவும் இல்லை. பெண்ணை உயர்வாக வழிபடுகிற இடங்களில் தாயாகவும் சக்தியாகவும், நளினமாக வழிபடுகிற இடங்களில் காதலியாகவும், நாடாக வழிபடுகிற இடங்களில் பாரத மாதாவாகவும், இயக்கமாக வழிபடுகிற இடங்களில் சுதந்திர தேவியாகவும் உருவகம் கண்ட மாபெருங் கவி பாரதி.

நந்தவனம்

சோமு

36. வல்லவருக்கு வல்லவர்!

திவான்பகதூர் செந்தில்நாயகம் அவர்களின் திடீர் வருகையினால் வைத்தியரையா தனியாய்த் தவித்துக் கொண்டிருந்தார் அந்தப் பெரிய கல் வீட்டிலே! அவருடைய அந்தத் தவிப்பை நன்றாகப் புரிந்து கொண்டு மேலும் மேலும் அவருக்கு மூச்சுத் திணறும்படி செய்தார் செந்தில்நாயகம்!

''என்ன அற்புதமான அறை அந்த நிலைக்கண்ணாடி அறை! அதை இப்படி அலட்சியப் படுத்தலாமா! தூசியும் தும்பும் அடையும்படி இப்படிப் பூட்டிப் போடலாமா! இந்த வீட்டைக் கட்டின புண்ணியவாளன் இன்றுஉயிரோடு இருந்தால் இதைப் பார்த்துக் கண்ணீர் விடுவார்! அவரைப் பார்த்து அந்த நிலைக் கண்ணாடி அறையும் கண்ணீர் விடும்! அநியாயப் பாவம் இது வைத்தியரய்யா!'' என்றார் வக்கீல்.

''பாவமா! எது?'' என்று பதறிக் கொண்டே கேட்டார் வைத்தியர்.

''இந்த மாதிரி அடைத்துப் போட்டது பெரிய பாவம் என்கிறேன்!'' என்று அழுத்தந் திருத்தமாகச் சொன்னார் திவான்பகதூர் செந்தில்நாயகம். சொல்லிக் கொண்டே கதவின் அருகிலே போய் நின்றார்.

''அடாடா! இதென்ன! கண்ணாடி அறைக்கு வெளியே உள்ள இந்த வெளி அறையின் கதவையும் அல்லவா இப்படிப் பூட்டுப் போட்டுப் பூட்டியிருக்கிறீர்கள்! உள்ளேயிருந்து அந்த நிலைக் கண்ணாடி அழுதாலும் வெளியே கேட்காதே. அடாடா!'' என்றார் வக்கீல் மறுபடியும்.

வெள்ளம் தலைக்கு மேலே போகிறது என்பதை உணர்ந்ததும் வைத்தியர் மனத்தைத் திடப்படுத்திக் கொண்டார். சொன்னார்:

''இந்தக் கதவை மட்டும் திறக்கப் படாதுன்னு எசமான் உத்தரவு!'' என்று ஓங்கி அடித்தார் வைத்தியர்.



''ஓகோ! அப்படியா! வல்லாளவேலரய்யா உத்தரவா அது! பலே! அப்படியானால் அதை மீறவே கூடாது. சரி. இங்கேயே உட்காரலாம். இங்கு உட்கார்ந்தே சில்லுக் கருப்பட்டி சாப்பிட்டால் போகிறது!'' என்று புன்முறுவல் செய்து கொண்டே அங்கேயிருந்த ஒரு பெரிய சோபாவில் அமர்ந்தார் திவான் பகதூர் செந்தில்நாயகம்.

வைத்தியர் பக்கத்து அறை ஒன்றிலிருந்து ஒரு வெள்ளித் தட்டில் சில்லுக் கருப்புக் கட்டியும், ஒரு வெள்ளி டம்ளரில் மண் பானைத் தண்ணீரும் கொண்டு வந்து, சோபாவுக்கு எதிரே யிருந்த ஓர் உயரமான முக்காலியின்மீது வைத்து விட்டுப் பக்கத்திலே நின்றார்.

''உட்காருங்கள் வைத்தியரையா! வல்லாள வேலரய்யாவைப் பார்க்க முடியா விட்டாலும் உங்களைப் பார்த்ததே ரொம்பத் திருப்தி! இப்படி உட்காருங்கள்!'' என்றார் வக்கீல்.

வைத்தியர் தயங்கிக் கொண்டே சோபாவுக்கு அருகிலிருந்த ஒரு சாய்மானத்தில் உட்கார்ந்தார்.

''என்ன வைத்தியரய்யா! நமக்குக் கொஞ்சம் நாடி பார்த்துச் சொல்லணுமே நீங்க! வயசு ஆக ஆக உடம்பு ரொம்பத் தளர்ச்சியா இருக்கு. உங்களிடத்திலே அபூர்வமான மூலிகைச் சரக்குகளைக்கொண்டு செய்த காயகல்பங்கள் இருக்குமே!'' என்று சன்னமாக வார்த்தைகளை நீட்டினார் வக்கீல். வைத்தியர் பதில் பேசாமல் 'திருதிரு' என்று விழித்தார்.

''என்ன வைத்தியரய்யா! எசமான்களுக்குத்தான் மருந்து கொடுப்பீர்களா? என்னைப் போல சாதாரண மனிதர்களுக்கு உங்களிடம் மருந்து கிடையாதா?'' என்று மேலும் கேட்டார் வக்கீல். வைத்தியருக்கு எரிச்சல் உண்டாயிற்று.



''நான் இப்ப வைத்தியத் தொழிலையே விட்டாச்சு வக்கீலையா!'' என்று ஒரு போடு போட்டார் வைத்தியர்.

''ஓ! அப்படியா! வைத்தியத்தை விட்டாச்சா? அது சரிதான். இப்ப ஊசிமருந்து வந்த பிறகு நம்ப பழைய மருந்துகளை யாரும் நாடுறதில்லை. அப்படித்தானே? அது சரி. இப்ப வேறுஎன்ன தொழில் நடத்துறீக? அதைச் சொல்லுங்க!''

வக்கீல் இப்படிக் கேட்டுக் கொண்டிருக்கும் போதே வாசலில் வில் வண்டி வந்து நின்றது. வக்கீலின் கார் நிற்பதைப் பார்த்து அப்படியே படபடத்துக் கொண்டு வேகமாக வண்டியில் இருந்து இறங்கி உள்ளே வந்தார் வல்லாளர். வரும்போதே மூளையும் படபடப்பாக வேலை செய்தது!

''வக்கீலையாவா!'' என்று கேட்டுக் கொண்டே கும்பிடு போட்ட வண்ணம், சோபாவுக்கு வந்து வக்கீலின் அருகில் உட்கார்ந்தார் வல்லாள வேலர்.



''வல்லான வேலரய்யா இல்லையானு, வீட்டுக்குள்ளே எப்படி நுழைய முடியும் நம்மாலே! இங்கேயே இந்தச் சோபாவி லேயே உட்கார்ந்து விட்டேன்!'' என்றார் திவான் பகதூர்.

''என்ன வக்கீலையா அப்படிச் சொல்லிப் போட்டீக!'' என்று கேட்டுக் கொண்டே மனத்துக்குள் சூழ்ச்சிச் சக்கரத்தை வேகமாகச் சுழற்றினார் வல்லானவேலர்.

''இந்த நிலைக்கதவைத் திறக்கக் கூடாது என்று உங்களுடைய உத்தரவு என்பதாக வைத்தியரய்யா சொன்னார்கள்!'' என்று பக்குவமாக வார்த்தைகளைப் போட்டார் திவான்பகதூர்.

''ஆமா! உள்ளே ஒரு பைத்தியத்தைப் பூட்டி வச்சிருக்கோம் வக்கீலையா! அதைச் சொல்றதுக்குக் கூச்சப்பட்டுத்தான் நம்ப வைத்தியரய்யா அந்த மாதிரிச் சொல்லியிருக்காக — வைத்தியரய்யா, பூட்டைத் திறவுங்கம்மா பயமில்லாம!'' என்று வைத்தியருக்கு உத்தரவு போட்டார் வல்லானவேலர்.

''பைத்தியமா! அது என்ன பைத்தியம் வல்லானரய்யா!'' என்று கேட்டுக் கொண்டே கதவுக்கு அருகிலே வைத்தியருக்குப் பக்கத்தில் வந்து நின்றார் திவான்பகதூர்.

''அது ஒரு பெரிய கதை வக்கீலையா! நம்ப குமுதவல்லி அம்மா இருக்காகளே அவளுடைய மகளுக்கு ரெண்டு மூணு வாரமாகவே புத்திக் கோளாறு. நேற்று ரொம்ப அதிகமாகப் போய் மயக்கம் போட்டு விழுந்துட்டுது. அதன் பேரில் எனக்கு ஆள் வந்தது. நான் போய் அந்தப் பைத்தியத்தைக் கொண்டு வந்து இங்கே வைத்தியரய்யாவுடைய காவலிலே வச்சிருக்கேன். அந்த அம்மா பாவம், கையும் காலும் விளங்காது பாருங்க, என்ன பண்ணுவா சொல்லுங்க, வயசுக் காலத்திலே!''

இவ்வாறு வல்லான வேலர் சொன்னதும், மிருந்த மகிழ்ச்சியை முகத்தில் மலர விட்டவாறு வக்கீல் பேசலானார்.

''பலே! பெரிய உதவிதான் செய்திருக்கிக நீங்க! தன்னந் தனியா ஒரு பைத்தியத்தை வைத்துக் கொண்டு, அந்த அம்மா எப்படிச் சமாளிக்க முடியும்! பாவம்! நல்ல பெண்ணாயிருந்ததே அது! திடீரென்று அதுக்கு இப்படியும் வந்ததா ஒரு பெரிய ஆபத்து?'' என்று சொல்லி ஆற்றாமையைக் குரலிலே வரவழைத்துக் கொண்டு பேசினார் திவான் பகதூர் செந்தில்நாயகம்.

''நேற்றுப் பெரிய ரகளையாப்போச்சு வக்கீலையா அந்த வீட்டிலே. ஆட்கள் மேலே சீறி விழுகிறதும், என்னென்னவோ விபரீதமாகக் கற்பனை பண்ணிப் பேசுறதும், நாம் எல்லாம் அவளைக் கொலை பண்ண வந்திருக்கிறது போல எண்ணித் திட்டறதும் — சகிக்க முடியலே. இப்ப கூட என்னென்ன வித்தியாசமாப் பேசுமோ அந்தப் பொண்ணு தெரியலே!'' என்று வார்த்தைகளை அடைவு கொடுத்துக் கொண்டே, வைத்தியரைப் பார்த்து ''பூட்டைத் திறவுங்க வைத்தியரய்யா!'' என்று அதட்டினார் வல்லான வேலர்!


நிலைக் கதவு திறந்ததும், உள் அறையிலிருந்து அழுகுரல் கேட்டது. நெஞ்சை உருக்கும்படியான சோகத்தோடு ஓலமிட்டாள் செண்பகசுந்தரி!

''பார்த்தேளா வக்கீலையா! இந்தக் கதறல்தான். இதே கூப்பாடு தான்! இப்படியேதான் கதறிக்கிட்டே இருக்குது. பேச ஆரம்பிச்சதோ, இன்னது தான் சொல்லணும், இன்னது சொல்லக் கூடாது என்கிற விதரணையே அதற்குக் கிடையாது!''

இவ்வாறு சொன்னார் வல்லானவேலர்.

''அது சரி வல்லானரய்யா! பைத்தியம் பிடித்து விட்டால் பிறகு என்ன செய்கிறோம், யாரிடம் என்ன பேசுகிறோம் என்கிற நினைப்பு எப்படி இருக்கும்! நாம் எல்லாம் எப்பேர்ப்பட்ட மனிதர்கள் என்பது மறந்து போய்விடும் வல்லானரய்யா! அது சரி, நீங்க அடுத்த கதவையும் தைரியமாகத் திறவுங்க வைத்தியரய்யா!'' என்று வைத்தியரை முடுக்கினார் வக்கீல்.

சநாதன தர்மம் தழைப்பதற்காக நற்பணிகள் பல புரிந்து வந்த ஸ்ரீ எம். என். ராமஸ்வாமி அய்யர் அவர்கள் சமீபத்தில் காலமானது ஆஸ்திக உலகுக்குப் பெரிய நஷ்டமாகும். அய்யர் அவர்கள் வால்மீகி ராமாயணம், ஸ்ரீமத் பாகவதத்தின் பத்தாவது ஸ்கந்தம், ஸ்ரீ நாராயணீயம் முதலிய நூல்களைப் பதவுரையுடன் வெளியிட்டிருக்கிறார். மேலும் பல உயர்ந்த நூல்களை மலையாளத்திலும், தேவநாகரி மூலத்திலும் வெளியிட்டு சமய உலகுக்குச் சேவை புரிந்துள்ளார். அவரது குடும்பத்தினருக்கு நம் அநுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.



JWT/BM/1DA 1844a



ரிடையர்டு அக்கௌண்டண்ட் ஜெனரல் ஸ்ரீ வி டி. ஸ்ரீனிவாசன் அவர்களின் புதல்வரும், பெங்களூர் இந்தியன் டெலிபோன் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்டின் உதவி என்ஜினீயருமான ஸ்ரீ சம்பத்குமார் 2-9 62 அன்று மேற்கு ஜெர்மனிக்குப் பிரயாணமானர். அங்கு அவர் யந்திரக் கருவிகள் தயாரிப்பில் விசேஷப் பயிற்சி பெறுவார்.

அழிக் கதவைத் திறந்தார் வைத்தியர். அடுத்த கணம் 'ஓ' என்று கதறிக்கொண்டே ஓடி வந்து வக்கீலின் கால்களில் விழுந்து, பிரலாபித்தாள் செண்பகசுந்தரி! வல்லாளவேலர் மறு பக்கம் திரும்பியவாறு, "பாருங்கள், பாருங்கள், என்ன நாடகம் இது, பாருங்கள்" என்று சொல்லிக் கொண்டே அங்கே நிற்க முடியாமல் வெளி அறைக்கு நடந்தார்!

"நாடகமா! எது நாடகம்! ஐயா, பெண்ணைப் பெற்றவர்கள், பெண்ணோடு பிறந்தவர்கள் செய்கிற காரியமா இது? நீதி இல்லையா, நெறி முறை கிடையாதா! இந்த அக்கிரமத்தை, இந்தப் பழி பாவத்தை —"

"அம்மா! எழுந்திரு! அழாமல் தைரியமாக எழுந்திரு அம்மா!"

இவ்வாறு குறுக்கிட்டுப் பேசினார் வக்கீல்.

"ஐயா, நேற்றிரவு ஏதோ மயக்க மருந்து கொடுத்து என்னை மயக்கமாக விழப் பண்ணி இங்கே தூக்கிக் கொண்டு வந்திருக்கிறார்கள். இப்போது —"

"நான் சொன்னது சரியாப்போச்சு பாத்தீகளா வக்கீலையா!" என்று சொல்லிக் கொண்டே மறுபடியும் உள்ளே வந்தார் வல்லாள வேலர்.

"வக்கீலையா, எது எப்படியானாலும் இந்தத் தொந்தரவு எல்லாம் நமக்கு எதுக்கு? அவள் பாடு, அவளுடைய தாயார் பாடு என்று பேசாமல் இருந்திருக்கலாம் நான்! அப்படி அலட்சியமாக இராமல், இத்தனை அக்கறை எடுத்துக் கொண்டதுக்காக இத்தனை பேச்சும் நமக்கு வேண்டும், வக்கீலையா, வேண்டும்!" என்று தலையிலே அடித்துக் கொண்டார் வல்லாளவேலர். வைத்தியர் 'இரு இரு' என்று விழித்துக் கொண்டே நின்றார்.

"சரி! இப்பவும் என்ன, பரவாயில்லை வல்லாளரய்யா! இப்படியே நம்முடைய காரிலேயே கொண்டு போய் இவளை இவளுடைய வீட்டில் விட்டு விட்டால் போகிறது. அதுதான் நல்லது. வாருங்கள். முன்னிட்டிலே ஏறிக் கொள்ளுங்கள்!"

இவ்வாறு வல்லாள வேலரிடம் கூறி விட்டுச் சுந்தரியைப் பார்த்துச் சொல்லுவார்:—

"அம்மா! மனசை அலட்டிக் கொள்ளாதே! மௌனமாக இருப்பதுதான் இப்பொழுதுள்ள நிலையில் உன்னுடைய கடமை. பேசாமல் சென்று காரில் ஏறிக் கொள்!"

சுந்தரியிடம் இவ்வாறு கூறிவிட்டு வைத்தியரைப் பார்த்துச் சொன்னார்:

"வைத்தியரய்யா! கதவைச் சாத்திக் கொள்கிறீர்களா? மறுபடி உங்களைச் சௌகரியமாக வந்து பார்க்கிறேன்!"

வக்கீலின் கார் புறப்பட்டது. செண்பக சுந்தரி மௌனமாகக் காரில் உட்கார்ந்து கண்ணீர் வடித்துக் கொண்டேயிருந்தாள். இடையிடையே விம்மல் கேட்கும். அப்பொழுதெல்லாம் வக்கீல் அவள் பக்கம் திரும்பி ஆறுதலாகப் பார்த்துக் கொள்வார். அவருக்குமே வேறு எப்படி அந்தச் சூழலில் அவளுக்கு ஆறுதல் சொல்வது என்று புரியவில்லை.

குமுதவல்லியின் வீட்டுக்கு எதிரே வந்து கார் நின்ற மறு வினாடி, இது வரை அடக்கி வைத்துக் கொண்டிருந்த சோகத்தை யெல்லாம் உடைத்துப் பெயர்த்துக் கொண்டு 'ஓ' வென்று கதறியவாறு, காரின் கதவைத் திறந்து கொண்டு உள்ளே ஓடினாள் சுந்தரி! விறு விறு என்று ஓடிப் போய்த் தாயார் உட்கார்ந்திருந்த கூடத்தையும் தாண்டித் தனது அறையிலே சென்று, கட்டிலிலே தொப்பென்று விழுந்தாள்! விழுந்து குப்புறப்படுத்தவள் அப்படியே கதறிக் கதறி அழுதாள்.

"என்ன வல்லாளரய்யா, இறங்குங்க! என்ன பெரிய யோசனையிலே இருக்கிறீக!" என்று கேட்டார் திவான் பகதூர் செந்தில்நாயகம்.

இப்படி வக்கீல் கேட்ட பிறகுதான் வல்லாளவேலருக்குத் தாம் யோசனையில் இருப்பது புரிந்தது! அவசரமாகக் காரின் முன் கதவைத் திறந்து கொண்டு இறங்கினார்.

"நீங்க உள்ளே போங்க. அம்மா விட்டிலே பேசுங்க. நான் வாரேன்!" என்று சொன்னார் திவான்பகதூர்.

வல்லாள வேலர் இந்த மாதிரி ஒரு நிலைமையை எதிர்பார்க்க வில்லை. திகைப்போடு பார்த்தார். அதற்குள் கைகளைக் கூப்பி வணக்கம் செலுத்தினார் செந்தில் நாயகம். அவருடைய கார் புறப்பட்டு விட்டது!

"நான் வாரேன்!" என்று சொன்னாரே, போய் விட்டு மறுபடியும் வருவதாகச் சொன்னாரா, அல்லது 'போகிறேன்' என்பதைத்தான் அப்படிச் சொன்னாரா என்று யோசித்தவாறு வீட்டுக்குள்ளே நடந்தார் வல்லாள வேலர்.

'என்ன முட்டாள்தனம்! உள்ளே வாருங்கள் என்று நான் ஏன் அவரிடம் சொல்லவில்லை? அவ்வளவு தூரத்துக்கு மண்டை நமத்துப் போயிருந்ததா?'— இப்படி ஒரு நினைப்பு. மறுகணம் புன்முறுவல் செய்து கொண்டே 'அதுவும் நல்லதுக்குத்தான். வக்கீலையா நம்மைத் தனியாக விட்டதே சரி. இன்னும்

கொஞ்ச நேரத்தில் அவர் மறுபடியும் திரும்பி வந்தாலும் சரி. வராவிட்டாலும் சரி!" என்று எண்ணியவாறு வல்லாளவேலர் குமுதவல்லியின் ஊஞ்சல் கூடத்துக்கு வந்து, ஊஞ்சலிலே உட்கார்ந்தார்.

''என்னவோ நினைச்சோம். என்னவோ நடந்தது! எல்லாம் நன்மைக்குத்தான்!'' என்றார் வல்லாளவேலர் குமுதவல்லியைப் பார்த்து.

''கார்ச் சத்தம் கேட்டுதே!'' என்றாள் குமுதவல்லி.

''ஆமாம். வக்கீல் திவான்பகதூர் கொண்டு வந்து விட்டுட்டுப் போறாக!'' என்றார் வல்லாள வேலர்.

''வக்கீலா? அப்படியானா....''

''சே, சே! அவுகளுக்கு ஒரு விவரமும் தெரியாது. மூளைக் கோளாறு மாதிரி இருந்தது, வைத்தியரிடத்திலே கூட்டிக் கொண்டு வந்தேன் என்று சொல்லிச் சமாளித்தேன்!''

இப்படி வல்லாளவேலர் கூறியதும் குமுதவல்லி திகைத்தாள். ஒன்றுமே புரியாமல் குழப்பமாகப் பார்த்தாள்.

''சரி! அதிகமாக யோசனை பண்ணாதீக! சுந்தரி இங்கேயே இருக்கட்டும். ஆனால் இங்கே அவள் இருப்பது யாருக்கும் தெரியக்கூடாது. நம்முடைய கல்லு வீட்டிலே அவள் இரகசியமா இருந்த மாதிரி, இங்கேயே ஒரு தனியான அறையிலே அவளைக் காவல் காத்து வாருங்க நீங்க! போலீசுக்கு அவள் காணாமல் போனதாக ரிப்போர்ட் கொடுத்தது அப்படியே இருக்கட்டும். சுந்தரி இங்கேதான் இருக்கிறாள் என்ற விவரம் போலீசுக்குத் தெரிய வேண்டாம். வேறு யாருக்குமே தெரிய வேண்டாம். வில்வநாதனைக் கைது செய்யிறதுக்காகப் போலீசிலே நடக்கிற முயற்சி தொடர்ந்து நடக்கட்டும். அதை நாம் இப்ப கெடுத்துவிடக் கூடாது. இன்னும் ஒரு வாரத்துக்கு எனக்குச் சிங்கம்புத்தூரில் கலியாண வேலை மும்முரமாக இருக்கும். கலியாணம் முடிஞ்ச பிறகு எனக்கு வேறு வேலை எதுவும் முக்கியமில்லே. அந்தப் பையனைப் போலீசிலே பிடிச்சுக் கொடுத்துட்டுத்தான் உட்காருவேன். நீங்க வருத்தப்படாதீக. நம்முடைய திட்டம் எதுவும் வீணாகிவிடாது. எல்லாம் என்னுடைய பொறுப்பு. சுந்தரியை மட்டும் அங்கே இங்கே நகராதபடி பாத்துக் கொள்ளுங்க. வேலைக்காரிக்கு வேறே வேலை எதுவும் கொடுக்காதீக. அறைக்குள்ளே இருக்கிற பொண்ணு, வெளியே போயிடாதபடி காவல் காக்க வேண்டியதுதான் அவளுக்கு வேலை. அதைக் கண்டிப்பாகச் சொல்லிவிடுங்க!''

இப்படித் தமது யோசனைகளை யெல்லாம் குமுதவல்லியிடம் அவசரம் அவசரமாகக் கூறி முடித்துவிட்டு வெளியே வந்தார் வல்லாளவேலர். வெளியே வந்த பிறகுதான் அவருக்கு நினைவு வந்தது. தம்முடைய வில்வண்டி அங்கே இல்லை என்பது! இதை யோசித்துக்கொண்டே வாசல்வரை வந்து விட்டார் வல்லாளவேலர். ஆனால் என்ன ஆச்சரியம், வக்கீலின் கார் அங்கே நின்று கொண்டிருந்ததைப் பார்த்தார்! காரிலிருந்து டிரைவர் கீழே இறங்கி வந்தான்.

''வக்கீலையா சத்திரத்திலே இறங்கிக்கிட்டு, எசமானுக்காகக் காரை அனுப்பிச்சாக. எசமானை முருகபாண்டிபுரத்திலே கொண்டு போயி விட்டுட்டு வரும்படி ஐயா சொல்லியிருக்காக!'' என்றான் டிரைவர்.

வல்லாளவேலர் யோசித்தார். குமுதவல்லியிடம் தனது குழப்பங்களைக் காட்டிக் கொள்ளாமல் எப்படியோ சமாளித்துக் கொண்டு வந்துவிட்டபோதிலும், வல்லாளவேலரின் மனசுக்குள் ஒரே கலவரமாகத்தான் இருந்தது. வக்கீலையா எதற்காகக் கல் வீட்டுக்கு வந்து சேர்ந்தார். ஒருவேளை, முருகபாண்டிபுரத்துக்குப் போய்த் தம்மைத் தேடினாரா, தமது வீட்டு அம்மாளுக்கு இந்த விவரம் ஏதாவது தெரிந்து போயிருக்குமா என்றெல்லாம் ஒரே குழப்பமாகக் குழம்பினார் வல்லாளவேலர், உள் மனசுக்குள்ளே! வக்கீலின் காரிலே ஏறி வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தபிறகுதான் மற்ற யோசனைகள் எல்லாம் என்று எண்ணியவராகக் காரிலே ஏறினார்.

இங்கே சூழ்ச்சியும், அதன் விளைவுகளும் இவ்வாறு சுற்றிச் சுழன்று கொண்டிருந்தபோது காட்டுக்குள்ளே நிம்மதியின்றிக் குழம்பிக்கொண்டிருந்தான் வில்வநாதன்! புதிய சூழ்நிலை, நினைத்தறியாத நிகழ்ச்சிகள், குமுதவல்லியின் வரலாற்றிலே தனது தந்தையின் வரலாறும் சேர்ந்து பொதிந்திருந்த தன்மை, செண்பகசுந்தரியின் பிரிவு, வேணுலிங்கம் யார் என்ற கேள்வி — இப்படியாக அன்று இரவு முழுதும் படுக்கையில் படுத்துக் கொண்டே பன்னிப் பன்னி யோசனை செய்துகொண்டிருந்தான் வில்வநாதன்.

மறுநாட்காலை வில்வநாதன் எழுந்து வெளியே வந்தபோது வேணுலிங்கம் அங்கே இல்லை. சுடலையாண்டி மட்டும் இருந்தான்.

''என்ன தம்பி! சரியாகத் தூங்கலை போலிருக்கே! இப்படி இருந்தா எப்படி? இந்தக் காகிதம் மூச்சூடும் நீங்க சித்திரமா வரைஞ்சு தள்ளுவீகன்னு நாங்க நினைச்சுக்கிட்டிருக்கோம். நீங்க ளானா—'' என்று இழுத்தான் சுடலையாண்டி.

''கவலைப்படாதீர்கள். இனி மேல் அதுதான் வேலை. ஓடி அலைகிற மனசுக்கு அப்படி ஒரு வேலை கொடுக்காவிட்டால் எனக்குப் பைத்தியம் பிடித்துவிடும். இன்றிலிருந்து நான் வேறு எதுவும் செய்யப் போவதில்லை. இறகும் வர்ணமும்தான்!'' என்று கூறினான் வில்வநாதன்.

ஆம்; அன்று பகல் முழுவதும் மடலும் கையுமாகவே இறகைப் பிடித்தவாறு உட்கார்ந்தான் வில்வநாதன்.

வெள்ளித்திரை விமர்சனம்

பீஸ் ஸைல் பாத்

இருபது வருஷங்களுக்கு முன்னால்... இருபது வருஷத்தில் இந்தியத் திரைப் படத்தில் படப்பிடிப்புக் கலை எவ்வளவு தூரம் முன்னேறியுள்ளது என்பதன் அளவுகோலாக இப்படம் ஓரளவு பயன்படலாம்.

'ஹைவண்ட் ஆப் பாஸ்கர்வில்ஸ்' என்ற கதையைக் கானன் டாயில் எழுதாமல் இருந்திருந்தால், அமெரிக்கப் படத் தயாரிப்பாளர்கள் அவசரப்பட்டு அந்தக் கதையை இரண்டு மூன்று தடவை படம் பிடிக்காதிருந்திருந்தால் பீஸ் ஸைல் பாத் படத்தை ரொம்பவும் ரசித்திருக்கலாமோ என்னவோ. கதையும் கதாநாயகனும் அவன் ஓட்டும் கூட்டும் துப்பாக்கியும் மேலை நாட்டுச் சரக்காக இருந்தாலும் படத்தில் வரும் மலையும் மண்ணும் மாடும் ஆடும் மங்கையும் பாரதப் பண்பாட்டோடு காட்சியளிக்கின்றன. வஹிதா ரஹ்மானின் நடிப்பும் தொடிப்பும் ரசிக்கத் தக்கபடி இருக்கின்றன. படப்பிடிப்பு, ஒலிப்பதிவு, இனிய பாடல்கள் இவற்றிற்காக இப்படத்தைப் பார்க்கலாம்.

தன்னுடைய குழப்பங்களை, தனது ஏக்கங்களை, தன் உள்ளத்தில் பொங்கி யெழும் சஞ்சலங்களை, தனது தாபத்தை, தனது வாழ்வின் துயரங்களை யெல்லாம் கட்டிப் பிடித்து இறகிலே ஒருமுனைப்படுத்தினான் வில்வநாதன்! திட்டம் இல்லாமல், வரையறை இல்லாமல், கைக்கு வந்த சித்திரங்களை யெல்லாம் வரைய ஆரம்பித்தான் வில்வநாதன் சித்திர மடலிலே!

காட்டுக் கோவில், அதன் கோபுரம், பழுதடைந்த மதிற்சுவர், புதுப்பிக்கப் படவேண்டிய கலசங்கள், மண்டபங்கள் என்று வரைந்து கொண்டே போனான்! வனத்தின் மத்தியிலே, மான்கள், மயில்கள், ஓடை, அருவி, தடாகம், நந்தவனம், குகை, சிறு சிறு குன்றுகள் — இப்படி ஏதேதோ வரைந்தான். பென்சில் கோடுகள், இறகினால் கீறிய வர்ண விளைவுகள், தோராயமான ஓவியங்கள் என்று காகிதம் காகிதமாக வரைந்தான். ஆனால் ஒவ்வொரு பக்கத்திலும் அந்த முகம்! அந்த எழில் கொஞ்சும் வதனம்! அது மீண்டும் மீண்டும் மறுபடியும், மறுபடியும், திரும்பத் திரும்ப இறகிலே வந்து நின்று காகிதத்திலே குதித்தது! வர்ணங்களிலே தோன்றி யெழுந்து மடலிலே பாய்ந்தது! நூறு நூறு முகங்கள். நூறு நூறு எழிற் கண்கள். ஆனால் எல்லாம் அதே முகம். எல்லாம் அதே கண்கள்! செண்பகசுந்தரி என்ற எழிலரசி இறகிலே நின்று இயங்கினாள்! இயக்கினாள்! மானோடு கொஞ்சினாள். மயிலோடு ஆடினாள். கிளிப்பிள்ளைகளோடு பேசினாள். வில்வநாதனுடைய இறகெனும் அரங்கிலே நின்று நடனமாடினாள். அந்தச் சித்திர மடலின் ஒவ்வொரு பக்கத்திலும் நூறு நூறு வர்ணச் சாயல்களிலே காட்சி தந்தாள் செண்பக சுந்தரி!

நீண்ட நேரம் இவ்வாறு சித்திரப் பாதையிலே சென்று கொண்டிருந்தான் வில்வநாதன். அப்போது ''தம்பி!'' என்று குரல் கேட்டது. வெளியே எங்கோ சென்றிருந்த வேணுலிங்கம், திரும்பி வந்து கொண்டிருந்தான்.

''தம்பிக்கு ஒரு முக்கியமான அதிசயச் செய்தி!'' என்று சொல்லிக் கொண்டே வில்வநாதனுக்கு அருகிலே வந்து நின்றான் வேணு. (தொடரும்)

வட்ட மேஜை

கவனம் வேண்டும்

ராஷ்டிரபதியின் தலைமையில் தலைநகரில் அண்மையில் நடந்த சங்கீத நாடக அகாடமியின் விருது வழங்கும் விழா சில அம்சங்களில் பெருத்த ஏமாற்றத்தை அளித்தது. ஆண்டிவொரு முறை நடக்கிறது இவ்விழா. அதுவும் ராஷ்டிரபதியின் தலைமையின் கீழ்! இம்மாதிரி விழாக்களை நடத்தும் போது சிறு விஷயங்களில் கூட மிகுந்த கவனம் செலுத்த வேண்டியது அவசியமில்லையோ?

பாபநாசம் சிவன் அவர்கள் அகாடமியின் கௌரவ உறுப்பினராகும் சான்றிதழைப் பெறுவதற்காக ஜனாதிபதியின் முன்பு நின்று கொண்டிருக்கும்போது அண்ணாசாமி பாகவதர் அவர்களைக் குறித்த அறிமுக உரையைப் படித்து விழாவின் அழகையே கெடுத்து விட்டார் அகாடமியின் உப தலைவர். அது மட்டுமல்ல. தாம் செய்த தவற்றை உணர்ந்த பிறகும் கூட ஜனாதிபதியிடமோ அவையோரிடமோ மன்னிப்புக் கோரவில்லை. அவையோருக்கு அறிமுகம் செய்வதற்கு முன்னால் அறிமுகம் செய்பவர் கலைஞர்களைத் தாம் அறிமுகம் செய்து கொண்டிருக்க வேண்டாமோ? வரும் ஆண்டுகளிலாவது இவ்விதம் நடக்காதிருக்க இது ஒரு படிப்பினையாக உதவுமா?

இவ்விழாவை யொட்டி வெளியிட்டிருந்த சிறப்பிதழில் பிழைகள் மலிந்திருந்தன. எழுத்துப் பிழைகள் எண்ணிலடங்கா. ''பாகவதரை'' ''பாக்வாட்டர்'' என்றும் ''அரியக்குடியை'' ''ஆர்யகுடி'' என்றும் அச்சடித்து நகைப்பதற்கு வாய்ப்பளித்தனர். எல்லாவற்றிற்கும் மேலாக ஓர் அரிய உண்மையை வெளியிட்டிருந்தனர். ஸ்ரீ சுப்பிரமண்ய பிள்ளை அவர்கள், வைத்தியநாதய்யரிடமிருந்தும், நயினாப் பிள்ளை அவர்களிடமிருந்தும் நாகஸ்வரம் கற்றுக் கொண்டாராம்! காலம் சென்ற மகாவித்வான்களுக்கு இன்று நாகஸ்வரம் கற்பித்து விட்டனர் அகாடமியார்!

தியாகையருக்குப் பிறகு தமிழகத்தில் எண்ணற்ற பாடல்களை மக்கள் செவிக்கு அமுதாக அளித்து வருபவர்களில் உன்னதமான ஸ்தானம் பெற்றவர் பாபநாசம் சிவன் அவர்கள். அப்பேர்ப்பட்ட ஒரு சாகித்யகர்த்தாவை ஒரு சாதாரண பஜனைப் பாடகர் என்ற முறையிலே வர்ணித்திருந்தனர்.

ஹரிகதை பாணியின் முடிசூடா மன்னர் அண்ணாசாமி பாகவதரவர்கள். தியாகராஜரின் பாடல்களைப் பாடும் ஒரு பக்தர் என்று அவரை வர்ணித்திருந்தனர். தமிழகத்தில் தியாகையரை வழிபடாதோர் யார்? தியாகராஜ கீர்த்தனைகளைப் பாடுகிற ஒரே காரணத்திற்காகவா அண்ணாசாமி பாகவதர் அகாடமியின் கௌரவ உறுப்பினராகியிருக்கிறார்?

ஒரு வேண்டுகோள். நாட்டின் தலைவரும், தலைசிறந்த கலைஞர்களும் பங்கு பெறும் இது போன்ற மாபெரும் விழாக்களுக்கு மந்திரிகளும், பாராளுமன்ற அங்கத்தினர்களும் வந்து கௌரவிக்க வேண்டும். அவ்வாறு செய்வார்களேயாயின், அது கலைஞர்களுக்குப் பெருத்த ஊக்கத்தை அளிக்கும்.

புதுதில்லி — சுப்புடு

நரம்புத் தளர்ச்சி

உள்ளச் சோர்வு மற்றும் உடல் பலவீனம் இவைகளைப் போக்கி நல்ல ஆரோக்கியத்தை அளிக்கக்கூடிய ஒரு சிறந்த டானிக்

அறிகுறிகள்

★ நரம்புத் தளர்ச்சி, பலவீனம்
★ வேலை மிகுதியால் ஏற்படும் களைப்பு, உடல் தளர்ச்சி
★ உற்சாகமின்மை & ஞாபகக் குறைவு
★ ரோகம், ஆபரேஷன் மற்றும் நீண்ட நாள் வியாதிக்குப் பின்பு ஏற்படும் பலக்குறைவு
★ ஆழ்ந்த தூக்கமின்மை



57 ஆண்டு அனுபவத்தை பின்னணியில் கொண்டது

ஹக்ஸ்லியின்

நெர்-விகர்

டானிக்

ஃபாஸ்பேட்டுக்கள், விட்டமின்களுடன் கூடிய கிளிஸிரோ பாஸ்பேட்டுக்களை மூலப் பொருளாகக் கொண்டது.

ஹக்ஸ்லி & கோ., (இந்தியா)
25, தலால் தெரு, த. பெ. தெ. 1992, போர்ட், பம்பாய்-1

எல்லா நரம்பு வலிகளுக்கும், கீல் வாயுவினால் ஏற்படும் உபாதைகளுக்கும்

ஹக்ஸ்லியின் **வின்டோஜெனோ**

கீல் வாயு, முதுகு, இடுப்பு பிடிப்பு, மற்றும் நரம்பு வலி மார்ச் சளி போன்ற உபாதைகளுக்கு உடனடியாகக் குணமளிக்கும்

எல்லா கெமிஸ்டுகளிடமும் கிடைக்கும்



ஹக்ஸ்லி & கோ. (இந்தியா)
25, தலால் தெரு, பம்பாய்-1

தென்னிந்தியாவுக்கு விநியோகஸ்தர்கள்

பிடில்லாயர் & கோ (இந்தியா) பிரைவேட் லிமிடெட்
20, அங்கப்பநாயக் தெரு, சென்னை

தாதா & கோ.,
88, நைனியப்பநாயக் தெரு, சென்னை

ஓட்டப்பந்தயம்-6

கதை: டி.எஸ். சுந்தரராஜன். சித்திரம்: செல்வம்




பாரிஜாதம்! இந்த உதவியை...
நன்றி சொல்லவேண்டாம். என்னைக் காதலித்தது வெறும் நடிப்பல்ல என்று உறுதி சொல்லுங்கள் முதலில்...
என்ன, இன்னும் நீ காதலிக்கிறாயா பாரிஜாதம்?
என்ன கேள்வி இது? நீங்கள் யாராக இருந்தாலும் என் கணவர் நீங்களே!
பஞ்சு! காதல் டூயட் பாட இதுவல்ல சமயம்!
வருகிறேன் பாரிஜாதம். காத்திரு கட்டு-வேன் தாலி. என் பெயர் பஞ்சு.
அதே சமயம் பங்களாவுக்குள்...
வாருங்கள் இன்ஸ்பெக்டர். ஒரு போக்கிரி டாக்டராக வேடமிட்டு நடித்தான். அவனைப் பிடித்து வைத்திருக்கிறேன்.
அப்படியா? டாக்டர் சேகர் என்பவரை ரயிலிலிருந்து பிடித்துத் தள்ளிக் கொலை செய்துவிட்டு மருந்துப் பை, பெட்டி, பாஸ்களுடன் மறைந்து விட்டானாம் யாரோ. அந்த ஆள் இவனாக இருக்குமோ?
சந்தேகம் எதற்கு? ஆளை நாலு தட்டு தட்டி விசாரித்தால் தெரிந்துவிடுகிறது.
என்ன, மிஸ்டர் பசுபதி, யாரையும் காணோமே!
ஆ... தப்பிவிட்டானா?
தப்பவிடுவோமா? கொலைகாரன் எங்கிருந்தாலும் பிடித்துவிட மாட்டோமா?
ஆ! என் பஞ்சுவா கொலைகாரர்?



தப்பிச் சென்றவர்கள் நடுவழியில்
ஓடிப் பதி! என்னடா இப்படி உட்கார்ந்து விட்டாய்? பின்னால் போலீஸ் வருகிறது.
நான் வரமாட்டேன்.
உன் மாலதியா? அடிசக்கை! ஏண்டா அந்த நர்ஸுக்கும் உனக்கும் ஏதாவது?
ஆமாம். காதல்! உனக்கும் பாரிஜாதத்துக்கும் ஏற்பட்டதே அதுமாதிரி
உங்கள் காதல் வாழ்க!
ஆனால் ஆறுமுகம் அசையவில்லை. பதிசு மட்டும் தனியே கிளம்பினான்.
சரி, போலீஸில் மாட்டிக் கொள்ளாமல் வந்துசேர். நான் போகிறேன்.
லாரி மெட்ராஸுக்கா போகிறது?
ஆமாம். வாரீங்களா? ஏறுங்க.
பிரபல டாக்டர் சேகர் ரயிலிலிருந்து கீழே தள்ளிக் கொலை செய்யப்பட்டார். கொலையாளி தலைமறைவு. போலீசார் வலைபோட்டுத் தேடுகின்றனர்.
ஐயையோ! கடைசியில் கொலைப்பழி என் தலையில் விடியும் போலிருக்கிறதே...

(தொடரும்)


ஆஹா...
என்னே ஆரோக்கியமளிக்கும் புத்துணர்ச்சி, கோலினுஸின் பாதுகாக்கும் நுரையிலே!
சுறுசுறுப்பாக வாழ்பவர்கள் கோலினுஸைத் தேர்ந்தெடுக்கிறார்கள்...ஏனெனில், நுரைக்கும் தன்மையுள்ள கோலினுஸ் மட்டுமே பற்சிதைவு மற்றும் வாய் நாற்றத்திலிருந்து இரவும் பகலும் பாதுகாப்பளிக்கிறது. ஆகையால் கோலினுஸ் சூப்பர் ஒயிட்டை உங்களுடைய பற்பசையென்று நிச்சயப்படுத்திக்கொள்ளுங்கள்.
தலைநிமிர்ந்த புன்சிரிப்பு—அது கோலினுஸின் புன்சிரிப்பு
அல்லது, வீரியமுள்ள குளோரோபில்லின் களிப்பூட்டும் புத்துணர்ச்சியை நீங்கள் விரும்பினால், கோலினுஸ் குளோரோபில் வேண்டுமென்று கேளுங்கள்.
Kolynos
Kolynos
SUPER WHITE
பற்சிதைவைத் தடுக்கிறது. உங்கள் மூச்சிலே மணம் கமழச் செய்கிறது. உங்கள் பற்களை வெண்மையாக்குகிறது.
Registered User: GEOFFREY MANNERS & CO. LTD.



மைசூர் சாமுண்டி

தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான்


“எருமை என்று ஒரு மிருகம். மந்தம், மடமை, சோம்பல், அறிவின்மை எல்லாவற்றுக்கும் எடுத்துக்காட்டாக விளங்கும் மிருகம் அது. ஆனால் அந்த மிருகத்தை நான் பார்க்கிற போதெல்லாம் அதன் குணாதிசயத்தைக் கண்டு நான் அதிசயித்து நிற்பதுண்டு. எவ்வளவோ காலமாக யோகம் செய்து அதனால் ஒரு சித்தி கைவரப் பெற்ற தத்துவ ஞானியாகவே அது எனக்குக் காட்சி அளிக்கிறது. அக்கம் பக்கங்களில் என்னென்ன நடந்தாலும் அதிலெல்லாம் மனத்தைச் சிதற விடாமல் அவைகளை ஒதுக்கித் தள்ளித் தன் மனத்தை ஒரு நிலையிலே வைத்துக் கொள்ளும் ஆற்றல் பெறுவது என்றால் அது எளிதான சித்தியா என்ன? உலகம் எக்கேடு கெட்டாலும் அதனால் எல்லாம் அதன் உள்ளம் அசையாது. உள்ளத்தை எங்கேயோ பரவ விட்டு விட்டு நின்று விட்டால் அதனை யாராவது அசைக்க முடியுமா என்ன? எத்தனை எத்தனை வண்டிகள், எத்தனை கார்கள் எல்லாம் ஹாரன் அடித்துத்தான் பார்க்கட்டுமே, அதன் சமாதி கலையுமா என்ன? ஆனால் அந்தச் சமாதி கலைந்து ஆனந்த அனுபவத்தையே பெற்று விட்டால் அது போடும் கும்மாளத்துக்குக் குறைவுண்டா? துள்ளி ஓட ஆரம்பித்து விட்டால் அதனைக் கட்ட முடியுமா; இல்லை, கட்டிப் பிடிக்கத்தான் முடியுமா? இன்னும் அது குரல் எழுப்பிவிட்டால் அந்த இன்னிசையில் அது பெறுகிற ஆனந்த அனுபவம் இருக்கிறதே அது ஒரு தனி வகை. தன்னை மறந்த லயத்தனில் வாழும் கவிஞனாக அல்லவா மாறி விடுகிறது. இன்னும் தனக்கென வாழாது பிறருக்காகவே வாழும் பிராணி அது. மக்களுக்கு வேண்டியன எல்லாம் நிஷ்காம்ய நிலையில் நின்று உதவும் ஓர் அருமையான கர்ம யோகியாக அல்லவா அது வாழுகிறது. இந்த உலகத்தின் சந்தடி, இரைச்சல் எல்லாம் அதனை ஒன்றும் செய்வதில்லையே.' இப்படி ஓர் அருமையான விமரிசனம் எருமையைப் பற்றி. இந்த விமரிசனம் என் சொந்தச் சரக்கல்ல. பேராசிரியர் பெர்னாட்ஷா எழுதும் விமரிசனம்தான். இவ்வளவு அற்புதமான பண்பாடுடைய மிருகம் எருமைப்பசுவே ஒழிய எருமைக்கடா அல்ல. எருமைக் கடா சுமக்க முடியாத பாரத்தை ஏற்றினாலும் வண்டியை ஆடாமல் அசங்காமல் இழுத்துச் செல்லும் வலிவுடையது. அதனாலே தான், அது நமது பழங்காலத்திய ஜீப் காராக இருந்திருக்கிறது. இன்று அதனை 'பிரேக் இன்ஸ்பெக்டர்' என்றும் குறிப்பிட்டு அதன் சக்தியைக் கொஞ்சம் குறைவாகவே மதித்திருக்கிறோம்.

இப்படி எருமைப் பசுவையும் எருமைக் கடாவையும் போற்றிப் புகழ்பவர் உண்டு என்றாலும், அந்தப் பழைய புராண காலத்திலே மந்தம், சோம்பல், அறியாமை ஆகியவைகளையெல்லாம் உருவகப்படுத்த எருமையைத் தான் குறித்திருக்கிறார்கள். இல்லாவிட்டால் அறிவே வடிவமான அன்னை பராசக்தி, அறிவின்மையின் பிண்டமான எருமை உருவில் அமைந்த அசுரனுடன் போரிட்டு வென்றாள், அதனைக் கொன்றே தீர்த்தாள் என்று புராணம் எழுதி வைப்பார்களா என்ன? மஹிஷமர்த்தனத்தின் தத்துவமே இது தானே. மனிதனுடைய அறிவின்மை, சோம்பல் எல்லாம் எருமை உருவில் கொதித்து எழுவதையும் அந்த அறிவின்மையையெல்லாம் அடக்கி ஆண்டு, வெற்றி கண்டு அறிவுடைமை ஓங்கி உயர்வதையும் கற்பனை பண்ணுவது தானே மஹிஷமர்த்தினியின் கதை. இந்த மஹிஷமர்த்தினிதான் சாமுண்டி என்ற வடிவில் • மைசூரில் கோயில் கொண்டிருக்கிறாள், ஆம் மஹிஷன் ஊர்தான் மைசூர் என்று குறுகியிருக்கிறது.

ரயிலில் போனால் பங்களூர் சென்று அதன் பின்னும் சென்றால் மைசூரை அடையலாம். பங்களூரிலிருந்து, கோவை, சேலம் முதலிய தமிழ்நாட்டு நகரங்களிலிருந்து காரிலும் பஸ்ஸிலும் சென்று மைசூரை அடையலாம். மைசூர் மஹிஷன் ஊர் என்றாலும் அது ஒரு சௌந்தர்ய நகரம். எங்கு பார்த்தாலும் மாட மாளிகைகள், தோட்டங்கள். ஊரை அடுத்து ஒரு மலை; அதுவே சாமுண்டி மலை. அந்த மலையின் மேலேதான், மஹிஷாசுரனை வென்ற மஹிஷமர்த்தினி, சாமுண்டி கோயில் கொண்டிருக்கிறாள். நாம் நகரத்தை மட்டும் சுற்றிப் பார்க்க வந்தவர்கள் அல்லவே. க்ஷேத்திராடனம் அல்லவா புறப்பட்டிருக்கிறோம். ஆதலால் மலை மீது ஏறி அன்னை சாமுண்டியை முதலில் தரிசித்து விட்டுத் திரும்புவோம். மலை பெரிய மலை யல்ல. மலையின் உயரம் எல்லாம் 3500 அடி உயரமே. மலையை நோக்கி மைசூர் நகரிலிருந்து ஒரு-

பெருஞ் சாலை செல்கிறது. அந்தச் சாலை வழியே இரண்டு மைல் போய்ப் படிக்கட்டுகள் ஏறி மலைச் சிகரத்தை அடையலாம். இந்தப் படிக்கட்டுகள் பதினேழாம் நூற்றாண்டில் மைசூரை ஆண்ட தொட்ட தேவராயர் கட்டினார் என்று கூறுகிறார்கள். இப்படிப் படி ஏறிப் போகும் வழியிலே நல்லதொருங்கல் நந்தி ஒன்று படுத்திருக்கும். அதன் உயரம் 16 அடி. கால்களை மடக்கிப் படுத்திருக்கும் பாவனையில் நந்தி யிருக்கிறது. அதன் கழுத்தில் அணிந்திருக்கும் மணிகளெல்லாம் ஒலிப்பது போன்ற பிரமையை உண்டாக்கும். தஞ்சைப் பெரு உடையார் கோயில் நந்தி இதைவிடப் பெரியதுதான் என்றாலும், அழகிலே இந்த நந்தி சிறப்பானதாகவே இருக்கிறது. இந்த மலைப்படிகள் ஏற இயலாத பெருமக்கள் காரிலேயே மலை மீது செல்லலாம். நான்கைந்து மைல்கள் வளைந்து வளைந்து பாதை செல்லும். நந்தியைக் காண விருப்பமுள்ளவர்கள் மேல் பக்கம் செல்லும் பாதை வழியாகச் செல்ல வேணும். கீழ்ப்பக்கம் செல்லும் பாதை வழியாகச் சென்றால் நந்தியைப் பார்க்க முடியாது.

மலை மீது, மைசூர் மகாராஜா வந்தால் தங்குவதற்கென ஒரு சிறு அரண்மனை கட்டியிருக்கிறார்கள். அங்கு எல்லாம் செல்ல நமக்கு அனுமதி கிடைக்காது. ஆதலால் நேரே சாமுண்டேசுவரி கோயிலை நோக்கியே செல்லலாம். மேற்கு நோக்கிச் செல்லும் பாதை கோயிலை நோக்கித் தெற்கே திரும்பும் சந்திப்பில் நம்மை எதிர்கொண்டுவரவேற்க மகிஷாசுரனே நிற்பான்; கத்தி ஒரு கையும் நாக பாசம் ஒரு கையுமாக ஓங்கி உயர்ந்த வடிவில் நிற்பான், சுதையால் செய்த வடிவில். தலையை எல்லாம் 'பாப்' செய்து கொண்டு அவன் நிற்கும் கோலம் உள்ளத்துக்கு அச்சம் தருவதாகவே இருக்கும். நாம் தாம் அவனையும் கொன்று வெற்றி மாலை சூடிய சாமுண்டியின் சந்நிதிக்கே செல்கிறவர்கள் ஆயிற்றே. ஆகவால் மகிஷனைக் கண்டு அஞ்சாமலே மேல் நடக்கலாம். காரிலே போயிருந்தால் காரைக் கோவிலின் வடபுறம் உள்ள மைதானத்தில் நிறுத்தி விட்டுக் கோவிலின் கீழவாயில் வந்து சேரலாம். வாயிலில் ஒரு நல்ல கோபுரம் அழகு செய்கிறது. கோபுரத்தைப் பார்த்தால் நமது தென்தமிழ் நாட்டுக் கோபுரம்போலவே இருக்கும். கோயில் வாயிலைக் கடந்து உள்ளே சென்றால் ஒரு திறந்த வெளிப் பிராகாரம் இருக்கிறது: அதனையும் கடந்து மேல் நடந்தால் மகாமண்டபம் வந்து சேருவோம். அந்த மகா மண்டபத்திலிருந்தே சாமுண்டேசுவரியைத் தரிசனம் செய்ய வேணும். நான் முன்னரே குறித்தபடி சாமுண்டேசுவரி மகிஷாசுரமர்த்தினியின் வடிவினளே. விஷ்ணு தர்மோத்திரத்தில் இந்தத் தேவியின்வர்ணனை விளக்கமாக இருக்கிறது. தங்க மயமான மேனியும், இளமையும் உடையவளாய்ச் சிம்மத்தின் மேல் உக்கிரமாக அவள் காட்சி தருவாள். இருபது கைகள் கொண்ட இந்த ஈசுவரி சூலம், கட்கம், சங்கு, சக்கரம், கேடயம், பாச முதலிய ஆயுதங்களை ஏந்தியவளாய் இருப்பாள். காலின் கீழ், எருமையுடனும், அசுரத்தலையும் கொண்ட மகிஷன் விழி பிதுங்கிக் கொண்டிருப்பான். அவனைத் தன் கையில் ஏந்திய திரிசூலத்தால் அழுத்திப்



கோயில் கோபுரம்

பிடித்துக் கொண்டிருப்பாள் என்றெல்லாம் இவள் வடிவவர்ணனை செய்யப்பட்டிருக்கிறது. இத்தனை வர்ணனைகளும் சரியாய் இருக்கின்றனவா என்று நாம் தெரிந்து கொள்ள முடியாது. நாம் எட்ட இருந்துதானே அம்பிகையைத் தரிசிக்க முடிகிறது. தங்கக் கவசம் சாத்தி, கோலாகலமாக விளக்குகளெல்லாம் போட்டு அலங்கரித்திருப்பார்கள். இந்தச் சாமுண்டேசுவரிதான் மைசூர் மகாராஜாக்களின் குலதெய்வம். மிகவும் பழமையான கோயிலாக இருந்ததை 1827-ல் மூன்றும் கிருஷ்ணராஜஉடையார் புதுப்பித்திருக்கிறார். அழகான தங்கச் சிம்ம வாகனம் ஒன்றையும் செய்து வைத்திருக்கிறார். ஏராளமான நகைகளையும் செய்து அன்னைக்கு அணிவித்து மகிழ்ந்திருக்கிறார். அதில் எண்பது சமஸ்கிருத தோத்திரங்கள் பொறிக்கப்பட்ட தங்க நக்ஷத்திர மாலிகை மிக விலை உயர்ந்ததாம். இந்தச் சாமுண்டியை ஏதோ உடையார் வம்ச அரச பரம்பரையினர்மட்டுமே வணங்கி வந்தார்கள் என்றில்லை. மைசூரை ஆண்ட ஹைதர் அலியும், அவன் மகன் திப்புசுல்தானும் கூட ஆராதித்திருக்கிறார்கள். அவர்கள் ஆட்சியில் ஆண்டுதோறும் புதுப்புது அணிகளைச் செய்து அனுப்பிக் கொண்டே இருந்திருக்கிறார்கள். அந்த நகைகளெல்லாம் இன்றும் பத்திரமாய்ப் பாதுகாக்கப்பட்டுத் தேவிக்கு அணியப்படுகின்றன என்கிறார்கள். சாமுண்டேசுவரி மகா வரப்பிரசாதியான தெய்வம். ஆம்! மடமையையும், சோம்பலையும் தொலைத்து அருள்புரியும் ஆற்றல் உடையவள் அல்லவா அவள்.

இந்தச் சாமுண்டி மலையிலே, சாமுண்டி கோயிலுக்குத் தென்புறம் ஒருபழைய கோயில்

இருக்கிறது. அங்கு கோயில் கொண்டிருப்பவர் மகாபலேசுவரர் என்னும் சிவ மூர்த்தம். இக்கோயிலை 1128-ல் ஹொய்ஸல மன்னன் விஷ்ணு வர்த்தனன் கட்டினான் என்றும், பின்னர் சந்திரகிரியிலிருந்து அரசாண்ட விஜயநகர நாயக்க மன்னன் 1620-ல் விரிவாக்கினான் என்றும் சரித்திர ஏடுகள் கூறுகின்றன. சாமுண்டி மலையில் ஏறுவதற்கு மாலை நேரம் உகந்த நேரம். சாமுண்டேசுவரியையும் இரவிலே விளக்கொளியிலே கண்டு வணங்குவது தான் சிறப்பாக இருக்கும். அந்த இரவிலே அந்த மலைமேலே நின்று, மின்விளக்குகளால் ஜோதி மயமாகப் பிரகாசிக்கும் மைசூர் நகரைக் காண்பதும் கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும்.



மஹிஷாசுரன்

மைசூர் நகரிலே, சாமுண்டேசுவரியைத் தரிசித்த பின் பார்க்க வேண்டியவை எவ்வளவோ உண்டு. என்றாலும், மைசூர் மகாராஜாவின் அரண்மனையைப் பார்க்காமல் ஊர் திரும்புதல் கூடாது. இது ஒரு பெரிய அரண்மனை. இந்த அரண்மனையின் சிகரம் 145 அடி உயரம். இந்த மாளிகையைப் பல வர்ணக் கற்களால் கட்டியிருக்கிறார்கள். இக்கட்டிடம் கட்டப் பதினைந்து வருஷங்கள் ஆயின என்றால் அதன் விஸ்தாரத்தைப்பற்றி அதிகம் விவரிப்பானேன்? இந்த அரண்மனையை மின் விளக்குகளால் அலங்கரித்திருக்கிறார்கள். இந்த மின்விளக்கு அலங்காரத்தைக் காண வேண்டும் என்றால் நவராத்திரி, தசரா காலத்தில் தான் செல்ல வேண்டும். பத்து நாட்களும் விளக்கு அலங்காரம் உண்டென்றாலும் கடைசி நாளாகிய விஜயதசமி அன்று மகாராஜா பவனி வருகின்ற காட்சி கோலாகலமானதாக இருக்கும். ரத, கஜ, துரக, பதாதிகளுடன் பண்டைய மகாராஜாக்கள் பவனி புறப்பட்டார்கள் என்பார்களே அது போல் யானைமீது அம்பாரியில் மகாராஜா வீற்றிருக்க, யானை குதிரை ஒட்டகம் எல்லாம் பவனியில் கலந்து கொள்ளும். அதன் பின் அரண்மனை முற்றத்தில், மகாராஜா தர்பார் நடத்துவார். அரண்மனை உத்தியோகஸ்தர்கள் எல்லாம் கறுப்புக் கோட்டும் தலைப்பாகையும் அணிந்து வந்து மகாராஜாவின் தர்பாரை அலங்கரிப்பார்கள். இந்தத் தசராப் பவனி போல் வேறு எங்கும் பவனி நடப்பதில்லை என்கின்றனர்.

இன்னும் ஒன்று. மைசூர் சென்று காவிரியில் கட்டியுள்ள கண்ணம்பாடி அணையையும், பிருந்தாவனம் என்னும் பூந்தோட்டத்தையும் காணாமல் திரும்பினால், இந்த வாழ்நாளிலே பெறற்கரிய பேறு ஒன்றினை இழந்தவர்களாவோம். இந்தக் கண்ணம்பாடி அணையே கிருஷ்ண ராஜ சாகரம் என்றும் அழைக்கப் படும். இந்த அணை ஒன்றே முக்கால் மைல் நீளம். 124 அடி உயரம் வரை தண்ணீர் கட்ட வகை செய்திருக்கிறது. ஒரு லக்ஷத்து இருபதாயிரம் ஏக்கர் நஞ்சை நிலத்துக்கு இந்த அணையிலிருந்து தண்ணீர் கிடைக்கிறது. இந்த அணைக்கட்டின் கீழ்ப் பாகத்தில்தான் அந்தப் புகழ் பெற்ற பூங்கா — பிருந்தாவனம் அமைக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பூங்கா முழுதும் நீர் ஊற்றுக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. மின்சாரத்தைக் கொண்டு என்னென்ன வர்ண ஜாலங்கள் செய்யலாமோ அத்தனையும் செய்யப்பட்டிருக்கின்றன. இந்த அணைக் கட்டில் ஒரு சிலை, காவிரித்தாய், கையில் கலசம் ஏந்தி நிற்பது போல. அக்கலசத்திலிருந்து தண்ணீர் வழிந்தோடிக் கொண்டேயிருக்கும்படி செய்திருக்கிறான் சிற்பி. காவிரித் தாய் அழகுச் சிலையாக இல்லாவிட்டாலும், அமைத்திருக்கும் அழகு சிறப்பாயிருக்கிறது. மைசூர் சென்று சாமுண்டேசுவரியை வணங்கித் திரும்பும்போது அன்னை காவிரிக்கு நாம் வணக்கம் செலுத்த வேண்டாமா? அவள் தானே உலகு புரக்கும் அன்னையாக இருப்பவள்.

ஆங்கிலத்தில் பாரதி பாடல்

கல்கத்தா, பாரதி தமிழ்ச் சங்கத்தினர் கவியரசர் பாரதியின் 81வது பிறந்த தின விழாவை வழக்கம் போல் வெகு விமரிசையாகக் கொண்டாடத் திட்டமிட்டுள்ளனர். ஆங்கிலத்தில் பாரதியின் கவிதைகளை மொழி பெயர்த்து உலகினுக்குத் தரும் பெரும் பணியை ஊக்குவிப்பதற்காகச் சிறந்ததொரு போட்டியை நிகழ்த்தவிருக்கிறார்கள். முதற்பரிசு ரூ. 100. இரண்டு இரண்டாவது பரிசுகள் ரூ. 50. நான்கு மூன்றாவது பரிசுகள் ரூ. 30 தருவதென்றும் தீர்மானித்துள்ளார்கள். கவிதைகளின் மொழிபெயர்ப்புக்கள் 15-10-62க்குள் அவர்கள் காரியாலயத்துக்குப் போய்ச் சேர வேண்டும். போட்டி விதிகள் பற்றி அறிய விரும்புபவர்கள் செயலாளர், பாரதி தமிழ்ச் சங்கம், 93. ஏ. ராஷ்பிஹாரி அவென்யூ, கல்கத்தா-26 என்ற விலாசத்துக்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

தந்திதனை

தெளிவாய்

எழுதுக

தெளிவுற எழுதாத் தந்தியின் விளைவு குழப்பமாம்
சுருக்கி, சிறுக்கி அலைவுறச் செய்வரோ தந்தியை!



உங்களுக்கு
சிறந்த முறையில் சேவை செய்ய
எங்களுக்கு உதவுங்கள்

தபால் தந்தி இலாகா

DA-62/151

பத்தினிக் கோட்டம்

அத்தியாயம் மூன்று

முச்சந்தியில் மூடுமந்திரம்

வில்வேலிக்கு உடம்பெல்லாம் எரிந்தது. மாபெரும் சளுக்கிய சாம்ராஜ்யத்தின் விருர்ந்த வராகக் கொடியை, கேவலம் ஓர் இடையன் — அதிலும் குடிமை யுரிமையைப் பறிகொடுத்து விட்ட ஓர் அடிமை மகன் — தன் காலடியில் விரித்துப் போட்டுப் படுத்திருப்பதா? செம்மண் புழுதி படிந்த சுமை தாங்கிக் கல்லின்மேல் தலையையும் உடம்பையும் வெறுமனே உருட்டி விட்டுக் காலுக்கு மட்டும் விரிப்பாக இக்கொடியை இவன் பயன்படுத்தியிருப்பதற்குக் காரணம் என்னவாயிருக்கும்? கைக்குக் கிடைத்ததை ஏதோ துணியாக எண்ணி அதை விரித்துப் போட்டுப் படுத்த பின், தூக்கக் கிறக்கத்தில் அது தானாகவே நழுவிச் சுருண்டு காலடிக்குப் போய் விட்டிருக்குமா? அல்லது சளுக்கிய நாட்டின்மீது கொண்ட வன்மத்தால் அதன் கொடியை அவமதிக்க வேண்டுமென்ற வெறி யுணர்ச்சியுடன் இப்படிச் செய்திருப்பானா? தலைசாய்த்துப் படுக்க இடமின்றிப் போன தரித்திர நிலையில் தன்னந் தனியாக உறங்கும்வேளையிலும் இவனுடைய அந்நிய எதிர்ப்புணர்ச்சி இத்தன்மையதாய்ச் செயல்படுமானால் இவன் எவ்வளவுபெரிய குடிமைப் பற்றுக் கொண்ட பயங்கர வெறியனா யிருப்பான்!...

ஜெகசிற்பியன்



அனல் துண்டங்களெனப் பழுத்துச் சிவந்த கண்களை உருட்டி விழித்துப் பார்த்துக்கொண்டு நின்ற தளபதி வில்வேலியின் மனம், கட்டுமீறிய சினத்தால் குமுறிக் கொந்தளித்தது. தாம் வந்த காரியத்தையும் மறந்து, அந்த வாலிபனை அக்கணமே இரு துண்டங்களாக வெட்டியெறிய வேண்டுமென்ற கோபாவேசத்துடன் உடைவாளை உருவப் பின்னால் நகர்ந்தார்.

அதே சமயம் —

''வாழ்க, வராகக் கொடி! ஓங்குக, சளுக்கிய சாம்ராஜ்யம்!'' என்று கனவில் உளறுபவனைப் போல் உளறிக்கொண்டே புரண்டு படுத்த அந்த வாலிபன், மீண்டும் குறட்டை விட்டுத் தூங்க ஆரம்பித்தான்.

இதைக் கேட்டுத் திடுக்குற்ற வில்வேலி, உருவிய வாளைச் சட்டென்று உறையிலிட்டு விட்டு, உடலும் மனமும் சில்லிட அவ்வாலிபனை உற்று நோக்கினார். ஒரு கணம் அவருக்கு ஒன்றுமே புரியவில்லை. பிறகு ஏதோ முடிவுக்கு வந்தவராய் இரு கைகளையும் இடுப்பின்மேல் ஊன்றிக்கொண்டு செருக்கும் மிடுக்குமாகத் தலைநிமிர்ந்து காட்டுப் பன்றி உறுமுவது போல் ஒரு கனைப்புக் கனைத்தார்.

இந்தக் கனைப்பொலியால் உலுப்பப் பட்ட வாலிபன் பதறியடித்துக் கொண்டு எழுந்து உட்கார்ந்து, நெடு மரம்போல் எதிரே நின்ற வில்வேலியைத் திருதிருவென விழித்துப் பார்த்தான். மறுகணம், தன் காலடியில் கிடந்த கொடிக் கம்பைத் தூக்கிப் பிடித்த வண்ணம், ''வாழ்க, வராகக் கொடி! ஓங்குக, சளுக்கிய சாம்ராஜ்யம்!'' என உரத்த குரலில் கூவிக்கொண்டே சுமைதாங்கிக் கல்லின் மேலிருந்து கீழே தாவிக் குதித்துத் தலைதெறிக்க ஓட ஆரம்பித்தான்.

இதைக் கண்டு அம்பெனப் பாய்ந்து சென்ற வில்வேலி அவனை வெடுக்கென்று பற்றி இழுத்து நிறுத்தினார்.

வெலவெலத்து நின்ற வாலிபன் அவரைப் பயப்பிராந்தியுடன் மேலுங்கீழுமாகப் பார்த்துக்கொண்டே நடுங்கும் குரலில், ''ஐயா, பல்லவ வீரரே! தயவுசெய்து என்னை ஒன்றும் செய்யாதீர்கள். குற்றத்தை ஒப்புக் கொள்கிறேன். நான் உங்கள் பல்லவ நாட்டின் துரோகியாகி விட்டது உண்மைதான். வீரச் சளுக்கிய மாமன்னர் விக்கிரமாதித்தரே இப்போது என் தலைவர். அவரது குடிமகனாயிருப்பதில் நான் பெருமையடைகிறேன்'' என்று உளறினான்.

வில்வேலிக்கு ஓரே வியப்பாகி விட்டது. அவர் அவனைக் குறுகுறுவென உறுத்துப் பார்த்தார்.

சற்றே தென்பு பெற்றவன்போல் கொடிக்கம்பை இறுகப் பற்றிக்கொண்டு நிமிர்ந்து நின்ற வாலிபன், ''ஏனய்யா, பல்லவ வீரரே! இந்த ஏழை இடையனின் பேச்சைக் கேட்டு ஏன் இப்படித் திகைத்து நிற்கிறீர்? வெட்கப்படுகிறீரா? வேதனையடைகிறீரா? அல்லது கோபத்தால் குமுறிக் கொந்தளிக்கிறீரா? எதுவானாலும் எனக்குக் கவலை இல்லை; ஏனென்றால், நான் உயிருக்குத் துணிந்தவன்!'' என்று அலட்சியமாகக் கூறி முகத்தை வெடுக்கென வேறு புறம் திருப்பிக் கொண்டான்.

ஓரடி முன்சென்ற வில்வேலி அவன் தோளைப் பிடித்துக் குலுக்கி, ''ஏய்! என்ன கதை அளக்கிறாய்? யார் நீ?'' என்று அடித்தொண்டையில் அதட்டிக் கேட்டார்.

''வாழ்க, வராகக் கொடி! ஓங்குக, சளுக்கிய சாம்ராஜ்யம்!'' என்று கொடிக் கம்பை உயர்த்திப் பிடித்துக் கூவிய வாலிபன், விறைப்பாகத் திரும்பி அலட்சியமாகச் சிரித்துக்கொண்டே, ''நல்ல கேள்வி கேட்டீரய்யா, பல்லவ வீரரே! அன்னியரிடம் நாட்டைப் பறி கொடுத்து விட்டதால் நாங்களெல்லாம் அந்நியராகி விட்டோம் — அதனால்தான் என்னைப் பார்த்து, 'யார் நீ' என்று கேட்கிறீர் — அப்படித்தானே? என்னைப் பொறுத்தவரையில் நீர் நினைப்பது முற்றிலும் சரியே! என் போன்று இன்னும் எத்தனை எத்தனையோ வாலிபர்கள் உமக்கும் உமது பல்லவ நாட்டுக்கும் அன்னியராகிச் சர்வ வல்லமை பொருந்திய சளுக்கிய விக்கிரமாதித்தரைத் தங்கள் வீரத் தலைவராக ஏற்றுக் கொண்ட சேதியை விரைவில் கேள்விப்படத்தான் போகிறீர்!'' என்றான். ''ஹ்ம்! வீரராம் வீரர்! போர் முனையில் புறமுதுகிட்டு ஓடிய கோழை மன்னன் பரமேசுவரவர்மனிடம் கை கட்டிச் சேவகம் செய்த போலி வீரர் தானே நீர்? அதனால்தான் போர்க்களத்தில் காட்டியிருக்க வேண்டிய வீரப் பிரதாபங்களையெல்லாம் போக்கற்றுக் கிடக்கும் என் போன்ற ஏழைக் குடி மக்களிடம் காட்ட வந்திருக்கிறீர்! போமய்யா, போம்! மாமன்னர் விக்கிரமாதித்தரிடம் மண்டியிட்டு மன்னிப்புக் கோரி, பிழைக்கும் வழியைப் பார்த்துக் கொள்ளும், போம்! அதுதான் புத்திசாலித்தனம்!'' — வெறுப்புடன் இப்படிச் சொல்லித் தன் தோளைக் குலுக்கிக்கொண்ட அவன், பழையபடி

படுத்துறங்கச் சுமைதாங்கிக் கல்லை நோக்கி நடக்க முற்பட்டான்.

சினந்து எழுந்த வில்வேலியின் நெஞ்சம் இப்போது மகிழ்ச்சியால் மலர்ந்து குளிர்ந்தது. பரிவுடன் அவ் வாலிபனைப் பார்த்த அவர், ''தம்பி, பாராட்டுகிறேன் உனது நேர்மைப் புத்தியை! நீ நல்லவன்; மிக மிக நல்லவன்!'' என்று கூறிக்கொண்டே அவன் முதுகைத் தட்டிக் கொடுத்து, ''ஆனால், ஒரு சந்தேகம்....'' என இழுத்தார்.


சட்டென்று திரும்பிய வாலிபன் அவரை வெறித்து நோக்கினான்.

''ஆமாம்; இந்த வராகக்கொடியை நீ வைத்திருப்பதன் காரணம் என்ன?''

''ஓ! ...... இது கூடவா உமக்குத் தெரியவில்லை? இந்த வராகக் கொடியின் முன்னே, விடேல் விடுகு என்னும் விடைகொடியைத் தூக்கிப் பிடிக்கச் சக்தியற்றுப் போன உம் போன்ற பல்லவ வீரர்களின் கெடுபிடிகளிலிருந்து என்னைக் காப்பாற்றிக் கொள்ளவே இதனை ஏந்தி நிற்கிறேன்! இந்த வராகக் கொடிதான் இப்போது என் உயிரைக் காத்து வரும் வச்சிராயுதம்! எங்கே, இதை எதிர்த்து நில்லும், பார்க்கலாம்? எனக்குத் தெரியாதா, இக் கொடியைக் கண்டாலே நீங்களெல்லாம் குலைநடுங்கி ஓடி ஒளியும் விஷயம்?'' என்று கூறி முகத்தைச் சுளித்த வாலிபன், சட்டெனத் தன் கையிலிருந்த கொடிக் கம்பை உயர்த்திப் பிடித்து, ''வாழ்க, வராகம்! ஓங்குக, சளுக்கிய நாடு!'' என்று உரத்த குரலில் கூவினான்.

அவன் போட்ட கூச்சலில் வில்வேலியே அதிர்ந்துவிட்டார். உள்ளூறப் பூரித்துப் புளகித்த அவர், ''அது சரி, தம்பி! சளுக்கிய நாட்டின்மீதும் அதன் மன்னர்மீதும் இத்தனை பற்று வைத்திருப்பதாகச் சொல்லும் நீ, அதை நம்பும்படியாக நடந்துகொள்ளவில்லையே? உன் பேச்சு வேறு, செயல் வேறாக அல்லவா இருக்கிறது? இல்லையானால், சற்றுமுன் இந்த வராகக் கொடியைக் காலடியில் விரித்துப் போட்டுப் படுத்திருந்திருப்பாயா? உங்கள் நாட்டுக் கொடியை இப்படித்தான் நீங்களெல்லாம் உபயோகப்படுத்துவது வழக்கமா? யாரை ஏமாற்ற இம்மாதிரி வேஷம் போட்டு நடிக்கிறாய்?'' என்று கேட்டார். அவரது கடைசிக் கேள்வியில் கடுமை ஏறிக் கனன்றது.

''என்ன சொன்னீர், ஐயா? என் உயிரினுமினிய இந்தக் கொடியைக் காலடியில் விரித்தா படுத்திருந்தேன்? இருக்காது; இருக்க முடியாது!'' என்று பயந்த குரலில் குமறிய வாலிபன் சட்டென நிமிர்ந்து, ''ஓ...அப்படித்தான் இருக்கட்டுமே! அதனாலென்ன தவறு? எதுவொன்றின் மீதும் பக்தி முற்றிப் போனால் தலைகால் தெரியாமலாகி விடும் என்பதை நீர் கேள்விப்பட்டதில்லையா?'' என்று கூறிக் கலகலவெனச் சிரித்தான்.




வில்வேலி இதைக் கேட்டு மீண்டும் மனம் குளிர்ந்தார். ''மகிழ்ச்சி வாலிபனே, மெத்த மகிழ்ச்சி!'' என்று உற்சாகத்தோடு நகைத்தவர், ''சரி; என்னுடன் புறப்பட்டு வா! உன்னால் எனக்கு ஒரு காரியம் ஆக வேண்டியிருக்கிறது!'' என்று பரிவுக் குரலில் அவனை அழைத்தார்.

''என்ன! உம்முடன் நான் வரவேண்டுமா? ஏன்? எதற்காக?''

''எனக்கு நீ ஓர் உதவி செய்ய வேண்டும்...''

''தெரியுமய்யா, தெரியும். என்னை எதற்காக அழைக்கிறீர் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். காஞ்சிக் கோட்டையைக் கைப்பற்றிப் பல்லவ நாட்டின் தென் எல்லை வரையில் திக்விஜயம் செய்து வரும் சளுக்கிய மன்னர் விக்கிரமாதித்தரைத் திடீரென்று தாக்கிப் போரிட்டு விரட்டியடிக்க, எங்கோ இரகசியப் படை திரட்டும் வேலை நடக்கிறது; அந்தப் படையில் சேர்ப்பதற்காக என்னை அழைக்கிறீர், அப்படித்தானே? அது நடவாதய்யா, நடவாது. அதற்கு நான் ஒருபோதும் சம்மதிக்க மாட்டேன். போய் வாரும்.''





வாலிபனின் இந்த முரண்டுப் பேச்சைக் கேட்டுக் கடகடவென்று நகைத்தார் வில்வேலி. ''ஓகோ! அப்படியொரு முயற்சி ஆரம்பமாகியிருக்கிறதா? அதை முளையிலேயே கிள்ளியெறிய எங்களுக்குத் தெரியும்!'' என்று சர்வ அலட்சியமாகக் கூறிப் பேய்ச் சிரிப்புச் சிரித்தார்.

திடுக்குற்றுத் திரும்பிய வாலிபன் அவரைத் திரு திருவென விழித்துப் பார்த்தான். ''என்ன சொன்னீர்கள் ஐயா? அந்த முயற்சியைக் கிள்ளி எறியப் போகிறீர்களா? அப்படியானால் நீங்கள்.... யார்?''

உடல் குலுங்கச் சிரித்த வில்வேலி அமர்த்தலாகச் சொன்னார்: ''பயப்படாதே, தம்பி! நான் பல்லவ வீரனல்ல; நீ உன் வீரத் தலைவராக ஏற்றுக் கொண்டிருக்கிறாயே அந்தப் பேரரசர் விக்கிரமாதித்தரின் பிரதம தளபதி வில்வேலி நான்!''

நடுநடுங்கிப் போன வாலிபன் இரு கைகளை



கே. டி. ஆர். வாசனாதி திரவிய சாலையின் நிர்வாகி திரு மா. வரதராஜன் அவர்களின் சகோதரி சௌ பிரபாவதிக்கும், டாக்டர் ராஜேந்திரனுக்கும் திருமணம் நடந்தது.



எல். ஐ. ஸி. வேங்கடாசலம் அவர்களின் புதல்வி சௌ சாரதாம்பாளுக்கும் திரு நாராயணனுக்கும் ஸ்ரீ வில்லிப்புத்தூரில் விவாகம் நடந்தது.

யும் நெஞ்சோடு குவித்துக் கொண்டு, "உண்மைதானா? என் செவியில் இப்போது விழுந்தவை யெல்லாம் உண்மை தானா?" என்று குழறினான்.

மார்பை நிமிர்த்திக் கம்பீரமாக ஒரு கனைப்புக் கனைத்த வில்வேலி, "அதிர்ஷ்டக்கார வாலிபனே! நேரமாகிறது. சீக்கிரம் என்னோடு புறப்பட்டு வா!" என்றார் கட்டளையிடும் குரலில்.

"எங்கே ஐயா என்னை அழைக்கிறீர்கள்?" என்று மிகுந்த பணிவுடன் வினவினான் வாலிபன்.

"பிறகு அதைச் சொல்கிறேன். பேசாமல் புறப்படு."

"மறுத்துப் பேசுவதற்கு மன்னியுங்கள் ஐயா! நான் காஞ்சிக்குப் போய், சளுக்கியத் தலைவர்களைச் சந்தித்து அவர்களின் படையில் சேர்வதற்காக, என் உற்றார் உறவினர்களையெல்லாம் விரோதித்துக் கொண்டு ஊரை விட்டுக் கிளம்பியிருக்கிறேன். விடியும்வரை இங்கே படுத்துக் கிடந்து, விடிந்ததும் புறப்படுவதாகத் திட்டமிட்டிருக்கிறேன். எனவே...."

"அவ்வளவு தானே? அதைவிடச் சிறந்த பதவியில் உன்னை நான் அமர்த்துகிறேன்; கவலைப்படாமல் என்னோடு வா!" என்று மகிழ்ச்சியுடன் சொல்லிக் கொண்டே அவ் வாலிபனின் தோளைத் தட்டி முன்னால் தள்ளி விட்டுப் பின்னால் நடக்க ஆரம்பித்தார் தளபதி வில்வேலி.

கால்கள் பின்னிடத் திரும்பித் திரும்பிப் பார்த்தவாறு அவரோடு நடந்தான் வாலிபன்.

அவர்கள் சென்ற சிறிது நேரங் கழித்து, அந்தச் சிறிய சாலையின் வட திசையிலிருந்து நான்கு பேர் வெகு வேகமாக வந்தனர். சுமைதாங்கிக் கல் அருகில் நெருங்கிய அவர்கள் தயங்கி நின்று யாரையோ அவசரமாகத் தேடுவதுபோல் சுற்றுமுற்றும் திரும்பிப் பார்த்தனர். பிறகு அச்சுமை தாங்கிக் கல்லின் அடியிலும், பக்கவாட்டுக்களிலுமாகக் குனிந்து சாய்ந்து நோக்கி விட்டு, நால்வரும் நெருங்கி வந்து மிகத் தணிந்த குரலில் பேசினர்:

"இந்தச் சுமைதாங்கிக் கல்தானா? அல்லது......"

"சந்தேகமில்லை; இதே கல்தான். 'ஐம்பதாவது புள்ளடிக் கல்லுக்கு நேரெதிரே உள்ள சுமைதாங்கிக் கல்' என்று ஓலையில் குறித்திருந்ததே!"

"பின்னே, அவரை இங்கு காணோமே, என்ன செய்வது?"

"நாம் முன்னதாக வந்து விட்டோமோ, என்னவோ!"

"இல்லை; அவர் குறிப்பிட்ட நேரம் இதுதான்."

"அப்படியானால் சற்றுக் காத்திருந்து பார்ப்போமா?"

"வேண்டாம். அந்த உறையூர்ச் சாலையின் முச்சந்தியில் நாம் பார்த்த விஷயம் என்ன ஆயிற்று என்பதைக் கவனித்துவிட்டுத் திரும்பி வருவோம்!"

"ஆமாம்; அதுதான் நல்ல யோசனை."

அவர்கள் நால்வரும் அங்கிருந்து புறப்பட்டனர்.

கரடு முரடான கொடிப் பாதையில் குதிரையின் கடிவாளக் கசையைப் பற்றியவண்ணம் நடந்துகொண்டிருந்த சளுக்கியத் தளபதி வில்வேலி, எதையோ நினைத்துக் கொண்டவர் போல் தமக்கு முன்னே நடந்து செல்லும் வாலிபனைப் பார்த்து, "தம்பி! உனக்குக் குதிரையேற்றத்தில் பயிற்சி உண்டல்லவா?" என்று நைச்சியமான குரலில் கேட்டார்.

அவசரமாக ஏதோ சொல்ல வாய் எடுத்த வாலிபன் சட்டென்று அதை நிறுத்திவிட்டு ஒரு கணம் தயங்கினான். பிறகு கைகளைப் பிசைந்து உடம்பை நெளித்துத் தலை குனிந்தவாறு, "என்னய்யா, இப்படிக் கேட்கிறீர்கள்? பிறந்தது முதல் நேற்றுவரை ஆட்டு மந்தைகளின் பின்னாலேயே சுற்றிக்கொண்டிருந்த இந்த எளிய இடையன், குதிரையேற்றப் பயிற்சி பெற முடியுமா? என் வாழ்நாளில் குதிரையைக் கண்ணால் கண்டிருப்பதே இரண்டொருமுறைதான் இருக்கும்!" என்று வெட்கக் குரலில் சொல்லிக்கொண்டே, தன் அருகில் நடந்து வந்த குதிரையின் முதுகைப் பயப்பிராந்தியுடன் தொட்டுக் கண்ணில் ஒற்றிக்கொண்டான்.

ஏதோ ஒரு பெரிய இளிவரல் பேச்சைக் கேட்டவர்போல் உடல் குலுங்கச் சிரித்த வில்வேலி, "இது நல்ல வேடிக்கை!" என்று கூறி மீண்டும் நகைக்கலானார்.

"ஏனய்யா, சிரிக்கிறீர்கள்?" என்று கவலையுடன் வினவினான் வாலிபன்.

"ஒன்றுமில்லை, தம்பி! எனக்காக இவ்வளவு தூரம் நடந்து வரும் உன்னை, என் குதிரைமீது ஏறி வரச் சொல்லலாமா என்பதற்காகத்தான் அப்படிக் கேட்டேன்!" என்று விஷமப் புன்னகையுடன் கூறினார் வில்வேலி.

அந்த நெடுஞ்சாலையில் அவர்கள் இருவரும் ஏறினர். வாலிபனை முந்திக்கொண்டு முச்சந்தியை நோக்கி விரைந்த வில்வேலி, அங்கு இளவரசி உத்தமசீலியின் சிவிகை இல்லாததைக் கண்டு, அதிர்ச்சியுற்று அப்படியே நின்றுவிட்டார்!

அத்தியாயம் நான்கு

பட்டோலை கண்டான்

'இளவரசியின் சிவிகை எங்கே? அவள் எங்கு போயிருப்பாள்? நான் திரும்பி வர நேரமானதால் பொறுமை இழந்து இம்முச்சந்தியில் பிரியும் மூன்று சாலைகளில் ஏதேனும் ஒன்றைப் பற்றித் தன் பிரயாணத்தைத் தொடர்ந்து விட்டிருப்பாளா? அல்லது வழிப்போக்கர் யாரிடமாவது விவரம் கேட்டறிந்து உறையூருக்குப் புறப்பட்டு விட்டிருப்பாளா?'

குழம்பித் தவித்தார் வில்வேலி. பரபரப்புடன் அங்குமிங்குமாக ஓடிப் பார்த்தார். காரிருள் சொரியத் தொடங்கிய அந்த முன்னிரவு நேரத்தில், கட்புலனைக் கொண்டு சாலைகளின் தொலை தூரத்தைத் துழாவிக் கணிக்க அவரால் இயல வில்லை. தலையைத் தாங்கிப் பிடித்த வண்ணம் முச்சந்தியின் நடுவில் மரமாய்ச் சமைந்து நின்று விட்டார்.

'எந்தப் பக்கம் இளவரசியைத் தேடிப் போவது? வளைவாழ் எலிகள் போல் தலைமறைவாகச் சுற்றித் திரியும் எதிரிகளில் யாரேனும் அவளைக் கடத்திச் சென்று விட்டிருப்பார்களோ? இப்படி நடக்கும் என்று தெரிந்துதான் மாமன்னர் விக்கிரமாதித்தர் முன்னெச்சரிக்கையாக எனக்கு ஓலை அனுப்பினாரோ? ஆந்திர இளவரசியின் மூலம் இந்தப் பல்லவ நாட்டில் ஏதேதோ பெரிய காரியங்களைச் சாதிக்கத் திட்டமிட்டிருக்கும் அவர், இந்தச் செய்தியைக் கேள்விப்பட்டால் எரிமலையாகி விடுவாரே! ஆந்திர மன்னர் விஷ்ணுவர்த்தனருக்குத் தெரிந்தாலோ ஒரு பெரிய அரசியல் நெருக்கடியே ஏற்பட்டு, தாயாதிகளுக்குள் போர் மூண்டு விடுமே? இவ்வளவுக்கும் காரணமான என் கதி என்ன ஆகும்?'

சாட்டையடி பட்டவர் போல் உடம்பை நெளித்துக்கொண்டு திரும்பி ஓடி வந்தார் தளபதி வில்வேலி.

சாலையின் ஓரம் வியப்பும் திகைப்புமாக நின்று கொண்டிருந்த வாலிபன், "என்ன ஐயா, யாரைத் தேடுகிறீர்கள்?" என்று வெகு அக்கறையாகக் கேட்டுக்கொண்டே முன்னால் வந்தான்.

மேல் மூச்சு வாங்க விரைந்து வந்த வில்வேலி, "சீக்கிரம் சொல்! இந்த முச்சந்தியில் பிரியும் மூன்று சாலைகளும் எந்தெந்த ஊருக்குப் போகின்றன?" என்று படபடத்த குரலில் வினவினார்.

ஒரு கணம் தயங்கிய வாலிபன் பணிவுப் புன்னகையுடன், "என்னை ஏதோ காரியமாக அழைத்து வந்தீர்களே, அதைச் சொல்லுங்கள் ஐயா!" என்று கேட்டான்.

வில்வேலிக்குக் கோபம் குமுறிவிட்டது. முரட்டுத்தனமாக அவன் தோளைப் பிடித்துக் குலுக்கி, "ஏய், நான் கேட்கும் விவரத்தைச் சொல்லப் போகிறாயா, இல்லையா?" என்று உறுமிக்கொண்டே தம் உடை வாளின்மேல் கையைப் போட்டார்.

பயந்து நடுங்கிய வாலிபன் ஓரடி பின்னால் நகர்ந்து, "நீங்கள் என்ன கேட்டீர்கள் ஐயா? இந்தச் சாலைகள்

எங்கெங்கு போகின்றன என்னும் விவரம்தானே?'' என்று குமுறினான்.

''ஆமாம், சீக்கிரம் சொல்!'' என்று அதட்டினார் வில்வேலி.

தலையைச் சொறிந்தவாறு சற்று நேரம் ஏதோ யோசனை செய்த வாலிபன் சட்டென்று நிமிர்ந்து, ''இதோ, இந்த வலப் பக்கம் பிரியும் முதல் சாலை, பெருவளநல்லூருக்குச் செல்கிறது; அதற்கு அடுத்துப் பிரியும் நடுச்சாலை, தவத்துறை (லால்குடி) வழியாகப் பல்லவபுரம் போகிறது; அதற்கப்பால் பிரியும் மூன்றாவது சாலை உறையூருக்குச் செல்கிறது.....'' என்று சொல்லிக் கொண்டிருக்கும்போதே, அங்கிருந்து பாய்ந்து சென்ற வில்வேலி தம் குதிரை மீது தாவியேறினார்.

வாலிபனும் அவரைப் பின் தொடர்ந்து ஓடிக் குதிரையின் முன்னால் நின்றுகொண்டு, ''ஐயா, என்னைச் சளுக்கியப் படையில் சேர்த்துக் கொள்வதாகச் சொன்னீர்களே! எங்கு வந்து உங்களைச் சந்திக்கலாம்?'' என்று வினயமாகக் கேட்டான்.

இதைக் காதில் வாங்கிக் கொள்ளாத வில்வேலி குதிரையைத் தட்டி விட்டார். மறுகணம், அவ்வாலிபனை இடித்துத் தள்ளிவிட்டு, உறையூர் செல்லும் சாலையில் திரும்பி வளியென விரைந்தது புரவி.

உண்மையில் அது உறையூர்ச் சாலை தானா ?

அலட்சியமாகப் புழுதியைத் தட்டி விட்டுக்கொண்டு எழுந்த வாலிபன் இடுப்பின்மேல் இரு கைகளையும் ஊன்றியபடி நின்று, பேயெனப் பாய்ந்தோடும் அந்தப் புரவியையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான். பிறகு ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவன் போல், கீழே கிடந்த கொடிக் கம்பை எடுத்துத் தலைகீழாகத் திருப்பிப் பிடித்துக்கொண்டு, வில்வேலி சென்ற சாலையில் அதிவேக நடை போட்டு நடக்கலானான். அந்தக் கம்பின் அடியில் தொங்கிய வராகக் கொடி மண் புழுதியிலே புரண்டு தேய்ந்துகொண்டு போயிற்று !

விடியற்சாமத்துக் குளிர் காற்று வீசத் தொடங்கிய நேரத்தில், இரவெல்லாம் அயராது நடந்து வந்த களைப்புடன், பெருவளநல்லூர் எல்லையை அடைந்த அந்த வாலிபன், சாலையின் இடதுபுறமாக வளைந்தோடும் சிற்றாறு ஒன்றின் மருங்கில் தன்னந்தனியே அமைந்திருந்த ஓர் அழகிய இல்லத்தை நோக்கி நடந்தான்.

சற்றுத் தூரம் சென்றவன் அங்கு ஏதோ ஓர் அதிசயக் காட்சியைக் கண்ட மாதிரி திகைத்து நின்றான். கண்களைக் கசக்கி விட்டுக்கொண்டு பரபரப்புடன் நிமிர்ந்து பார்த்தான்.

காலைக் கருக்கல் இருட்டில் மங்கித் தோன்றிய அந்த இல்லத்தின் எதிரே, வராகச் சின்னம் பொறித்த ஒரு சிவிகை இறக்கி வைக்கப் பெற்றிருந்தது. அதற்குச் சற்று அப்பால் குதிரையொன்று மரத்தடியில் கட்டிப் போடப்பட்டிருந்தது.

சந்தேகமில்லை; அது சளுக்கியத் தளபதி வில்வேலியின் குதிரைதான்!

இந்தக் காட்சியைக் கண்ட வாலிபன் பெரியதொரு தவறு செய்து விட்டதுபோல் பதற்றத்துடன் கையை உதறியபடி பாய்ந்து போய் அந்த இல்லத்தின் வேலியோரம் மறைந்து நின்றுகொண்டு படபடக்கும் தன் நெஞ்சை அழுத்திப் பிடித்தவாறு மீண்டும் கண்களை நிமிண்டி விட்டுக் கவனித்தான்.

வாசற்புறத்தில் இறக்கி வைக்கப்பட்டிருந்த சிவிகையின் எதிரே, அதைச் சுமக்கும் ஆட்களான அறுவர் குத்துக்காலிட்டுக் கும்பலாக உட்கார்ந்து உறங்கி விழுந்து கொண்டிருந்தனர். எளிமையில் எழில் தோன்றும் விதமாக அமைந்திருந்த அந்தச் சிறிய இல்லத்தின் வலப் பக்க அறை யொன்றில் விளக்கு எரிந்துகொண்டிருப்பது, திறந்திருந்த மயில் கண் சாளரத்து வழியே தெரிந்தது.

மோதிர விரல் நுனியால் உதட்டை வருடியவாறு ஆழ்ந்த சிந்தனையுடன் அந்த இல்லத்தையே பார்த்துக்கொண்டிருந்த வாலிபன் ஏதோ ஒரு திடமான முடிவுக்கு வந்தவனாய்க் கைகளைத் தேய்த்துச் சூடாக்கிக் கொண்டு, மறைந்திருந்த வேலியோரமாகவே பதுங்கிப் பதுங்கிச் சென்றான்.

வேலியின் உயரம் குறைந்த ஓர் இடத்தை நெருங்கியதும் தயங்கி நின்ற அவன், சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டே, 'ஜிவ்'வென்று தாவி, உள்ளே குதித்தான். பிறகு அங்கிருந்து முன்போலவே மலர்ச் செடி கொடிகளில் மறைந்தும் ஒளிந்தும் அச்சிவிகையை நோக்கி நகர்ந்தான்.

முட்டிக் கால்களைக் கட்டிப் பிடித்துக் குந்தியிருந்த சிவிகைதூக்கிகள், தூக்கக் கிறக்கத்தில் தலை துவளக் கிடந்தனர்.

ஓசையின்றிச் சிவிகையின் பின்புறத்தை அடைந்த வாலிபன், மூடியிருந்த திரைச் சீலையை மெல்ல விலக்கி விட்டு உள்ளே எட்டிப் பார்த்தான்.

ஹம்சதூளிகா மஞ்சம்போல் அத்தனை வனப்புற விளங்கிய அச்சிவிகையின் உட்புறத்தே ஒருவரும் இல்லை. ஆனால், மத்தள வடிவிலே அமைந்த ஒரு சாய்வுத் திண்டின்மேல் பட்டோலைச் சுருள் ஒன்று கிடப்பது தெரிந்தது. ஆவலுடன் அதை எடுத்த வாலிபன்; சிவிகையடியில் அப்படியே முடங்கி உட்கார்ந்து கொண்டு பரபரப்புடன் பிரித்துப் பார்த்தான். காலை இருள் கட்டு விட்டுக் கலைந்திருந்தாலும் அதன் புகை மூட்டத்திலே அவ்வோலையில் உள்ள எழுத்துக்களைப் புலப்படுத்திக் கொள்ள முடியவில்லை.

அங்குமிங்குமாகத் திரும்பிப் பார்த்தான் வாலிபன். அறையினுள் எரியும் அன்ன விளக்கின் ஒளி, மயில் கண் சாளரத்து வழியே கீற்றுக் கீற்றாக வெளிப்பட்டு ஒரு கொடிப் பந்தலின் அடியில் போய்த் தெறித்துக் கிடப்பது தெரிந்தது. சிவிகையின் மறைவிலிருந்து அந்த முல்லைப் பந்தலை நோக்கி நகர்ந்து சென்ற அவன், தன்னை இருளில் புதைத்துக்கொண்டு கையிலிருந்த பட்டோலைச் சுருளை மட்டும் மங்கலான அவ்வொளியில் பிரித்துப் படித்தான்.

ஓலையில் உள்ள ஒவ்வொரு வரியைப் படிக்கும்போதும் அவன் முகம் சினத்தால் சிவந்து பழுத்தது. முழுதுமாகப் படித்து முடித்ததும் தலையைத் தாங்கிப் பிடித்துக்கொண்டு ஆழ்ந்து சுவாசித்தபடி மரக்கட்டைபோல் உட்கார்ந்திருந்த அவன் சட்டென்று அவ்வோலைச் சுருளைத் தன் இடுப்பில் செருகிக் கொண்டான். இப்போது அவன் முகத்தில் தெளிவுடன் கலந்த இளநகை யொன்று தவழ்ந்தது.

முல்லைப் பந்தலை விட்டு இருளோடு இருளாக வெளிப்பட்ட வாலிபன், அங்கிருந்து மெல்ல நகர்ந்து, விளக்கு எரியும் அறையின் வெளிச் சுவர் ஓரம் போய் ஒட்டி ஒளிந்து நின்றுகொண்டு, மயில் கண் சாளரத்து வழியே தன் கூரிய பார்வையைச் செலுத்தினான்.

அங்கே, அந்த விசாலமான அறையின் நடுவில், ஆந்திர இளவரசி உத்தமசீலியும் சளுக்கியத் தளபதி வில்வேலியும் அருகருகே அமர்ந்திருக்க, அவர்கள் எதிரே சில்லென்று பூத்து நரைத்த வெண் தாடியுடன் அமைதியே வடிவாய் உட்கார்ந்திருந்த ஒரு பெரியவர், கனிவு நிறைந்த குரலில் அவர்களிடம் ஏதோ கேட்டுக் கொண்டிருந்தார். (தொடரும்)

கதை இதுதான்: ஏழைத் தாய் வயிற்றில் இரட்டையாகப் பிறந்த லலிதாவும், செண்பகமும் அதிர்ஷ்ட விஷயத்தில் மாத்திரம் இரட்டையாகப் பிறக்கவில்லை. குபேர சம்பத்துக் கொழிக்கும் குடும்பத்தில் லலிதா வளர்கிறாள்; செண்பகம் பெற்ற தாயுடன் இருந்து வறுமைக்கு உற்ற தோழியாக வாடுகிறாள். வயதான மிராசுதார் ஒருவர் செண்பகத்தை மணக்க விரும்பிப் பணத்தின் பலத்தால் பெண்ணின் தந்தையைச் சரிப்படுத்துகிறார். பெண்ணின் தமையன் எதிர்த்து நின்று கல்யாணத்தை நிறுத்தி விடுகிறான். அவமானம் தாங்காமல் தந்தை தற்கொலை செய்து கொள்கிறார். மிராசுதாரைக் கொல்ல முயன்ற குற்றத்துக்காக அண்ணன் சிறைத் தண்டனைக்குள்ளாகிறான். செண்பகம் காதலித்த டாக்டர் கிருஷ்ணன் லலிதாவின் காதலனாகிறான். ஆனால் அவன் மாலையிட்டது செண்பகத்துக்கு. ரயில் விபத்து லலிதாவின் வாழ்க்கையையே மாற்றி விடுகிறது. லலிதா செண்பகத்துக்காகத் தன் காதலையே தியாகம் செய்கிறாள்.

சாவித்திரியின் இரட்டை வேடம், படத்தின் உயிர்நாடியாக விளங்குகிறது. வறுமையில் வாடும் வனிதைக்கும், செல்வத்தில் செழிக்கும் செல்விக்கும் உள்ள வேறுபாடுகளை சாவித்திரியின் நடை, உடை, பாவனை, பேச்சு ஆகிய எல்லாவற்றிலும் கண்டு ரஸிக்க முடிகிறது.

லலிதாவாக இருக்கும் போது பேசி, சிரித்து, குதூகலித்த சாவித்திரி செண்பகமாயிருக்கும்போது வாடிய பூங்கொடியைப் போல் வாய் திறவாமல், விழியாலேயே பேசிக் கண்ணீராலேயே கதை சொல்லுகிறார். காரில் இருந்தபடியே டாக்டர் கிருஷ்ணனைக் காதலித்து மகிழ்கிறாள் லலிதா; அதே டாக்டரை மறைவில் இருந்த வண்ணம் கண்டு, கண்ட உடனேயே கைசோர விட்டுக் கலங்குகிறாள் செண்பகம். ரயில் விபத்தின் காரணமாக மூளை குழம்பிப் போன சந்தர்ப்பத்தில் லலிதாவாக நடிக்கும் சாவித்திரி எல்லோரிடமும் ஒரு சபாஷ் வாங்கி விடுகிறார்.

இரட்டைப் பெண்களிடம் அகப்பட்டுக் கொண்டு தவிக்க இருக்கவே இருக்கிறார்- ஜெமினி கணேசன்! ஆங்கில டாக்டராகவும், ஆயுர் வேத டாக்டராகவும் அவரும் இரண்டு வேடம் போடுகிறார்.

எம். ஆர். ராதா மிராசுதாராக வந்து சாவித்திரியைக் காதலித்து ரயில் விபத்தில் சிக்கிக் கதையை மேலும் சிக்கலாக்குகிறார். ஆனால் அவர் நடிப்பில் சிக்கல் இல்லையே!

ஏழைத் தாய்க்கு ஏற்றவர் எஸ். என். லட்சுமி. நடிப்பு இயல்பாக இருக்கிறது.

எஸ். வி. ரங்காராவ் லலிதாவின் வளர்ப்புத் தந்தையின் பாகத்தை ஏற்று ஆயுர்வேதத்தை ஆதரித்து 'அலோபதி' முறையினால் குணம் பெறுகிறார். செண்பகத்தின் அண்ணனாக வரும் கோபாலகிருஷ்ணன் சீறிப் பாய்ந்தும், கண்ணீர் வடித்தும் நன்றாய் நடிக்கிறார்.

சமீபத்தில் வெளியான படங்களினின்றும் கதை வேறுபட்டிருப்பதால் சுவாரஸ்யமாகவே இருக்கிறது. ஆனால் இது தமிழ்க் கதை இல்லை. ஸ்ரீமதி மாளவிகா ராய் எழுதிய வங்காளிக் கதை என்பதை அறியும்போது பெருமூச்சு விடாமல் இருக்க முடியவில்லை.

''வா என்றது உருவம்'', ''ஓடம் நதியினிலே'', ''வளர்த்த கலை மறந்து விட்டாள்'' என்ற கண்ணதாசனின் பாடல்கள் நன்றாயிருக்கின்றன.

சோலைமலை, மாரா இருவரும் வசனத்தை அழகாய் அமைத்திருக்கின்றனர்.

ஒளிப்பதிவு உயர்வாயிருக்கிறது.

14,004 அடிகளில் ஒரு நல்ல படத்தைத் தயாரித்திருக்கும் வசுமதி பிக்சர்ஸாரைப் பாராட்ட வேண்டியதுதான்!

''காத்திருந்த கண்கள்'' வெகு நாட்களாக நல்ல தமிழ்ப் படம் பார்க்க ஆவலோடு காத்திருந்தவர்களுக்கு ஒரு நல்விருந்து என்பதில் ஐயம் இல்லை.





'ஓடி விளையாடு, பாப்பா! நீ ஓய்ந்திருக்கலாகாது!' என்று உங்களுக்காகப் பாடினாரே ஒருவர், அவர் அமரரான மாதம் இது. செப்டம்பர் பதினொன்றும் தேதி வரும்போதெல்லாம், அடிமையாக இருக்கும் போதே ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட்டோம் என்று ஆடிப்பாடிய அந்த அற்புதக் கவி பாரதியின் நினைவு நமக்கு வரும். வீர சுதந்திரத்தை நம் நாடி நரம்புகளிலெல்லாம் தமது பாடல்களால் புகுத்திய தேசிய மகாகவி பாரதியார், 'காக்கையும் குருவியும் எங்கள் ஜாதி, கடலும் மலையும் எங்கள் கூட்டம்' என்று சமதர்ம நோக்கோடு பாடி மகிழ்ந்தவர். அவரது எளிய இனிய பாடல்கள்தான் இன்றைய குழந்தைக் கவிஞர்களுக்கு வழிகாட்டியாக விளங்குகின்றன.

மகா கவி பாரதியாருக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் இந்த இதழில், பாரதி வழி வந்த கவிஞர்கள் சிலரின் பாடல்களை உங்களுக்கு விருந்தாக அளித்திருக்கிறேன்.

— வாண்டுமாமா

பெற்ற மண்

'தமிழழகன்'

கன்னித் தமிழில் நமக்கெல்லாம்
கவிதை தந்த பாரதியார்
முன்னம் ஒருநாள் அயலூர்க்கே
முறையாய்ச் சென்று திரும்பிடவே.

ரயிலுக் கேதான் வந்திருந்தார்
ரஸிக நண்ப ராம்சிலரும்
மெயிலில் அவரை வழியனுப்ப
மேவி அங்கே உடனிருந்தார்!

வண்டியும் வந்து நின்றதுவே;
வந்தோர்க் கெல்லாம் விடைகூறிக்
கொண்டே ரயிலில் ஏறுங்கால்
குதிகால் இடறிக் கீழ்விழுந்தார்!

நல்ல வேளை கரையில்தான்
நழுவிக் கீழே உருண்டுவிட்டார்!
எல்லோ ரும்தான் பாரதியை
எழுப்ப உடனே முயற்சிகொண்டார்!

கையைப் பிடித்தார் ஒருநண்பர்;
காலைப் பிடித்தார் ஒரு நண்பர்;
மெய்யால் பற்றித் தூக்கிவிட
மேலும் முயன்றார், மற்றொருவர்!

ஆனால் கவிஞர் பாரதியோ
அவற்றிற் கெல்லாம் அசையவில்லை!
தானும் நழுவி மீண்டும்தான்
தரையில் புரண்டு கொண்டிருந்தார்!

நண்பர்க் கெல்லாம் அவர்செய்கை
நயமாய்ச் சற்றும் புரியவில்லை!
அன்பு கொண்டே மறுபடியும்
அவரைத் தூக்க விரைந்து சென்றார்!

படுத்துப் புரளும் பாரதியோ
பரிவாய் அவரை யெலாம்தடுத்து,
"விடுத்திருங்கள்; கொஞ்சமின்னும்
விரும்பிப் புரள வேண்டும்!" என்றார்!

"என்னைப் பெற்ற இம்மண்ணில்,
எனக்கே உரிமை யானமண்ணில்
தன்னை மறந்தே புரளுவது
தனிப்பே றன்றோ!" என்றுரைத்தார்!

பெற்ற மண்ணின் பெருமையினைப்
பேணும் தாய்நாட் டருமையினை
முற்றும் அன்றே பாரதியால்
முனைந்தெல் லோரும் உணர்ந்தனரே!



மயில்

'மணவழகன்'


மயிலே! மயிலே! மாமயிலே!
மனமும் குளிர வாமயிலே!
ஒயிலாய் வருவாய் ஆடிடுவாய்!
ஒழுங்காய் அழகைக் காட்டிடுவாய்!

மேகம் கருத்தால் நீ மகிழ்வாய்!
தோகை விரித்தே ஆடிடுவாய்;
பேகன் உனக்கே சால்வைதனை
மோகம் கொண்டே அளித்தானோ?

முருகன் உந்தன் மீதினிலே,
முறுவல் பூத்து வள்ளியுடன்
தருவான் காட்சி; தெய்வானை
தன்னுடன் இங்கு வருவானோ?

அசுரன் ஒருவனைக் காலடியில்
அரவம் ஆக்கி வரு இன்றும்!
மயிலே! மயிலே! மாமயிலே!
மனமும் குளிர வா மயிலே!!





எலியின் லீலை!

எங்கள் வீட்டில் எலிகள்
எக்கச் சக்கம் போங்கள்!
அங்கு மிங்கும் ஓடும்
ஆன மட்டும் பாடும்!

தங்க முகாம் பற்பல
தாவிப் பாயச் சுரங்கம்
சிங்கக் குகை போல
சிறு டைய வாயில்!

தட்டு முட்டுச் சாமான்
தாவித் தாவிப் பறக்கும்
எட்டு மட்டும் வளையில்
ஏன மதைப் பதுக்கும்

பட்டுத் துணி பண்டம்
பாதிப் பாதி யாக்கும்
மட்டு மிஞ்சி அவைகள்
மனித ரையே மேய்க்கும்!

—காளம்பட்டி கேசவன்

கோழி

'மதி'

கோழி! கோழி! வா! வா!
கத்திக் கொண்டு வா வா!
காலால் தரையைக்கிண்டி வா!
கிட்டக் கிட்ட வா வா!
கீழே இறங்கி ஓடி வா!
குஞ்சுகளைக் கூட்டி வா!
கூரைவிட் டிறங்கி வா!
கெம்புக் கண்ணை யாட்டி வா!
கேணிக்கரை தாண்டி வா!
கொக்கரக்கோ கத்தி வா!
கோபமாகக் கொத்த வா!
கையிலுள்ள நெல்லினைக்
கௌவிக்கொள்ள ஓடி வா!
கோழி கோழி வா வா!





கூவும் குயில்

கூவும் குயிலே வந்திடுவாய்
குரலால் இன்பம் தந்திடுவாய்
ஆவல் மிகுந்து பாடுவையேல்
அல்லல் யாவும் நீங்கிடுமே!

பேசும் கிளிகள் பறந்துவரும்
பெண்மான் துள்ளி விளையாடும்
வீசும் வாசப் பூஞ்சோலை
விரும்பு கின்றாய், எந்நாளும்!

மனம்போல் விண்ணில் பறக்கின்றாய்
வயலில் காட்டில் உண்கின்றாய்
இனிக்கும் இசையைப் புதுமையுடன்
இதமாய் நாளும் பொழிகின்றாய்!

மேனி முழுதும் கருநீலம்
மிளிரும் வசந்த மாங்குயிலே,
ஏனோ குஞ்சு பொரிப்பதற்கே
இன்னும் தெரியா திருக்கின்றாய்?

—திருச்சி வாசுதேவன்

குருவியைப் பார்

குருவியைப்பார் குருவியைப்பார் செல்லப்பாப்பா
குட்டைமூக்கால் நெல்பொறுக்கும் செல்லப்பாப்பா
துறுதுறுக்கும் கைகளினால் செல்லப்பாப்பா
துளிதுளியாய் அரிசிபோடு செல்லப்பாப்பா!

காக்கையைப்பார் காக்கையைப்பார் சின்னப்பாப்பா
கண்உருட்டிப் பயந்துவரும் சின்னப்பாப்பா
காக்கையெல்லாம் சோறுதின்னச் சின்னப்பாப்பா!
கைகளினால் அள்ளிப்போடு சின்னப்பாப்பா!

பூனையைப்பார் பூனையைப்பார் செல்லப்பாப்பா
புத்திகெட்டுத் திருடவரும் செல்லப்பாப்பா
பானையெல்லாம் உருட்டவந்தால் செல்லப்பாப்பா
பயப்படாமல் துரத்திவிடு செல்லப்பாப்பா!

—இ. சு. பாலசுப்பிரமணியம்

பார்த்து மகிழ்வாயே!

✽ ✽

"பொன்மாரி"

✽ ✽

"எங்கே போறே எங்கே போறே
வண்ணத்திப் பூச்சி?"

"பூங்கா தேடிப் பறந்து போறேன்
ஆடிப் பாடவே!"

"தூங்கு கின்ற பூவை ஏனோ
தொட்டுப் பார்க்கிறே?"

"தேங்கும் தேனைக் குடித்து வயிற்றை
நிரப்பிக் கொள்ளவே!"

"அழகு வண்ண இறக்கை தன்னை
யாரோ தந்தது?"

"பழக இனிக்கும் இறைவன் அன்பால்
பரிசாய்த் தந்தது."

"உழவர் பயிரை உண்டு செல்லல்
உனக்கு நீதியோ?"

"அழகாய்ப் பலனைத் தந்து செல்வேன்
அதற்கு நானுமே!"

"உன்னைப் பிடித்துக் கையில் வைக்க
விரும்பு கின்றேனே!"

"என்னைப் பிடித்தால் அழகு போகும்
எனக்குத் துன்பமே!"

"அன்பாய் நீயும் என்ன தருவாய்
அறிய உரைப்பாயே!"

"இன்பம் பொங்க எந்தன் அழகைப்
பார்த்து மகிழ்வாயே!"





ASP/ABF-33 TAM/.



அத்தியாயம் 4

சிங்கபுரி

மைக்கேல் தன் கைகளைப் பற்றி இழுத்து எழுந்து நிற்கச் செய்ததையும் முகவாயைத் தட்டி விழிப்படைய வைத்ததையும் கூடாரத்துக்கு அனுப்பி வைத்ததையும் நினைத்துப் பார்த்த போது வடிவேலுவுக்கு இன்னமும் சிரிப்பு வந்தது! ஏழு கடல்களையும் கடந்து வந்த வாணிபக் கப்பல்கள் கரை தட்டி நிற்கிற சிங்கப்பூரின் துறைமுகத்துக்கு அருகில் நடந்து சென்று கொண்டிருந்தான் அவன். 'சாதாரணமாகப் பேச ஆரம்பித்துப் பெரிய பிரசங்கமாகவே ஏதேதோ சொல்லிக் கொண்டு போனானே அன்றைக்கு மைக்கேல்; எதையுமே காதில் வாங்கிக் கொள்ளாமல் ஆனந்தமான நித்திரையில் ஆழ்ந்திருந்த என்னிடம் என்னவெல்லாம் கூறினானோ? பாவம்!' என்று பரிதாபமும் பரிகாசமும் மிக நகைத்தான். பிறகுதான் சுற்றுப்புறச் சூழ்நிலைகள் அப்படி மனம் விட்டு மகிழ்ச்சியை வெளிப்படுத்த ஏற்றதாய் இல்லை என்பது அவனுக்கு உறைத்தது. மலாய்க்காரர்களுடைய சிறிய மீன் பிடிக்கும் படகுகள் முதல் பிரும்மாண்டமான வாணிபக் கப்பல்கள் வரையில் எத்தனை எத்தனையோ கலங்கள் வந்து குழுமி மாலுமிகளையும் பிரயாணிகளையும் கட்டவிழ்த்து விடுகிற இடம் 'கெப்பல் ஹார்பர்'. நகரின் அத்தகைய பகுதியில் நடு வீதியில் நின்று தனக்குத் தானே சிரித்துக் கொண்டிருந்தால் நாலு பேரல்ல; நாற்பது தலைகளே திரும்பும்! திகைப்பும் சந்தேகமும் குடிகொண்ட எண்பது கண்கள் அவன் சிரத்தை ஊடுருவி அதனுள் இருக்க வேண்டியவையெல்லாம் சரியாகத்தான் இருக்கிறதா என்று ஆராயும்! இதை உணர்ந்ததும், கொஞ்சம் அசடு வழியப் புன்னகையைச் சிந்தியவாறே அவன் ஒற்றைக் காலில் நின்று ஓர் அலங்கோல 'அபௌட்டர்ன்' செய்தான். துறைமுகத்தை — தூரகிழக்கில் அமைந்துள்ள அந்த நுழைவாயிலை — கடைசியாக ஒரு தடவை கண் குளிரக் காண விரும்புகிறவனைப் போல் பின்னோக்கியே சில அடிகளை எடுத்து வைத்தான். ஐரோப்பாவிலிருந்தும் இந்தியாவிலிருந்தும் பயணமானோர் மேலும் கிழக்கே போக அது தலை வாசலாக விளங்கியதென்றால் ஆஸ்திரேலியா, சீனா, ஜப்பான் ஆகிய நாடுகளிலிருந்து மேற்கே செல்வோருக்கு அது நல்வரவு கூறும் அலங்கார முகப்பாக நின்றது.

தன் புத்தி பிசகாமல் இருக்கிறதா என்று யோசித்தவர்களின் கவனம் வேறு பக்கம் திரும்பியிருக்கும் என்று நிச்சயமானதும் வடிவேலு மீண்டும் சரியான திசையில் நேராக நடந்தான். அன்று மைக்கேல் நிகழ்த்திய சொற்பொழிவை அரையும் குறையுமாகக் கூட அவன் கேட்டுக் கொள்ளவில்லை. எனினும் ஜப்பானியரை எமகாதகப் பேர்வழிகள் என்று மைக்கேல் கருதுகிறான் என்னுமளவுக்கு அவனைப் புரிந்து கொண்டிருந்தான் வடிவேலு. அப்படிப்பட்ட ஒரு முடிவுக்கு மைக்கேல் வந்ததிலும் தவறேயில்லை. 'பொல்லாதவர்கள்தான் நாங்கள்' என்பதை ஜப்பானியர் ஏற்கனவே மலாயாவில் நிரூபித்துக் கொண்டிருந்தார்கள். யுத்த மேகங்கள் கவிழ்வதை அறிந்துகொண்டு பல ஜப்பானியக் குடும்பங்கள் முன்னெச்சரிக்கையாக மலாயாவிலிருந்து

வெளியேறி விட்டன; கப்பலேறிக் கொண்டிருந்தன. எஞ்சி யிருந்தோர் — குறிப்பாக ஸ்டுடியோக்கள் நடத்திய புகைப்பட நிபுணர்கள் — ஜப்பானிய ஒற்றர்களாக மாறலாம் எனச் சந்தேகிக்கப்பட்டனர். அவர்களுடைய நடவடிக்கைகள் உன்னிப்பாய்க் கவனிக்கப்பட்டன.

அந்தத் திபகர்ப்பத்தின் மீது உதய சூரியன் கொடி தாங்கிய வீரர்கள் படையெடுக்கும் பட்சத்தில் அங்கிருக்கக் கூடிய சிறுபான்மையினரான ஜப்பானியரின் கதி என்னவாகும் என்பதை ஊகித்து அவர்களில் மிகப் பலர், நாடு கடத்தும் அரசாங்க உத்தரவு அப்போதைக்கு ஏதுமில்லாத போதிலும் மூட்டை கட்டி விட்டனர். ஆனாலும் என்ன? அந்த ஒரு நாட்டவர், வளம் மிக்க வனங்களும் செல்வம் கொழிக்கும் சுரங்கங்களும் நிறைந்த மலாக்காவை விட்டு விரைந்தோடினால் என்ன? வேறு எத்தனை எத்தனை தேசத்தவர் எட்டுத் திசைகளிலிருந்தும் கிளம்பி வந்து அங்கே ஒன்றாக வாழ்ந்து உறவாடினர்?

நாலா பக்கமும் கண்ணோட்டம் செலுத்தினான் வடிவேலு. மலாயாவின் பெரும்பான்மை சமூகத்தினரான சீனர்களே அதிகமாகத் தென்பட்டார்கள். ஜனத்தொகைக் கணக்கில் முதலிடம் பெறுவதோடு மற்ற எல்லா வகுப்பினரையும்விட அதிகமாகப் பணம் படைத்தவர்கள் இவர்கள்தான். என்றாலும், அவர்களுக்குள்ளேயே எவ்வளவு தாரதம்மியம். ஏற்றத் தாழ்வு? ரப்பர்த் தோட்ட முதலாளிகள், வெள்ளீயச் சுரங்க அதிபர்கள், ஏற்றுமதி இறக்குமதி வியாபாரிகள், போக்குவரத்துச் சாதனங்கள் பலவற்றை நிர்வகிப்பவர்கள், கட்டடக் கண்டிராக்டர்கள் போன்ற கோடீசுவரச் சீனர்கள் மலாயாவில் வசித்தார்கள். சீனப் பட்டு விற்பவர்கள், வைத்தியர்கள், கலைஞர்கள், உடல் உழைப்பைக் கொண்டு ஊதியம் பெறுவோர், கடை கண்ணிகளை வைத்திருப்போர் போன்ற நடுத்தர வர்க்கத்தினரும் உண்டு. பரம ஏழைகளாக அல்லல்பட்டு வறுமையைச் சகிக்க முடியாமல் பெற்றெடுத்த பிள்ளைகளை விற்று விடும் நபர்களும் இருக்கத்தான் செய்தார்கள்.

அந்நிய நாட்டவர் என்ற வேற்றுமை பாராட்டாது அந்தச் சீனக் குழந்தைகளை வாங்கி



ஆதரவளித்து, அன்புடன் வளர்த்து ஆளாக்குகிற மகானுபாவர்கள் மலாய்க்காரர்கள். தேடித் துருவி அலைந்தாலும் வெறும் தலையோடு ஒரு மலாய்க்காரனைப் பார்க்க முடியாது. வெல்வெட்டுக் குல்லாய் போட்டிருப்பார்கள் சாதாரணமாக. ஒன்றுமில்லையானால் ஒரு கைக்குட்டையையாவது சுற்றி யிருப்பார்கள். அவர்களிலும் சுகபோகத்துடன் வாழும் சுல்தான் குடும்பத்தினர் முதல் கூடை பின்னியோ ஆடை நெய்வதில் ஈடுபட்டோ ஜீவனம் நடத்தும் குடிசைத் தொழிலாளர்வரையில் பல ரகத்தவர். அநேகமாக மலாய்க்காரர்கள் அமைதியான கிராமிய வாழ்க்கையையே விரும்பினார்கள். விவசாயத்தை நம்பிச் சந்தோஷமாக நாட்களை ஓட்டினார்கள்.

இந்தியர்கள் - அதிலும் தமிழர்கள்- தங்கள் நெற்றி வியர்வை நிலத்தில் சொட்டப் பாடுபடவில்லையானால் மலாயாவில் ரப்பர்த் தோட்டங்கள் ஏது? அப்படிக் கிடைத்த ரப்பரைப் பிரிட்டிஷ் முதலாளிகள் கப்பல் கப்பலாகத் தாய்நாட்டுக்கு ஏற்றி அனுப்பவில்லையானால் ஜெர்மானியப் படையெடுப்பை இங்கிலாந்து தாக்குப் பிடிப்பது எப்படி? ராணுவ வாகனங்கள் — விமானங்கள், கார்கள், லாரிகள் என்று எதை எடுத்துக் கொண்டாலும் சக்கரம் இல்லாமல் நகருமா? பிரிட்டிஷாருடைய யுத்த நோக்கில் மலாயாவின் முக்கியத்துவத்துக்குக் கேட்கவா வேண்டும்?

ரப்பர்த் தோட்டத் தொழிலாளர்களைத் தவிரத் துணிமணி வியாபாரிகள் நகைக் கடைகள் வைத்திருந்தவர்கள் ஓட்டல்களை நடத்தியவர்கள் ஆகியோரும், லட்சக்கணக்கில் தனத்தைச் சேகரித்த செட்டிமார் சமூகத்தினரும் அங்கே வசித்தார்கள்.

போர்முனையாக அந்தப் பூமி மாறும் காலம் நெருங்கிக் கொண்டிருந்ததால் ஐரோப்பியர் பலரும் திரண்டிருந்தனர். ஆங்கிலேய ரப்பர்த் தோட்ட முதலாளிகள், வெள்ளீயச் சுரங்கச் சொந்தக்காரர்கள் ஆகியோருடன் இப்போது வீரர்களும் சேனைத் தலைவர்களும் சேர்ந்து கொண்டிருந்தார்கள்.

இவர்களுக்கு இடையில் கருநீல விழிகளும் கழுத்து வரை புரளும் கேசமும் கொண்ட யூரேஷிய அழகிகள், கவர்ச்சியான தங்கள் உடற்

கட்டை ஒளிக்காமல் மறைக்காமல்தேகத்தோடு ஒட்டியதுபோல் மேனாட்டுப்பாணியில் உடை அணிந்து, உல்லாசமாக உலவி வந்தனர். அவர்களுடைய வனப்பிலே சொக்கி, அங்கே தண்டு இறங்கியிருந்த ஆஸ்திரேலியச் சிப்பாய்கள், தேன் குடித்த நரி போல் முகத்தை வைத்துக் கொண்டனர். கழுத்தை ஒடித்துக் கண்களை அகல விரித்து அவர்களுடைய பின்னழகையும் ரசித்ததுடன் பாராட்டுத் தெரிவிக்கும் வகையில் சீட்டியும் அடித்தனர்.

மதங்களுக்கும் மக்கள் இறைவனை வழிபடும் நிலையங்களுக்கும் குறைவேயில்லை. இஸ்லாமிய மசூதிகள், சீக்கிய குருத்வாராக்கள், ஹிந்துக்களின் கோயில்கள், புத்தபிரானைப் பூஜிக்கப் புனிதமான ஆலயங்கள், கிறிஸ்துவர்களின் பலவித மாதா கோயில்கள் — இன்னும் எவ்வளவோ.

பேசப்படும் பாஷைகள் அனந்தம். பழமையைப் படம் பிடித்துக் காட்டும் சிறு வீடுகள், புதுமையைப் பறைசாற்றும் அடுக்கு மாளிகைகள். இப்படி ஒரே கலப்பட மயம்.

டிராம் வண்டி ஒன்றில் ஏறி உட்கார்ந்து, கடைகண்ணிகள் நிறைந்த 'ராபிள்ஸ் பிளேஸ்' வரையில் செல்ல டிக்கெட் வாங்கிய வடிவேலுவுக்கு, கம்பீரமாய்த் தோற்றம் அளிக்கும் அந்தப் பட்டினத்தை— சிங்கபுரியை — சிங்கப்பூரை பற்றிச் சிவராமன் கூறியது ஞாபகத்துக்கு வந்தது. ஒருமுறை நகரில் உள்ள உணவு விடுதிகள் ஒன்றினுள் நுழைந்து சென்ற நண்பர்கள் இருவரும் ஒரு டேபிளைப் பிடித்து உட்கார்ந்து கொண்டார்கள். "ரோஜாக்" என்று கேட்டான் சிவராமன் சர்வரிடம்.

"'ரோஜாக்'கா! அப்படியென்றால்...?" வடிவேலு வியப்புடன் வினவினான்.

"பொறுத்திருந்து பார்!"

உண்மையிலேயே ரொம்பவும் பொறுமையோடு காத்திருந்துதான் அதைக் கண்ணால் காண வேண்டியிருந்தது என்றாலும் சாப்பிடுவதற்குப் பொறுமை தேவைப்படவில்லை. அரை மணி நேரமும் அரை டின் சிகரெட்டும் காலியான பிறகு மேஜை மீது ரோஜாக்கைக் கொண்டு வந்து வைத்தான் சர்வர்.

அவியலைவிட ஆயிரம் மடங்கு அட்டகாசமானதான ஒரு கதம்பக் குவியல் அது! வெள்ளரிக்காய், பைன் ஆப்பிள், வேர்க்கடலை, பீன்ஸ், டர்னிப், புளி, சர்க்கரை, மிளகாய், உப்பு சகலமும் அதில் அடங்கியிருந்தன. அதைச் சுவைத்துக் கொண்டே, "மலாய்நாடும் இத்தகையதொன்றுதான்" என்றான் சிவராமன்.

அன்றைக்கு வடிவேலு சிரித்த சிரிப்பு !

மலாயாவாழ் மக்களைப் பற்றி மட்டுமல்லாது அந்நாட்டுச் சரித்திரத்தையே சாங்கோபாங்கமாக விவரித்தான் சிவராமன். ஆர்வத்தோடு கேட்ட வடிவேலுவுக்கு ஒரே அதிசயமாகவும் இருந்தது. "உனக்கு இதெல்லாம் எப்படித் தெரியும்?"

"கூடாரத்தில் என் கட்டிலுக்கு அடியில் பெரிய தகரப் பெட்டி ஒன்றை வைத்திருக்கிறேன். அதற்குள் என்ன இருக்கிறது, சொல்லு பார்க்கலாம்!"

"என்னை என்ன ஜோசியன் என்று தீர்மானித்து விட்டாயா?"

"சில புத்தகங்கள் இருக்கின்றன" என்று இழுத்தாற்போல் கூறினான் சிவராமன்.

"பிறகு?"

"இன்னும் கொஞ்சம் புத்தகங்கள்."

"அப்புறம்?"

"வேறு சில புத்தகங்கள்!"

"நல்ல தமாஷ் ஆசாமிதான்அப்பா நீ!" என்றான் வடிவேலு.

"இங்கு வந்து சேர்ந்த பிறகு, நாடு, சமூகம், மதம், கலாசாரம், பாஷை முதலிய எல்லாவற்றிலும் மாறுபட்டு உள்ள இந்த ஜனங்கள் ஒற்றுமையாய் எப்படி இழைகிறார்கள் என்று அறிந்து 'கொள்ள வேண்டும் என்ற ஆவல் எழுந்தது. ஆகவே அந்த நூல்களையெல்லாம் சேகரித்தேன். இப்போது ஊர் திரும்ப வேண்டிய வேளை வந்து விட்டது. புத்தகங்களை யார் தூக்கிக் கொண்டு போவது இங்கிருந்து? எல்லாவற்றையும் உன் தலையில்தான் கட்டப் போகிறேன்!"

"ஐயய்யோ ! வேண்டாமப்பா ! வேண்டவே வேண்டாம்!"

"அப்படி ஒதுங்கினால் யார் உன்னை விடப் போகிறார்கள்?"

"அதற்கில்லை, சிவராமா! என்னிடம் அவற்றைக் கொடுத்துப் பிரயோஜனமென்ன? ஓர் அட்சரம் படிக்கப் போவதில்லை நான். உபயோகப்படுத்தக்கூடியவர்களுக்குக் கொடுத்தாலாவது புண்ணியம் உண்டு."

"போடா போ! நீ ஒரு காட்டான் என்பதை மறந்து விட்டு உளறிக் கொண்டிருக்கிறேன். கழுதையிடம் தந்தாலும் தின்றாவது ஜீரணிக்கும். சரி, எத்தனை நேரமாக இதைச் சாப்பிட்டுக் கொண்டிருப்பாய்? கிளம்பு சீக்கிரம் !"

"எங்கே?"

"அட இதென்னடா பிராணவஸ்தை! புறப்படும் போது எங்கே என்று கேட்



செப்டம்பர் 14ல் வெளியீடு
ஏ எல் எஸ் ஸின்
செந்தாமரை
மதராஸ் பிக்சர்ஸ் தயாரிப்பு
டைரக்ஷன்:
A. பீம்சிங்
திரைக்கதை வசனம் :
இராம. அரங்கண்ணல். M.L.A.,
பாடல்கள் :
கவிஞர் கண்ணதாசன்
சங்கீதம் :
விஸ்வநாதன்-ராமமூர்த்தி
ALS PRODUCTIONS



பார்களா?'' பில் பணத்தைக் கொடுத்த படியே வடிவேலுவைக் கடிந்து கொண்டான் சிவராமன்.

தன் நண்பன் எத்தனைக்கெத்தனை ஆழ்ந்து படித்து அறிவை விருத்தி செய்து கொண்டானோ அத்தனைக்கத்தனை விளையாட்டுப் புத்தியும் கொண்டவன் என்பதை நன்கு அறிந்திருந்ததால் தயங்கினான் வடிவேலு. வெகு காலத்துக்கு முன்பே சிங்கப்பூரில் நிரந்தரமாகக் குடியேறி வாணிபம் நடத்தி வசதியாக வாசம் புரிந்து வந்த ஓரிருவர் சிவராமனுக்குக் குடும்ப நண்பர்கள். சிவராமன் பட்டாளத்தில் சேர்ந்ததால் சிங்கப்பூருக்கு வரும் வாய்ப்பைப் பெற்றிருந்த போதிலும் அவனைத் தங்களுடைய விருந்தாளியாகவே அவர்கள் கருதினார்கள். இது அவனுக்கு மிகவும் சௌகரியமாய்ப் போயிற்று. தனக்கு அவ்வப்போது செலவுக்குத் தேவைப்பட்ட டாலர்களை அவர்களிடம் கேட்டுப் பெற்றுக் கொண்டான் அவன். பின்னால், தமிழ் நாட்டில் அவர்களுக்கு உள்ள உறவினர்களிடம் ரூபாய்களாகத் திருப்பித் தந்து விடுவதாய்ச் சிவராமன் உறுதி அளிக்கவே அவர்களும் எதற்கென்று கேளாமல் நம்பிக் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். இந்த வசதி மட்டும் கிடைத்திருக்க வில்லையானால் சிப்பாய் சிவராமன் தனக்குத் தரப்படும் இருபத்தைந்து ரூபாய் சம்பளத்தில் தாராளமாக 'விளையாடுவது' எப்படிச் சாத்தியமாகும்?

இப்போது அவன் தன் சட்டைப் பையிலிருந்து ஒரு சிறிய 'டைரி'யை எடுத்தான். முதல் நாலைந்து பக்கங்களில் அவன் ஒரு விரலால் மேலிருந்துகீழாகக் கோடு இழுத்தவாறே அவற்றில் எழுதப்பட்டிருந்த பல விலாசங்களைப் பரபரப்புடன் மனத்துக்குள்ளாகவே படித்தான். இன்னும் நாலைந்து தடவைகள் தாள்களை இப்படியும் அப்படியுமாய்ப் புரட்டிவிட்டு ஒரு முடிவுக்கு வந்தவன் போல் டைரியை 'டப்' பென்று மூடிப் பைக்குள் செருகினான்.

''எனக்குக் 'காம்ப்'பில் வேலை இருக்கிறதடா!'' என்றான் வடிவேலு.

''தடிப் பயலே! தப்பித்துக் கொண்டு ஓடவா பார்க்கிறாய்?'' வடிவேலுவின் கரத்தைத் தன்னுடையதுடன் சேர்த்து முறுக்கிப் பிடித்துக் கொண்டு நடந்தான் சிவராமன்.

''நீ சமர்த்துப் பிள்ளை என்பது எனக்குத் தெரியும். நான் உன்னைக் கட்டாயப்படுத்த மாட்டேன். அன்னாசிப் பழ'ஜூஸ்' பிடிக்குமோ இல்லையோ உனக்கு? நான் நாலு 'ஸ்டென்கா'க்களைத் தீர்த்துக் கட்டுகிற வரையில் நீ பழ ரசத்தை உறிஞ்சிக் கொண்டே இரு. சரிதானா? ஆனால் கண்டிப்பாகச் சொல்கிறேன், எனக்குக் 'கம்பெனி' வேண்டும்!''

''எதற்கு? மயங்கி விழுந்தால் ரிக்ஷாவில் ஏற்றி முகாமுக்குக் கூட்டிப் போகவா?''

''அப்படித்தான் வைத்துக் கொள்ளேன்!'' என்றான் சிவராமன்.

வேண்டா வெறுப்புடன் அவனோடு போய்த் தொலைந்தான் வடிவேலு.

அத்தியாயம் 5

கால சர்ப்பம்

நகரின் மையத்துக்கு வந்து சேர்ந்து நெடுஞ்சாலையை விட்டு விலகி, ஒரு சந்தினுள் நுழைந்தார்கள் நண்பர்கள். சிறிது தூரம் நடந்ததும் கதவு ஒன்றினைச் சுட்டிக் காட்டினான் சிவராமன். ''அதோ, அதனுள் தான் நுழையப் போகிறோம் நாம்!''

சாதாரணமான ஒற்றைக் கதவுதான் அது. என்றாலும் அலங்கரிக்கப்பட்டிருந்த விதத்தினால் விநோதமாய்த் தென்பட்டது. சுற்றுச் சட்டங்களையும் குறுக்கே அகலவாட்டில் அமைந்த ஒரு

சட்டமும் கொண்டது அது. இந்தக் குறுக்குச் சட்டத்துக்கு அடியில் வார்னிஷ் ஏறிய மரப்பலகை தான். உயரே கண்ணாடி. ஆயினும் அந்தக் கண்ணாடிக்குப் பின்னால் நடப்பவற்றைப் பார்க்க முடியாதபடி ஒரு பயங்கரப் பிராணி இடையில் நின்று அச்சுறுத்தியது! உட்புறத்தில் கதவோடு உரசிக் கொண்டிருக்கும் வகையில் ஒரு படுதாவை மாட்டியிருந்தார்கள். வெளிப் பக்கம் இழுத்துத் திறக்க முடியாத அந்தக் கதவிலே மேலிருந்து கீழாகத் தொங்குமாறு பொருத்தப்பட்டிருந்த துணியில் நெசவுக் கலைஞன் ஒருவனுடைய அற்புதமான கைவேலைப்பாட்டினால் உருவாகியிருந்தது ஒரு கால சர்ப்பம். துணியில் விழுந்த சுருக்கங்களுக்கு ஏற்ப அந்த 'டிராகனும்' வளைந்து நெளிந்து கொடூரமாய்க் காட்சியளித்தது.

'திடு திப்'பென்று அது மங்கி மறையப் பார்த்தது. அடுத்துப் 'பளிச்' என்று விளங்கி முன்னைக் காட்டிலும் அதிகமாகத் தன் அரக்க குணத்தை வெளிப்படுத்துவது போல் தோன்றியது.

இதன் காரணத்தை ஆராய அண்ணாந்து நோக்கினான் வடிவேலு. கதவுக்கு மேலே சுவரில்



''டி டிராகன்'' என்று அந்த விடுதியின் பெயரை ஆங்கில மொழியில் அறிவிக்கும் பலகைக்கு மேல் சிவப்பும் நீலமுமான விளக்குகள் எரிந்தன. பலகையில் பெயருக்கு அருகிலேயே டிராகனுடைய உருவமும் வரையப் பட்டிருந்தது. விளக்குகள் அணைந்து எரிந்த விதத்தில் அந்த கற்பனைப் பிராணி தன் வாலை அசைப்பது போலவும் வாயைத் திறந்து நெருப்பைக் கக்குவது போலவும் பிரமையை உண்டாக்கியது. இந்த அற்புதமான ஏற்பாட்டினால் அந்த 'பார்' பார்ப்பவருக்கு ஏதோ ஒரு மர்மமான இடமாகத் தென்பட்டதுடன், அவர்கள் மனத்தில் ஒருவித சலனத்தையும் உண்டு பண்ணியது.

நெருப்பைக் கக்குகிற அந்தப் பறக்கும் நாகத்தை வைத்த கண் வாங்காமல் ஒரு நிமிஷம் நோக்கினான் வடிவேலு.

பக்கத்தில் நின்ற சிவராமன் களிப்போடு கூறினான்: ''கிளாசில் ஜின்னைத் தாராளமாக நிரப்பி 'டானிக்'கை ரேஷன் செய்து சொட்ட விட்டு அப்படியே தொண்டைக்குள் கவிழ்த்துக் கொண்டால் அந்த டிராகனுடைய வாயிலிருந்து வெளிப்படும் அனலை விழுங்கி வைத்தது போல்தான் இருக்கும்! சாராயமா அது? அடேயப்பா! திரவமாய்த் திரண்ட நெருப்பு!''

அவன் உற்சாகத்தில் துளியேனும் பங்கெடுத்துக் கொள்ளாத வடிவேலு, ''சீனர்கள் நடத்துகிறார்களா இந்தக் கிளப்பை?'' என்று கேட்டான்.

''ஆமாம்; இங்கே ஒரு சீனப் பெண் பணி புரிகிறாள். அவளை உனக்கு இன்றைக்கு அறிமுகம் செய்துவைக்கிறேன்.''

''ஆளை விட்டால் போதும்; கையெடுத்துக் கும்பிடுவேன்!''

''அட, பயந்தாங்கொள்ளி! அவள் உன்னைக் கடித்துத் தின்று விட மாட்டாளடா! ரொம்ப நல்லவள்!'' என்று கூறிச் சிரித்துக் கொண்டே வடிவேலுவின் கையைப் பிடித்து இழுத்தான் சிவராமன், சாலையைக் கடந்து எதிர்ப்புறம் செல்ல.


கதவை அவர்கள் நெருங்குகையில் சடாரென்று அது திறந்து கொள்ள, பிரிட்டிஷ் சிப்பாய் ஒருவன் வெளிப்பட்டான். உஷ்ணப் பிரதேசத்துக்கு வந்ததனால் இயல்பாகவே செம்மை படர்ந்திருந்த அவன் மேனி, மித மிஞ்சிக் குடித்திருந்ததால் மேலும் சிவந்திருந்தது. கண்கள் இரண்டும் கொவ்வைப் பழங்களாக மாறியிருந்தன. கலைந்த கிராப்பும், காம வெறி கொண்ட விழிகளும் தளர்ந்த உடலும், தள்ளாடும் நடையுமாக அவன் தடுமாறினான்.

'மது அருந்தத்தான் செய்கிறார்களே, ஓர் அளவோடு அதை நிறுத்திக் கொள்ளக் கூடாதா? இப்படியா வயிற்றைக் குமட்டுகிற மட்டும் குடித்து வைப்பார்கள்? அநாகரிக மனிதர்கள்! சீ!' - அருவருப்புடன் அந்தப் பிரிட்டிஷ் 'டாமி'யை நோக்கினான் வடிவேலு.


அந்தச் சிப்பாய் 'குபுக்' கென்று நிமிர்ந்தான். தன்னைத் தானே சுற்றி வந்து நாலாபுறமும் எதையோ தேடினான். குனிந்து தரையையும் ஆராய்ந்தான். சட்டென்று ஏதோ நினைத்துக் கொண்டவனாக விடுதியின் கதவைத் தள்ளித் திறந்து கொண்டு இடுப்புவரை உடலை உள்ளே நுழைத்தான். மீண்டும் அவன் தெருவில் நேராக நின்ற போது அவன் இடது கை விரல்களுக்கிடையில் ஒரு மென் கரம் சிக்குண்டிருந்தது.

கரத்துக்குரியவள் மீது கண்ணோட்டம் செலுத்தினான் வடிவேலு. சிவப்புச் சாயம் பூசப்பெற்றிருந்த நீண்ட கூரிய நகங்களில் தொடங்கிய அவன் விழிகள் மேல் நோக்கிப் பயணமாயின. ஆடை ஏதும் மறைக்காத அந்த உருண்டையான கைகளின் மீது வழுக்கியவாறே தவழ்ந்து சென்ற பார்வை, நேர்த்தியான தோள்களின் மீது படர்ந்து, சீராகச் சின்னதாகச் சமைக்கப்பட்டிருந்த தொண்டைக் குழியில் விழுந்தெழுந்து இன்னும் உயர ஏறிச் சென்று அடக்கமாக அமைந்திருந்த முகவாயைக் கடந்து வதனத்தில் லயித்தது.

வெறுப்பும் கோபமும் கொந்தளித்த போதிலும் அந்தச் சீனத்துச் சிங்காரியின் முகம் அழகாய்த்தான் இருந்தது. மற்ற எல்லாச் சீனப் பெண்களையும் போல் இவளும் பிரிட்டிஷ்-அமெரிக்க நாகரிகத்தில் மூழ்கியிருந்தாள். குதிகாலைக் குறைந்தபட்சம் மூன்றங்குலமாவது உயர்ந்திருக்கச் செய்யும் கால் அணிகள் முதல்; கேசத்தை — பின்பக்கம் கழுத்தின் நடு மையத்தோடு நின்றுவிடுகிற மாதிரியும் முன் பக்கம் கவிந்து நெற்றியைப் பாதிக்கு மேல் மூடிக் கொள்வது போலவும் - வெட்டிவிட்டுக் கொண்டிருந்த பாணி வரையில் அவள் தன்னை அலங்கரித்துக் கொண்டிருந்த விதத்தில் அவளுடைய தாய்நாட்டுப் பண்பாட்டையோ, நாகரிகத்தையோ லவலேசமும் காணோம். / எவ்வளவுதான் நடையுடை பாவனைகளில் பிறநாட்டு மோஸ்தர்களை மேற்கொண்டாலும்கூட பிறவியிலேயே படைத்த லட்சணங்களை மாற்றி அமைக்க யாரால் முடியும்? சற்றுத் தட்டையான மூக்கு, அதன் அடிவாரத்திலிருந்து ஆரம்பமாகி இலேசாக மேல் நோக்கி வளைந்து செல்லும் பாதாம் பருப்பு போன்ற நயனங்கள், உயரம் அதிகமில்லாத ஆனால் வளமான இளம் மஞ்சள் நிற மேனி, கரிய கேசம், சிறிய வாய் ஆகியவை அவள் சீன தேசத்தவள் என்பதை உறுதிப்படுத்தின.



பாண்டியன் பாங்க் ஜெனரல் மானேஜர் திரு கே. எஸ். சுப்பிரமணியன் அவர்களின் புதல்வர் திரு ராமதுரை சௌ' உஷாவை மணம் புரிந்துகொண்டார்.



பம்பாய் ஸ்வஸ்திக் ஆயில்மில்லின் உதவி மானேஜர் திரு பி. என். சந்திரசேகரன் அவர்களது புதல்வி சௌ. பார்வதி திரு. கே. கோவிந்தராஜனை மணந்து கொண்டார்.

இரண்டாவது புறத் தோலாக அவள் ஓர் ஆடையை அணிந்திருந்தாள். தோளிலிருந்து மேனியைத் தழுவித் தொங்கி, முழங் கால்களை மறைப்பதோடு நின்று விட்ட அந்தக் கவுனுக்குக் கைகள் இல்லை. அதன் அடிவாரத்தில் கீழிருந்து மேலாகக் கிழித்து விடப்பட்டதுபோல் நாலு அங்குல நீளத்துக்குக் கத்திரிக் கோலால் வேண்டுமென்றே வெட்டித் தைக்கப்பட்டிருந்தது. இறுக்கமான ஆடையானதால் நடப்பதற்கு இலகுவாக இருக்க வேண்டும் என்கிற நியாயமான காரணத்தோடு, உடையை உருவாக்கிய நிபுணன் அவ்வாறு வெட்டித் தைத்திருந்த போதிலும், அந்த ஏற்பாடு, கவுன் தன் முதற் கடமையை அடிக்கடி மறந்து விடவும் உள் ஆடை வெளியுலகை எட்டிப் பார்க்கவும் துணை செய்தது. வெள்ளைத் துணியில் கறுப்பு மையை அள்ளித் தெளித்தாற் போல் விசித்திரமான கோலங்கள் அச்சாகியிருந்த துணியினால் தயாரான அந்தக் 'கவுன்' தேகத்தின் மேடு பள்ளங்களில் படிந்து பற்றிக் கொண்டதுடன் மின்னி மங்கும் விளக்குகளின் ஒளியில் மேலும் சூட்சமமாகத் தென்பட்டு ஏதோ ஒரு மாயாஜாலபுரியில் அவளைக் காண்கிற திகைப்பை ஊட்டியது.


இவற்றையெல்லாம் ஒரு சில விநாடிகளுக்குள் மனத்தில் வாங்கிக் கொண்ட வடிவேலு அவள் இப்போது வெள்ளைச் சிப்பாயின் முரட்டுப் பிடியில் சிக்குண்டு அவஸ்தைப்படுவதையும் கவனித்தான். திமிறினாள்; கையை உதறினாள்; இடது கை விரல்களால் தன் வலக் கரத்தைப் பற்றியிருந்த வெள்ளையனுடைய தடித்த விரல்களை நெம்பித் திறக்க முயன்றாள்; பலனில்லை.

அட்டகாசமாய்ச் சிரித்தான் அந்த ஆங்கிலேயன். அவள் கரத்தை விடுவித்துவிட்டு, தனக்குப் பக்கத்தில் நடந்து வருமாறு அவளைச் சுற்றி வளைத்தான். இரும்புத் தளையைப் போன்ற பலம் வாய்ந்த கரத்தால் அவளைக் கட்டிப் பிடித்தவாறே தர தரவென்று இழுத்துச் சென்றான். சூறாவளியில் அகப்பட்டுச்சுற்றிச் சுழலும் சிறு படகிலிருந்து தப்பி, காற்றினால் கடையப்பட்டுக் கொந்தளிக்கும் கடலுக்குள் விழுந்தது போல், அவள் துன்பம் அதிகரிக்கத் தவித்தாள்.

ஒரே பாய்ச்சலில் பண்பு கெட்ட அவனெதிரே போய் நின்றான் வடிவேலு. ''இந்தப் பெண்ணுக்குத் தொந்தரவு கொடுக்கிறாய் நீ! விட்டு விடு இவளை!''

வெள்ளையனுக்கு ஒன்றுமே விளங்கவில்லை, முதலில். சற்று நேரம் திருதிருவென்று விழித்த பின்னர்தான் மதுவினால் மழுங்கியிருந்த அவன் மூளை செயல்பட ஆரம்பித்தது. கேவலம் ஓர் இந்தியன் தன்னிடத்தில் சிக்குண்டிருக்கும் சீனத்துச் சிங்காரியை விடுவிக்குமாறு தனக்குக் கட்டளையிடுகிறான் என்பது அவன் அறிவுக்கு எட்டியதும் கோபம் பொங்கியது அவனுக்கு. வலது உள்ளங்கையை வடிவேலுவின் மார்பில் பதித்து ஒரு தள்ளுத் தள்ளினான் அவன். துரிதமாகச் சிந்திக்கும் திறன் குறைந்திருக்கலாம் அவனுக்கு; தெம்பு வலிமையும் குன்றவில்லை. சுமார் மூன்று கெஜ தூரம் பின்னால் நகர்ந்துதான் நின்றான் வடிவேலு. அவன் மேனி பதறியது.

நாலடிகளைப் பின்னோக்கி எடுத்து வைத்தவன் இரண்டே எட்டில் வெள்ளைச் சிப்பாயை அணுகினான். முன்புறத்தில் அவன் சட்டையை இடக்கரத்தால் முறுக்கிப் பிடித்துக் கொண்டான்,



அருமையான பொருள்களுக்கு உரிமையான இடமெதுவோ அங்கே...

ஆதரவுக்கு ஆதரவான அன்னைக்கு ஆதரவு: டால்டா


தென்புக்குத் தென்பு... அன்புக்கு அன்பு... தென்பை வளர்க்கும் அன்பு...பொன்போன்ற பொருள்களையே தரும் தாயன்பு! அன்பிலே விளைந்த இன்பம்... டால்டா வனஸ்பதியினாலான தின்பண்டங்கள்! ஆம். தரத்திலுயர்ந்த தாவர எண்ணெய்களாலான டால்டா... சுகாதார முறைப்படி ஸீலிட்ட டப்பாக்களிலே புதுமையோடு வரும் தூய்மையான டால்டா...வளரும் கண்மணிகளுக்கான வைட்டமின்கள் அடங்கிய வனஸ்பதி...எந்த நாளும் நம்மவர்க்கே சொந்தமன்றோ...




டால்டா வனஸ்பதி: அறுசுவைச் சமையலுக்கு உறுதுணை

DL. 81-X52 TM

இந்துஸ்தான் லீவர் தயாரிப்பு



கல்கத்தா திரு டி. எஸ். சீதாபதி அவர்களின் புதல்வர் ஸ்ரீ ரமணசுப்பிரமணியனுக்கும், சௌ. லலிதாவுக்கும் விமரிசையாகச் சென்னையில் திருமணம் நடந்தேறியது.



மேட்டூர் கெமிக்கல்ஸின் செயலாளர் திரு ஆர். நடராஜனின் புதல்வி சௌ. சுகந்தாவுக்கும் திரு நாராயணசாமிக்கும் திருமணம் நடைபெற்றது.

உள்ளங் கையாலும் புறங்கையாலும் மாறி மாறி இரண்டு கன்னங்களிலும் விநாடிக்கு இரண்டு அடிகள் வீதம் கொடுக்க மற்றொரு கரத்தைப் பயன்படுத்திக் கொண்டான். பிறகு அவன் கால்களுக்கிடையில் கனமான பூட்ஸ் அணிந்த தன் இடது பாதத்தைத் தடங்கலாகக் கொடுத்துத் தடுக்கி விழுமாறு அவனைப் பின்னால் தள்ளினான். தடாலென்று தரையில் சாய்ந்த ஆங்கிலேயன் மீண்டும் எழுந்திருக்கவேயில்லை. குடித்த மதுவும் வடிவேலு கொடுத்த அறைகளும் அவனை ஒரு வழியாக்கி விட்டன. அவன் உடல் அசையக் குறைந்தது ஒரு மணி நேரமாவது ஆகும்.

நெடுமூச்சுடன் சிரத்தை உயர்த்திய வடிவேலு சண்டை அத்துடன் முடிந்து விடப் போவதில்லை என்பதை அடுத்த கணமே உணர்ந்தான். மது விடுதிக்குள்ளிருந்து ஏழெட்டு ஆஸ்திரேலியச் சிப்பாய்கள் வெளியே ஏதோ அரவம் கேட்டுத் திபு திபு வென்று ஓடி வந்தார்கள். மயங்கி விழுந்து கிடந்த தங்கள் நண்பனைப் பார்த்ததும், ''கொன்று விட்டான்! குத்தி விட்டான்!'' என்று தாறுமாறாகக் கூச்சல் போட்டார்கள். அவர்களுள் காப்டன் ஒருவன், கொலை வெறி தாண்டவமாடும் முகத்துடன், கருப்பனைக் கடுகடுப்புடன் நோக்கியபடி இடுப்பிலிருந்த துப்பாக்கியை எடுக்க முற்பட்ட போது சிவராமன் சீறி எழுந்தான். ரிவால்வரைத் தொடுவதற்கு முன்பாகவே காப்டனுடைய வயிற்றை உலக்கைபோன்ற கால் ஒன்று தாக்கியது. அவன் சுருண்டு விழுந்ததைத் தொடர்ந்து அங்கே மனிதர்களுடைய தேகங்கள் குன்றாக ஒன்று திரண்டன. யாருடன் யார் போராடுகிறார்கள் என்பதே புரியாதபடி அவர்கள் கட்டிப் புரண்டனர். அடி, உதை, குத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர்.

மோட்டார் சைக்கிள்கள் இரண்டு சற்றுத் தொலைவில் சந்தின் முனை திரும்புகிற ஒலியையோ அல்லது விசில் ஊதப்படுகிற ஓசையையோ மும்முரமான மல் யுத்தத்தில் ஈடுபட்டிருந்த வடிவேலு சரியாகக் கேட்கவில்லை. ஆயினும் மற்ற அனைவருக்கும் ஏதோ விபரீதம் நேரப் போவதாக உள்ளுணர்வு எச்சரித்ததோ என்னவோ, கண்ணிமைக்கும் நேரத்தில் சிவராமன் உள்படச் சகலரும் சிட்டாய்ப் பறந்து விட்டார்கள்.

ஏன் ஓடினார்கள்? எங்கே மறைந்தார்கள்? வியப்படைந்து தரையிலிருந்து எழுந்த வடிவேலு தான் மட்டுமே தனித்து விடப்பட்டிருப்பதைக் கண்டான். இல்லை! வீரர்கள் எல்லாரும் பீதியடைந்து கண நேரத்தில் அந்த இடத்தைக் காலி செய்து விட்ட போதிலும் பெண்ணொருத்தி அசாதாரணமான துணிச்சலுடன் அவனுக்குத் துணையாக நிற்கத்தான் செய்தாள். ஆனால் மற்றவர்கள் எதற்காகப் பயந்து ஓடி ஒளிந்தார்கள்?

வடிவேலு உடற்புழுதியைத் தட்டிக் கொள்ளு முன்னரே அவன் கையைப் பற்றினாள் அந்தச் சீனப் பெண். ''மிலிட்டரி போலீஸ்!'' என்று எச்சரித்து விட்டு, தன்னுடன் வருமாறு கூறி அவனை இழுத்துக் கொண்டு ஓட ஆரம்பித்தாள்.

அதே நேரத்தில் வேகமாய் முன்னேறிய மோட்டார் சைக்கிள்களை 'டிராகன்' வாசலில் நிறுத்தி விட்டு வடிவேலுவை எட்டிப் பிடிக்கக் குதித்தார்கள் நான்கு ஆங்கிலேய மிலிட்டரி போலீஸ்காரர்கள். (தொடரும்)

நாணயம்

ஸ்ரீரங்கம் நரசிம்மன்

பாலாஜி அந்த ஹோட்டலுக்குள் அன்றைக்குத்தான் நுழைந்தான். பொதுவாக அவன் தனியாக எந்த ஹோட்டலுக்கும் போவது கிடையாது. கையில் கிடைக்கும் சில்லறைக்குப் பிஸ்கோத்து, கடலை, மாங்காய்த் துண்டம் இம்மாதிரித் தின்பண்டங்கள் தான் வாங்கிச் சாப்பிடுவான். கையில் சில்லறை ஓட்டம் கொஞ்சம் அதிகமாயிருந்தால் அவன் பள்ளிக்கூடத்துக்கு எதிரில் உள்ள ஐஸ்கிரீம் பார்லரில் ஒரு கப் ஐஸ்கிரீமோ, ப்ரூட் ஸாலடோ வாங்கிச் சாப்பிடுவான். மற்றப்படி காப்பி ஹோட்டலுக்குச் சென்று இட்டிலி, வடையுடன் சாம்பாரில் நீச்சல் அடிக்கும் வழக்கம் கிடையாது. அப்படியே அபூர்வமாகச் சென்றாலும் ஏதாவது ஒரு சிறிய கடைக்குத்தான் போவான்.

அன்று அவனுடைய நண்பன் ராமுதான் அவனை அந்தப் பெரிய தடபுடல் ஹோட்டலுக்கு அழைத்துச் சென்றான். ஏதேதோ புது விதமான பதார்த்தங்களை யெல்லாம் வரவழைத்துப் பாலாஜியைச் சாப்பிடுமாறு மல்லுக் கட்டினான். எல்லாமே சுவையாகத்தான் இருந்தன. ஆனால் பாலாஜியின் கவனம் வேறு இடத்தில் இருந்ததால் ஆகாரத்தின் ருசியை அனுபவிக்கவில்லை.

பாலாஜிக்கு இயற்கையாகவே சங்கீதஞானமுண்டு. கர்நாடக சங்கீதம், லகு சங்கீதம், சினிமா சங்கீதம் என்ற பாகுபாடெல்லாம் அவனுக்குத் தெரியாது. இனிமையாயிருக்கும் எந்தப் பாட்டையும் ஒரு முறை கேட்டால் போதும். .அந்த மெட்டை அப்படியே மனத்தில் வாங்கிக்கொண்டு ஒரு சுரம் பிசகாமல் பாடி விடுவான். அந்த ஹோட்டலில் வைத்திருந்த ஒரு புதுமையான இசைப் பெட்டியிலிருந்து வெளிவந்த பாட்டு ஒன்று அவன் சிந்தையைக் கவர்ந்து கொண்டிருந்தது. உயர்ரகத் தின்பண்டங்களையும் மறந்து ரஸித்துக் கொண்டிருந்தான்.

''என்னடா, அங்கேயே பார்த்துக் கொண்டிருக்கிறாய்?'' என்றான் ராமு.

''இல்லே.... அந்தப் பாட்டு....''

''நன்றாயிருக்கிறதா?''

''உனக்குப் பிடிக்கவில்லே?''

''எனக்குப் பிடித்தது பாதாம் ஹல்வாவும் ரோஸ் மில்க்கும்தான்!''

''அந்தப் பாட்டு ரொம்ப நன்றாயிருக்கிறது....!''

''அப்படியா? உனக்கு இன்னொரு தரம் கேட்கணுமா ?''

''இன்னொரு தரம் வைக்கச் சொன்னால் வைப்பார்களா?'' மிகவும் ஆர்வத்துடன் கேட்டான் பாலாஜி. ராமு மெள்ளச் சிரித்தவாறு, ''அவர்களை என்ன வைக்கச் சொல்வது? உனக்குப் பிடித்திருந்தால் நானே பாட வைக்கிறேன்!'' என்று கூறியவாறு தன் ஆசனத்திலிருந்து எழுந்தான்.

''ராமு! அவர்கள் ஒன்றும் சொல்ல மாட்டார்களா ?'' உள்ளூற ஆசையாயிருந்த பொழுதிலும் சிறிது பயத்துடன் கேட்டான் பாலாஜி.

''யார் என்ன சொல்வது? கால் ரூபாயைப் போட்டால் உனக்குப் பிடித்தமான பாட்டு!.... நீயே வேண்டுமானால் வந்து பாரேன்...'' என்று அவனையும் அழைத்துக் கொண்டு அந்தப் புதுமையான இசைப்பெட்டியின் பக்கம் சென்றான்.

''இதப் பார்த்தியா, ஒரு சில பாட்டுக்களின் பெயர்களை எழுதி வைத்திருக்கிறார்கள். கால் ரூபாய் நாணயத்தைப் போட்டுவிட்டு உனக்கு எந்தப் பாட்டு வேணுமோ அதற்குப் பக்கத்தில் உள்ள பித்தானை அழுத்தினால் அந்தப் பாட்டுக்கான இசைத் தட்டு அதற்கான இடத்தில் போய் உட்கார்ந்து கொண்டு பாடும்...'' என்று அதைப் பற்றி விளக்கி விட்டுப் பாலாஜிக்கு எந்தப் பாட்டு வேண்டும் என்று கேட்டான். அங்கு குறிப்பிட்டிருந்த பட்டியலைப் பார்த்து ஒன்றைச் சொன்னான் பாலாஜி. அடுத்த விநாடி அந்த இசைத்தட்டு பாட ஆரம்பித்தது. பாலாஜிக்கு அதிசயமாயிருந்ததுடன் ஒரு புதையல் கிடைத்தது போலவும் இருந்தது. கால் ரூபாய்க்குப் பிடித்தமான பாட்டு! எப்பொழுது வேண்டுமானாலும் கேட்கலாம்!


நாணயத்தைப் போட்டு பித்தானை அழுத்தும் வழியை அன்று கற்றுக் கொண்டான் பாலாஜி. மறு நாள் அவனாகவே வந்து ஒரு கால் ரூபாயைப் போட்டு அவனுக்குப் பிடித்த பாட்டு ஒன்றை ரஸித்து விட்டுச் சென்றான். அந்தப் பாட்டு அவனுக்குத் துளியும் பிசகாமல் வந்துவிட்டது. அதற்கடுத்த நாள் இன்னொரு பாட்டு. அதுவும் மனப்பாடம்.

பள்ளிக்குச் செல்லுகையில் அவனுக்குத் தினம் ஓரணா இரண்டணா கிடைக்கும். சில நாட்கள் அதற்கு ஏதாவது வாங்கிச் சாப்பிடுவான். சில நாட்கள் அப்படியே கொண்டு வந்து தனது பெட்டியில் போட்டு வைப்பான். அப்படி வைத்திருந்தது கிட்டத்தட்ட மூன்று ரூபாய் வரையில் சேர்ந்திருந்தது.

அந்தப் பணத்தில் தினம் கால் ரூபாய் எடுத்துக் கொண்டு விடுவான். பள்ளிக்கூடம் விட்டுத் திரும்புகையில் அந்தத் 'தடபுடல்' ஹோட்டலுக்குள் நுழைந்து 'கால் ரூபாய் கொடுத்தால் பாடுவேன்' என்று சதா திறந்து கொண்டிருக்கும் அதன் வாயில் நாணயத்தை ஊட்டித் தனக்கு வேண்டிய பாட்டை வரவழைப்பான். மற்றப்படி ஒரு நயா பைசாகூட எதையும் வாங்கிச் சாப்பிட மாட்டான். அவன் வருவது அங்கே பாட்டு கேட்கத்

தான். அவனுடைய கால் ரூபாய்க்கான பாட்டுடன் மற்றவர்கள் போடும் காணிக்கையில் இரண்டொரு பாட்டுக்களை இலவசமாகக் கேட்டு விட்டு வருவான். இது அவனை ஒரு வியாதி போல் பற்றிக் கொண்டது.

பாலாஜி சேர்த்து வைத்திருந்த பணம் முழுவதையும் அந்தப் பாட்டுப் பெட்டி விழுங்கி விட்டது. அப்பொழுதும் இருவர் பசியும் தீரவில்லை. வீட்டில் ஏதாவது காரணம் சொல்லித் தினம் கால் ரூபாய் வாங்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது அவனுக்கு. ''தினம் எதற்குடா?'' என்ற கேள்விக்கும் அவனால் தகுந்த பதில் கூற முடியவில்லை.



காய்கறி, சாமான்கள் வாங்கும் போது ஒரு விதமாக 'அட்ஜஸ்ட்' பண்ண வேண்டியிருந்தது. இதெல்லாம் அவனுக்குப் புது அனுபவம். அவனுக்கென்று ஏதாவது சில்லறை கொடுத்தால் அதை ஓரளவு செலவழித்து விட்டு மீதியைப் பத்திரமாகப் பெட்டியில் போட்டு வைப்பான். பொய் சொல்லிப் பணம் வாங்க வேண்டுமென்றோ, சாமான்கள் வாங்கும்போது மிச்சம் பிடிக்க வேண்டுமென்றோ இது வரை அவன் எண்ணியதில்லை. இப்பொழுது பாட்டுப் பித்தம் காரணமாக அப்படி ஓர் அவசியம் ஏற்பட்டு விட்டது!

எவனாவது ஏதாவது ஒரு பாட்டை முணுமுணுத்துக் கொண்டிருப்பான். அல்லது ரேடியோவில் ஒலி பரப்பப்படும் இசைத்தட்டு தெருவோடு போய்க் கொண்டிருக்கும் அவன் செவிகளில் பாய்ந்து சிந்தையில் பதிந்தும் பதியாமலும் அவன் வேட்கையைத் தூண்டி விடும். 'இன்னொரு முறை கேட்டால் அந்தப் பாட்டை அப்படியே பாடலாமே!' என்ற துடிப்பில் கால் ரூபாய்க்காக ஏங்கும் அவன் மனம். அப்பாவிடமோ அம்மாவிடமோ எதையாவது சொல்லிச் சம்பாதிக்க வேண்டும். சில சமயம் கிடைக்கும். சில சமயம் பாதிதான் கிடைக்கும். பாதியும் புரளாத நாளும் உண்டு. ''ஏதோ கிடைத்ததைக் கொடுக்கிறேன்; முதல் இரண்டு அடிகளையாவது பாடு' என்றும் அந்தப் பாடகர் கேட்கிறாரா? அந்த

மாதிரி ஒன்றுமே கிடைக்காத இரண்டொரு நாட்களில் வழக்கமாக அம்மா வைக்கும் பருப்பு டப்பாவிலிருந்தோ, அப்பாவின் பைக்குள்ளிருந்தோ ஓசைப்படாமல் ஒரு கால் ரூபாயை எடுத்துக் கொண்டு போய் அந்தப் பாட்டைக் கேட்டு விட்டு வருவான்.

கிட்டத்தட்ட ஒரு மாத காலம் இப்படியே செய்து கொண்டிருந்தான்.

ஹோட்டலில் கல்லாப்பெட்டியில் உட்கார்ந்திருந்தவர் — அவர் முதலாளியோ அல்லது முதலாளி ஸ்தானத்தில் இருந்தவரோ — பாலாஜியைக் கவனித்துக் கொண்டு வந்தார். ஒரு பதினறு வயதுச் சிறுவன் கையில் காசு கிடைத்தால் கண்டதை வாங்கிச் சாப்பிட நினைக்கும் வயதில் வயிற்றுப் பசியை உதறி விட்டு செவிகளுக்கு உணவளிக்கும் அவன் சங்கீத ஞானத்தைக் கண்டு உள்ளூற மகிழ்ந்தார். முதல் நாலைந்து தினங்கள் அவன் வந்து விட்டால் அவனே, அவன் மெய்ம்மறந்து பாட்டு ரஸிக்கும் காட்சியை ஓரக் கண்ணால் பார்த்துக் கொண்டிருப்பார். அவன் சில்லறையைப் போட்டு அவனுக்குப் பிடித்த பாட்டைப் பாட வைத்துக் கேட்டதும் இன்னும் வேறு யாராவது ஒரு கால் ரூபாயைப் போட்டு அவர்களுக்குத் தேவையான பாட்டின் பித்தானை அழுக்குவார்கள். அது மாதிரி ஓர் இரண்டு பாட்டுக்களையும் கேட்டுக் கொண்டிருந்து விட்டுத் திரும்புவான் பாலாஜி. அவன் திரும்புகையில், "ஏதாவது சாப்பிட்டு விட்டுப் போடா; நீ காசு ஒன்றும் கொடுக்க வேண்டாம்!" என்று சொல்ல வேண்டும் போலிருக்கும் அவருக்கு. ஆனால் முகத்தில் அடித்தாற்போல "உன் ஓசி டிபனுக்கு விங்கி லைவன் நாவில்லே" என்று பையன் சொல்லி விடுவானோ என்ற ஒரு தயக்கம் அவர் வாயைக் கட்டிப்போட்டிருந்தது.

முதல் நான்கு ஐந்து தினங்கள்தான் அவனைக் கவனித்துக் கொண்டிருந்தார் முதலாளி. பிறகு அவர் தமது கல்லாப் பெட்டியில் ஐக்கியமாகி விட்டார். அவருக்குக் குறி காசு தானே? எப்படியாவது பணம் சேர்ந்தால் சரி என்று தம் கருத்தை மாற்றிக் கொண்டு விட்டார்.

ஒரு மாத காலம் சென்றது.

அன்று பாலாஜி உள்ளே நுழையும்போது கவுண்டரில் அதிகக் கூட்டம் இல்லை. பாலாஜி பாட்டுப் பெட்டியின் பக்கம் போவதையும் கால் ரூபாயைப் போட்டு விட்டுப் பாட்டைக் கேட்பதையும் பார்த்துக் கொண்டிருந்தவர் அவன் திரும்புகையில் மலர்ந்த முகத்துடன், "இங்கே வா, தம்பி!" என்று அன்புடன் அழைத்தார். பக்கத்தில் போய் நின்றான். "தினமும் இப்படிக் கால் ரூபாயைப் போட்டு விட்டுப் போகிறாயே.... உன் வீட்டில் இதற்குத்தான் சில்லறை கொடுக்கிறார்களா?" என்றார். பாலாஜி பதில் ஒன்றும் சொல்லவில்லை. ஒரு புன்முறுவலுடன் நிறுத்திக் கொண்டான்.

"நீ படிக்கிறாயா?" என்றார்.

"ம்...."

"எந்தக் கிளாஸ்?"

"ஒன்பதாவது!"

பளீர் !

பாலாஜியின் கன்னத்தில் அவருடைய கை அவ்வளவு வேகமாக உறவாடியது. அந்தப் 'பளீர்' சப்தம் அவ்வளவு இரைச்சலையும் மீறிக் கொண்டு சாப்பிட்டுக் கொண்டிருந்தவர்களைவரையும் கவுண்டர் பக்கம் திரும்பிப் பார்க்கச் செய்தது

"ராஸ்கல்! தினமும் ஒரு செல்லாக் கால் ரூபாயைக் கொண்டு வந்து போட்டு விட்டா போகிறாய்? உன் அப்பன் கள்ள நாணயம் அடிக்கிறானுடா திருட்டுக் கழுதை!" என்று இரைந்தவாறு இன்னொரு கன்னத்திலும் ஒன்று கொடுத்தார்.

இரண்டு கன்னங்களையும் பொத்தியவாறு, "கள்ள நாணயமா?" என்றான் பாலாஜி. அவன் கண்களில் நீர் ததும்பி நின்றது. அதற்குள் ஒருவர், "என்ன விஷயம்?" என்றார்.

"பாருங்க சார், இந்தப் பயல் தினமும் வந்து ஒரு கால் ரூபாயைப் போட்டு விட்டு ஓர் இசைத்தட்டைப் பாட வைத்துக் கேட்டு விட்டுப் போகிறான். தினசரி ஒரு கள்ளக் கால் ரூபாய் நாணயம் அந்தப் பெட்டியிலிருந்து கிடைக்கிறது..." என்று கூறினார் ஹோட்டல் முதலாளி.

"நான் போடுவது நல்ல நாணயம்!" என்றான் பாலாஜி. வந்தவர், "இவன்தான் போடுகிறான் என்று எப்படிச் சொல்ல முடியும்? உங்களுக்குச் சந்தேகம் இருந்தால் அவன் வரும்போதே நன்றாகச் சோதித்திருக்க வேண்டும். அடித்தது தப்பு!" என்றார். முதலாளிக்குக் கொஞ்சம் பயம் கொண்டது.

பாரதியின் பாதையிலே!



கவிப்புதுமை செய்தபெருங்
 கவிஞனெனப் பேர்வாய்ந்து
தவத்தமிழின் சுவைபிழிந்து
 தண்ணமுதக் குயிற்கனியும்
புவியிடையே நேர்கொண்ட
 புதுமைப்பெண் சக்தியதும்
நவமிகுந்த பாரதமும்
 நனிபடைத்தான் பாரதியே!

காக்கையொடும் குருவியொடும்
 கலந்துறவு கொண்டதுடன்
நோக்குமெந்தப் பொருளிலுமே
 நுண்கண்ணன் றனைக்கண்டும்
வாக்கொளிக்குக் காரணம்மெய்
 வாய்ந்தஉள்ளத் தொளியென்றும்
பாக்களினைத் தேனாகப்
 பாடியவன் பாரதியே!

'எல்லாரும் ஓர்நிறையே
 எல்லாரும் ஓர்இனமே
எல்லாரும் ஓர்விலையே'
 என்னுமிந்தச் சமஉணர்வை
எல்லாருள் ளத்துள்ளும்
 இனிதாகப் பாய்ச்சியவன்
எல்லாரும் போற்றுமொரு
 இசைக்கவிஞன் பாரதியே!

சுதந்திரமாம் கனலூட்டிச்
 சோர்வகற்றி விழிப்பூட்டும்
பதங்களுறும் பாட்டியற்றிப்
 பாத்திறத்தால் மக்களிடை
இதமளிக்கும் விடுதலையின்
 எழுச்சியினைத் தோற்றுவித்தான்
முதன்மையுற்ற கவிச்சுடராம்
 முகிழ்த்திடுமோர் பாரதியே!

சித்தத்தே சிவம்நாடிச்
 சிவசக்தி அம்மையிடம்
மெத்தமிந்த மாநிலமே
 மேன்மைமிகு பயனுறச்செய்
வித்தகநல் வல்லமையை
 வேண்டிநின்றான் எந்நாளும்
சத்தியத்தின் வழிவந்த
 தருமகவி பாரதியே!

பாரதியின் பாதையிலே
 பண்மணக்கும் பாவினிலே
பாரதத்தின் ஒளிவிளக்காம்
 பார்போற்றும் காந்திநெறி
பூரணமாய்ப் பொலிவதனைப்
 புனிதமுடன் கண்டிடுவோம்!
ஈரமுடன் ஒன்றுபட்ட
 சீர்வாழ்வு கொண்டிடுவோம்!

—என். எஸ். சிதம்பரம்

எல்லோருமே பையனுக்குப் பரிந்து கொண்டு வந்து விட்டால்?

''போடா; இனியாவது நல்ல பையனாக இரு'' என்று தட்டிக் கொடுத்தார் போல் சொல்லி வெளியேற்றினர். வெளியில் வந்த பாலாஜியின் காதுகள் இரண்டும் 'ஙொய்' என்று சங்கீதம் பாடின. அந்தச் சங்கீதத்தின் இரைச்சலிலே இவ்வளவு நாட்களும் அவன் கேட்ட பாட்டுக்கள் அனைத்தும் மறைந்து விட்டன. 'நாணயம்' 'நாணயம்' என்ற பதங்களே பல்லவி பாடிக் கொண்டிருந்தன. அவன் அறிய அவன் செலுத்திய கால் ரூபாய்கள் நல்ல நாணயங்களே. அப்படி யானால் கள்ள நாணயத்தை நாள் தவறாது காணிக்கை செலுத்திய நாணயக்கார கன வான் யார்? எவரோ செய்த பாவத்துக்காகத் தான் அடி வாங்குவதா? பாலாஜிக்கு அழுகையும் ஆத்திரமுமாக வந்தது. 'இது என்ன நியாயம்?' என்று தெருவோடு கத்திக் கொண்டே போக வேண்டும் போல் துக்கம் பீறிக் கொண்டிருந்தது. ''நீ வீட்டில் பொய் சொல்லிக் காசு வாங்கினாய். சாமான்களைக் குறைத்து வாங்கி மிச்சம் பிடித்தாய்; தெரியா மலும் காசு எடுத்தாய். அதற்கான தண் டனை! இனியாவது நல்ல பையனாக இரு என்றாரே. அவருடைய பேச்சுக்காக இல்லா விட்டாலும் இனி நல்ல பையனாகவே இருக்க வேண்டும்!'' என்று எண்ணமிட்டவாறு நடந்தான்.

வழக்கமாகச் செலுத்தும் கள்ள நாணயக் காரர், அன்று பாலாஜி அடி வாங்குவதைப் பார்த்தும் எதையும் யோசிக்காமல் கால் ரூபாயைச் செலுத்திக் கானத்தை அனுபவித் துக் கொண்டிருந்தார்.




செப்டம்பர் 7 முதல்
காஸினோ. ஸ்ரீகிருஷ்ணா. உமா
மற்றும்
தென்னாடெங்கும்
ஒளிப்பதிவு
வின்செண்ட்
இசை
விஸ்வநாதன்
ராமமூர்த்தி
பாடல்கள்
கண்ணதாசன்
கலை
கங்கா
எடிட்டிங்
N.M.சங்கர்
தயாரிப்பு
சத்யம்
நஞ்சுண்டன்
சித்ரகலாவின்
போலீஸ்காரன்
மகள்
திரைக்கதை, வசனம்
டைரக்ஷன் ......
ஸ்ரீதர்
ELEGANT



பூங்கா ரயில் நிலையத்தை அடுத்த சென்ட்ரல் ஜெயில் மதிற் சுவர் ஓரம் மங்கம்மாள் பனங்கிழங்கைக் கடித்துச் சுவைத்த வாறு உட்கார்ந்திருந்தாள். பக்கத்தில் அடுப்பு ஒரேயடியாகப் புகைந்து கொண்டிருந்தது. அதைப் பார்த்ததும் ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது. வெறுப்புடன் வாயிலிருந்த சக்கையைத் துப்பிவிட்டுத் தன் பலமெல்லாவற்றையும் திரட்டி அடுப்படியில் குனிந்து 'உப்'பென்று ஊதினாள். அந்தப் பேதைக்கிரங்கி அக்கினி தேவன் குப்பென்று பற்றிக் கொண்டு திகுதிகு வென்று எரிந்தான். அடுப்பின் மேல் நொய்க்கஞ்சி தளதள வென்று கொதித்துக் கொண்டிருந்தது. பக்கத்தில் ஐந்தாறு வயதுப் பெண் குழந்தை உடம்பை நெளித்தவாறு வேதனையில் முனகிக் கொண்டிருந்தது. மேலே வளைந்து தொங்கிய மரக்கிளையில் தூளியில் சின்னஞ் சிறு சிசு ஒன்று நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருந்தது.

சுதந்திர பாரதநாட்டிலே சகல உரிமையும்பெற்று மானத்தோடு ஒருவனுடன் வாழும் நங்கைதான் மங்கம்மாள். அவர்கள் தொழில் பிச்சை யெடுப்பது. எப்படியோ இரண்டு வேளையும் அவர்கள் வயிறு நிறைந்துதான் வந்தது. மூன்றாவது வேளையான 'டீ டைம்' மின்போது டீயும், ரொட்டியும் கிடைத்து வந்தன. ஆனால் இதெல்லாம் இந்த இரண்டு புது ஜீவன்களின் வருகைக்கு முன்பு. இப்போதெல்லாம் ஒரு வேளைக்கே லாட்டரி


நாளைக்கு?



சரோஜா ராமமூர்த்தி

தானே மங்கம்மாவின் கணவன் பொன்னன் போக்கே அனாதியாக மாறி விட்டது. சரிவர அவன் அவளிடம் துட்டுக் கொடுப்பதில்லை. 'நாலு இடம் சுத்தும் ஆம்பிள்ளே. அதை நாம கண்டிக்க முடியுமா? ஏதோ இந்த மட்டும் என்னே வச்சுக் காப்பத்துதே. அது போதும்' என்பாள் அவள். அவள் குரலில் நன்றி பொங்கி வழியும். கண்களில் கண்ணீர் கரை கட்டும். இரண்டு நாட்களாக மங்கம்மாவுக்கு அரை வயிற்றுக்குக் கூடப் போதவில்லை. அத்துடன் அவள் பிரசவித்து மூன்று மாதங்கள் முழுசாக ஆகவில்லை. உடலில், உள்ளத்திலும் ஒரே சோர்வு.

கஞ்சி கொதித்துக் கொதித்து அடங்கியது. அதை இறக்கி வைத்து விட்டு ஒரு மொடாவில் தண்ணீரை நிரப்பி அடுப்பின் மேல் வைத்தாள். ஆம்பிள்ளே வந்தால் உடம்புக்கு ஊற்றிக் கொள்ளச் சுடு தண்ணி கேட்பான். ஆனால் பானையை அடுப்பின் மீது ஏற்றும் போது சற்று ஆத்திரத்துடன் நக்கென்று தான் வைத்தாள். நல்ல வேளை! பானை நல்ல பழசு. விரிசல் காணவில்லை. வாழ்க்கையில் அடிபட்டுத் தேறிய திண்மையோடு பளபள வென்று கரியுடன் அடுப்பின் மீது ஒய்யாரமாக உட்கார்ந்து கொண்டது.



தூளிக் குழந்தை முனக ஆரம்பித்தது. மங்கம்மா குழந்தையை எடுத்து வந்து உட்கார்ந்து பாலூட்ட ஆரம்பித்தாள். அதற்கு நல்ல பசி. தன் வலிமையைத் திரட்டி அன்னையை வாட்டி வதைத்தது அந்தச் சிசு. மங்கம்மா உணர்ச்சியற்றவளாகக் குழந்தையின் தலைமயிரைக் கோதிக் கோதிப் பேன் பார்க்க ஆரம்பித்தாள். வாழ்க்கையின் லட்சியமெல்லாம் அந்த நிகழ்ச்சியில் அடங்கியது போல் வெகு கவனமாக எச்சிலைக் கூட விழுங்காமல் கையில் தட்டுப்பட்ட பேன்களைச் சொடுக்கிக் கொண்டே யோசனையில் ஆழ்ந்திருந்தாள் அவள். பக்கத்திலே படுத்திருந்த பெரிய பெண் தூக்கம் கலைந்து விழித்துக் கொண்டது.

''யம்மோவ்!..... தண்ணி .....'' என்று கேட்டு முனகியது. 'யம்மோவ்' அதைக் காதில் வாங்கவில்லை. 'ஆமாம்... இதுக்கென்ன வேலே' என்கிற அலட்சியம் அவள் பார்வையில் நிழலாடியது. அதுவும் அவள் பெற்ற செல்வம்தான். ஆனால், இன்று அவளுக்கே பாரமாக இருந்தது. கடந்த மூன்று நாட்களாக அதற்கு உடம்பு சரியில்லை. என்னவோ ஜுரம். அந்த ஜுரத்துக்கு அது இது என்று பெயரிட்டு அழைத்து, ஊசி போடப் பெரிய வைத்தியர்கள் யாரும் அந்தப் பெண்ணைப் பார்க்கவும் இல்லை. இவளும் அதை வைத்தியரிடம் அழைத்துப் போய்க் காட்டவில்லை. சுக்குத் தண்ணி, சுடுதண்ணி, டீ, பன் இவைதான் அந்தக் காய்ச்சலுக்கு மருந்தாகவும், 'டையட்'டாகவும் விளங்கின.

''யம்மோவ்.....'' என்று தன் குரலை உயர்த்திக் கூப்பிட்டது மறுபடியும்.

''என்னடி, சனுதை! சும்மா ஏன் கழுத்தை அறுக்கிறே?....'' என்று எரிந்து விழுந்தாள் மங்கம்மா.

''யம்மோவ்! சுடு தண்ணி....'' என்று பரிதாபமாகத் தாயைப் பார்த்தவாறு முனகியது அந்தப் பெண்.

''தரித்திரம் பிடிச்சவ....'' என்று அலுத்துக் கொண்டே அடுப்பின் மீது காய்ந்து கொண்டிருந்த பானையிலிருந்து 'சுடு தண்ணி'யைத் தகரக் குவளையில் மொண்டு வந்து நக்கென்று அதன் முன்னால் வைத்தாள் மங்கம்மாள். 'தன் தாய் ஏனிப்படி தன்னைக் கரித்துக் கொட்ட வேண்டும்?' அதற்கே எவ்வளவு யோசித்தும் புரிபடவில்லை. கைகள் நடுங்க மெல்ல எழுந்து உட்கார்ந்து சுடு தண்ணியை 'மடக் மடக்' கென்று குடித்து விட்டு அப்படியே சாய்ந்து படுத்துக் கொண்டது. அப்படியே யோசிக்கவும் ஆரம்பித்தது. சிந்திக்கத் தொடங்கியவுடன் அதன் சின்னஞ் சிறு மூளைக்கும் பல விஷயங்கள் விளங்க ஆரம்பித்தன. கடந்த நாலைந்து மாதங்களாக அந்தப் பெண் அடிக்கடி நோயில் விழுந்து, குடும்பத்துக்கு எந்தவிதமான உதவியும் செய்ய முடியாத நிலையில் இருக்கவே, தாய்க்கும் பாரமாகி விட்ட உண்மை புலப்பட்டது.

அம்மா வெட்டிச் சோறு போடுகிறாள். ஆகவே, அலுத்துக் கொள்கிறாள். குழி விழுந்த கண்களிலிருந்து பொல பொல வென்று கண்ணீர் வழிய வானத்தை அண்ணாந்து பார்த்துப் பெருமூச்செறிந்தவாறு படுத்துக் கிடந்தது அது.

சென்னை நகரின் இரவுதான் எவ்வளவு மனோகரமாக இருக்கிறது? வண்ண வண்ண விளக்குகள் எல்லாம் குபீரென்று எரிய, நெடுஞ் சாலைகளில் எத்தனை நாட்கள் கையேந்திப் பாட்டுப் பாடி நயா பைசாக்களைக் கொண்டு வந்து கொட்டியிருக்கிறது அது? கணீரென்று, 'பாலும், பழமும் கைகளில் ஏந்தி' என்று அது பாட ஆரம்பித்து விட்டால் சூப்பர்மார்க்கெட் வாசலில் நெரியும் கூட்டத்தில் எளிதாக ஐம்பது புதுக்காசுகளை ஒரு மணி நேரத்தில் சம்பாதித்து விடும். போலீஸ்காரரின் எச்சரிக்கையைக் கூட மதியாமல் அந்தப் பக்கத்திலிருந்து எதிர்ச் சாரிக்குத் தாவி ஓடி, பூங்கா ரயில் நிலையத்தின் மாடிப் படிகளில் குதித்து ஏறி அம்மாவிடம் காசுகளைக் கொடுத்து விட்டுப் பெருமிதத்தால் பூரித்து நிமிர்ந்து நிற்குமே!

''அடி பெண்கண்ணு! உங்கப்பனும் இருக்கானே, உதவாக்கரை. நாளைக்கு இரண்

குணத்தில் சிறந்தவை


ஸ்வஸ்திக் வேதாரணியம் புகையிலை

ஸ்பெஷல் தயாரிப்பு

13 & 15 ந. பை.

பிளாஸ்டிக் பொட்டலங்கள்

ARUNA



ஸ்பார்ட்டன் ஆட்டோ-லாக்கர்கள்

5 முக்கிய அம்சங்களுக்கு உத்திரவாதம் அளிக்கிறது



- ★ வர்ணத்தின் திடம்
- ★ உபயோகிப்பதின் எளிமை
- ★ நீண்டகால சேமிதம்
- ★ நீடித்த பளபளப்பு
- ★ சீரான தர மேன்மை



இந்தியாவில் முதலில் தயாரித்து
இன்னும் முன்னணியில் இருப்பவர்கள்

அடிஸன்ஸ் பெயின்ட்ஸ் & கெமிகல்ஸ் லிட்.

செம்பியம் - - சென்னை - 11

அங்கத்தினர்: இந்தியன் பெயின்ட் அசோசியேஷன்

K.T.R

பொன்னாங்கண்ணி தைலம்

ஊதுபத்திகள்
ஓமவாட்டர்
சந்தன பேஸ் பவுடர்

வாசனுதி திரவிய சாலை

விஜயபுரம், திருவாரூர்
தமிழ்நாடு

சென்னை நகர பூரண விநியோகஸ்தர்கள்: ஸ்ரீ சருநாத் ஏஜென்ஸிஸ், 35, மங்கபதி நாயக் தெரு, சிந்தாதிரிப்பேட்டை

உங்களுக்குத் தேவையான

வைர நகைகளுக்கு

தகுதியுள்ள இடம்

வீகம்ஸீஸ்

மதராஸ் - 1

•

பம்பாய் பிரதிநிதி

C. M. பாரேக்

"விருந்தாவன்"

274 ஸயான் ரோடு, பம்பாய் - 22

(தமிழ்ச் சங்கம் ஹால் அருகில்)

ஒரு காரட்டிற்குமேல் வைரம் வாங்குபவருக்கு
ஒரு நகைப் பெட்டி பரிசாக அளிக்கப்படும்.

நான்கு மருந்துகள் அடங்கியுள்ள


'அனஸின்'

வலிகளைப் போக்குகிறது	நிம்மதி அளிக்கிறது	சோர்வை விரட்டுகிறது	ஜுரத்தைத் தணிக்கிறது

ஒரு டாக்டர் குறித்துக் கொடுக்கும் பாதுகாப்பான மருந்துக்கு ஒப்பாக, விஞ்ஞான முறையில் நான்கு மருந்துகள் அனஸினில் ஒன்றுகலந்து இருப்பதால், வலிகளினின்று அதிவிரைவில் பூரண நிவாரணம் அளிக்கிறது. (2) பதட்டத்தைப் போக்கி நிம்மதி அளிக்கிறது—இதனுடன் இனிப்பாகிய பலனை நீங்கள் பெறுவீர்கள். (3) சோர்வை விரட்டுகிறது. (4) ஜுரத்தைத் தணிக்கிறது.

நான்கு மருந்துகள் அடங்கியுள்ள 'அனஸின்' வலியினின்று நிவாரணம்பெற மிக சிறந்தது. வீட்டில் எப்பொழுதும் அனஸின் வைத்திருங்கள்.

★ செல்லோபேன் தாளுக்குள் சுகாதார முறையில் பாக் செய்யப்பட்டு கிடைக்கிறது. இரு வில்லைகள் 13 காசுதான்.



அனஸின் மிகச் சிறந்தது

Registered User: GEOFFREY MANNERS & CO. LIMITED

TAM.Z. 49

டனுவுக்குக்கூட வக்கில்லேயே'' என்று அது னுடைய கன்னத்தை நெரித்து. இருஷ்டி சுற்றுவாளோ அவள் தாய்?

'சாமி! என்னே எப்படியாவது காப்பாத்திக் கொடு சாமி. நான் ஓடியாடி எங்கம்மாவை, தங்கச்சியைக் காப்பாத்தி விடறேன்' என்று மனத்துக்குள் சொல்லிக் கொண்டே கை யெடுத்துக் கும்பிட்டது அது.

''என்னடி செய்யறே? கும்பிடு கிம்பிடு எல்லாம் பலமாக்கிதே'' என்று எரிந்து விழுந் தாள் மங்கம்மா.

''வெளக்கேத்திப் போச்சே.... சாமி கும் பிடறேன் யம்மோவ்'' என்று தீனமாகக் கூறியது அது.

''கும்பிடுவே, கும்பிடுவே. குந்திக்கினே சோறு திங்கறே பாரு. கும்பிடமாட்டே நீ?''

மடியில் இருந்த குழந்தை கால்களையும், கைகளையும் ஆட்டி ஆட்டித் தாயைப் பார்த் துச் சிரித்தது.

''எங்கண்ணு! ராசாத்தி! நீ அந்தப் பீடை யைப் போல் சீக்காளியா இருக்க மாட்டே இல்லே? ஆத்தாளுக்குச் சம்பாதிச்சுப் போடு வியா கண்ணு?'' என்று கேட்டாள் மங்கம்மா, குனிந்து அதை முத்தமிட்டவாறு. வயிறு நிறைந்திருந்த மகிழ்ச்சியில் குழந்தை அவள் முகத்தைத் தன் சிறு கரங்களால் எட்டிப் பிடிக்க முனேந்தது. தாய் அதை அள்ளி அணைத்து முத்தமிட, அது சிரிக்க அங்கே தாயன்பின் ஒரு பகுதியை நன்ருகக் காண முடிந்தது.

வருங்காலத்தில் தன் வயிற்றுப்பாட்டை அந்தக் குழந்தையிடம் நம்பி ஒப்படைத்த குதூகலம் மங்கம்மாளின் முகத்தில் ததும்பி வழிந்தது.

வெளியே நன்ருக இருட்டி விட்டது. வழக் கம் போல் பொன்னன் அன்றும் வரவில்லே. அவன் வருவான் என்கிற நம்பிக்கையும் அவ ளுக்கு இல்லே. காய்ச்சி வைத்திருந்த கஞ்சியை உப்பிட்டுக் கலக்கிப் பருகினுள் மங்கம்மாள். மிகுதியைத் தகரக் குவளேயில் ஊற்றிப்பெரிய பெண்ணிடம் நகர்த்தினுள்.

''யம்மோவ்! ஜுரம் விட்டிருச்சி. சில் லுன்னு தண்ணியா உடுது ஒடம்பெல்லாம். பசிக்குது —'' என்றது அது.

''அதான் கஞ்சி ஊத்தி வைச்சிருக்கே. குடிச் சுத் தொலேயேன். ஜுரம் விட்டா பேதிவரும். போடி கழுதை—'' அலட்சியமாகக் கூறிவிட்டு வெற்றிலே போட ஆரம்பித்தாள் அவள்.

ஜெயில் சுவர் ஓரம் கூப்பிடு தூரத்தில் கிழவி ஒருத்தி இந்த நிகழ்ச்சியை இரண்டு நாட்களாக அலுக்காமல் கவனித்து வந்தாள். பம்மென்று பஞ்சு போல் வெளுத்திருந்த கூந்தலேத் தட்டி முடிந்தவாறு மங்கம்மாளே நோக்கி வந்தாள் அவள்.

''வா .... ஆயா .... சாப்பிட்டாயா?'' என்று விசாரித்தாள் மங்கம்மாள்.

''ஆச்சு .... ஆமா .... வும் புருசன் வீட்டுக்கு வரதே இல்லேயா?''

''வராம என்ன? எப்பவாச்சும் வரு வானே?''

''அப்ப, நீ சாப்பாட்டுக்கு என்ன செய் வறே?''

''அதையேன் கேக்குறே போ. பாதி நாளேக் கும் பட்டினிதான் ஆயா. கைக்குழந்தை வேறு. சீக்காளிப் பொண்ணு வேறு....''

''அதுவும் ஒம் பொண்ணு தானே? நீ பெத்தது தானு?''

''ஏன் ஆயா அப்படிக் கேக்குறே? அதுவும் எம் பொண்ணுதான். அது இருந்தும் ஒண்ணுதான் ....''

ஆயா நெருங்கி வந்து உட்கார்ந்தாள். குரலே இறக்கி ரகசியம் பேச ஆரம்பித்தாள்.

''நம்ப தொழிலு முன்னேப் போல் இல்லேடி மங்கம்மா. போட்டி வலுத்துப் போச்சு. ஒவ்வொருத்தரும் நல்ல குழந்தையா மூணு நாலு வச்சுக்கிட்டுப் பொழைப்பை நடத்த றுங்க. நீயானு இந்தச் சீக்காளிப் பொண்ணே வச்சுக்கிட்டு .....''

கிழவி மங்கம்மாளின் மடியில் கிடந்த குழந் தையை உற்றுக் கவனித்தாள்.

''இது ஒண்ணே நீ நல்லா வளர்த்தாப் போதுமே. அது ஒண்ணு எதுக்குன்னு கேக்கு றேன். சும்மா அதை எங்காச்சும் தள்ளி விடேன் —''

மங்கம்மாள் ஒன்றும் புரியாமல் விழித்தாள்.

''குனேயிலே ஒரு ஆளு .... நம்பளவன் தான்னு வச்சுக்கோயேன் — இருக்கான்.



புள்ளேங்களே நல்லபடியா பழக்கி அனுப்பு வான். பாட்டா, ஆட்டமா, வசிப்பா, ஊமை போலவா. எது வேணுமானுலும் கத்துக் கொடுப்பான். நல்லா சம்பாதிக்கும். அது பாட்டுக்குப் பொழிச்சுக்கும்—''

மங்கம்மாள் பெரிய பெண்ணேத் திரும்பிப் பார்த்தாள். ஜுரம் நன்ருக இறங்கிவிடவே, கஞ்சி குடித்து விட்டு அது நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருந்தது.

இன்றையப் பொழுதுக்கு நொய்க்கஞ்சி அவள் பசியைத் தணித்து விட்டது. நாளேக்கு? நாளே என்கிற நினைப்பே அவளுக்கு ஒரு பிரச்னேயாகவும், வேதனேயாகவும் இருந்தது. வயிற்றில் வேண்டுமானுல் சுமந்து விடலாம் போலிருந்தது. அது மண்ணில் விழுந்து விட் டாலோ அவளுக்குப் பாடாகத்தான் அமைந் திருந்தது. பிச்சைக்காரிக்குப் பிறந்துவிட்டு, படுக்கையில் கிடந்தால் முடியுமா?

''நீ என்ன சொல்றே ஆயா? குழந்தையை யாராச்சும் கொடுப்பாங்களா — ?''

''சே! சும்மாவா கொடுக்கச் சொல்றேன்? அஞ்சோ, பத்தோ வாங்கிக்க —''

மங்கம்மாளின் உள்ளம் சிலிர்த்தது. பிச்சைக்கார உலகத்திலும் 'பிஸினஸ்' நடத்தும் பேர்வழிகள் இருக்கிறார்கள் என்பதை நினைத்தவுடன் உலகமே பணத்துக்குள் அடங்கி விடும் அதிசயத்தை வியந்தாள் அவள். ஒரு கணம் கணவன் அதட்டுவானோ என்று யோசித்தாள். மறுவினாடி அவள் உள்ளத்தில் துணிச்சல் பிறந்தது. 'வச்சுக் காப்பாத்த வக்கில்லாதவனுக்கு அதிகாரம் ஒரு கேடா' என்று நினைத்துக் கொண்டாள். பசியின் முன்பு பத்தும் பறந்து விடும் என்று சொல்வார்களே. அது உண்மை தான். அவளுடைய உலகமெல்லாம் வயிற்றுப் பாட்டுக்குள் அடங்கி விடுகிற ஒன்றுதான்.

கிழவி பலே கெட்டிக்காரி. மங்கம்மாளின் உள்ளத்தில் ஓடுகிற எண்ணங்களை அவளுடைய முக அசைவுகளிலிருந்து கண்டு கொண்டாள். இடுப்பில் சொருகியிருந்த சுருக்குப் பையிலிருந்து ஐந்து ரூபாய் நோட்டு ஒன்றை எடுத்து, "இந்தா பிடி! அட்வான்ஸ். வச்சுக்க. நாளைக்குக் காலையிலே என்னோடே அனுப்பிடு. அது உடம்பு கிடம்பு எல்லாம் சரியாயிடும். நல்லபடியா பொழைச்சுக்கும்—" என்றவாறு அவளிடம் கொடுத்தாள் கிழவி.

ஒரு நாள் போவது ஒரு யுகமாக இருந்த நேரத்தில் புத்தம் புதிய ஐந்து ரூபாய் நோட்டைப் பார்த்தவுடன் அவளை அறியாமல் அவள் கைகள் நீண்டு அதைப் பெற்றுக் கொண்டன.

விடியற் காலத்திலேயே அது விழித்துக் கொண்டுவிட்டது. உடம்பு இலேசாக ஒரு விதச் சுறுசுறுப்புடன் இருந்தது. படுக்கையில் எழுந்து உட்கார்ந்து சுற்றுமுற்றும் பார்த்தது. அம்மாவும், குழந்தையும் ஒருவரை ஒருவர் அணைத்துப் பிடித்தவாறு நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தார்கள்.

அது நகர்ந்து நகர்ந்து குழாய் அடிக்குச் சென்று முகம் கழுவிக் கொண்டது. நெஞ்சுக்கு இதமாக ஏதாவது சாப்பிட்டால் தேவலைதான். யார் வாங்கிக் கொடுக்கப் போகிறார்கள்? விடித்ததும் விடியாததுமாகத் தன் வயிற்றுப் பாட்டை யார் கவனிக்க அவ்வளவு அக்கறையுடன் வரப் போகிறார்கள்? குழாயிலிருந்து சற்று தள்ளி வந்து உட்கார்ந்து கொண்டது. பரட்டைத் தலைக் கிழவி பம்மென்றிருந்த தலையைக் கோதி முடிந்து கொண்டு குழாயடிக்கு வந்து பல் தேய்த்து முகம் கழுவினாள். மாடிப்படிகளில் ஏறி வெளியே சென்றவள் தகரக் குவளையில் டீ வாங்கி வந்தாள். பரிவுடன் வந்து அதை அந்தப் பெண்ணிடம் கொடுத்தாள்.

நாலைந்து நாட்களாகப் படுத்துக் கிடந்தவளுக்கு அது எவ்வளவோ தெம்பை அளித்தது.

"ஆயா! நீ என்ன இந்த எடத்துக்குப் புச்சா?" என்று கேட்டது அந்தப் பெண் குழந்தை.

"ஆமாடி கண்ணு! இங்கே வந்து நாலு நாளாச்சு ....."

"உன்னைப் பாத்துக்க யாருமே இல்லியா ஆயா?"

"யார் இருக்காங்கடி அம்மா..." கிழவி கண்ணீரைப் பெருக்க விட்டவாறு மூக்கை உறிஞ்சினாள்.

"நீ எங்க வூட்டுக்கு வந்துடேன் ஆயா..!"

"அது எப்படி முடியும்? நீதான் என்னோடு வாயேன்...."

"எங்கே ஆயா? எங்கம்மாவைக் கேக்கணும்"

"இப்படி ஒரு சுத்து சுத்திக்கிட்டு வந்துடலாம் வா...."

தினம் தினம் பார்த்துப் பார்த்து அலுத்துப் போன மின் வண்டிகளும், ஜெயில் சுவர்களும், அரை வயிற்றுக் கஞ்சியும் இதற்கெல்லாம் மேலாக அன்னையின் அலட்சியமும் அதன் மனத்தில் அந்த இடத்தை உதறும்படியான வலிவை ஏற்படுத்தின.

கிழவி அதைக் கைத்தாங்கலாகப் பெஞ்சியில் உட்கார வைத்தாள்.

சென்னை கடற்கரையிலிருந்து தாம்பரம் செல்லும் மின்வண்டியில் கிழவியும், அதுவும் பிரயாணம் செய்யும் போது கிழக்கு வெளுத்து நிலம் தெளிய ஆரம்பித்து விட்டது.

தாம்பரத்தில் புகை வண்டியில் ஏறி உட்கார்ந்த பிறகுதான் அதற்குச் சந்தேகம் தோன்றியது.

"ஆயா...எங்கம்மா என்னைத் தேடுமே.." என்று ஆரம்பித்தது.


"அவ கெடக்கறு விடு.....இனிமே நான் தான் உனக்கு அம்மா, ஆயா எல்லாம்" வியப்புடன் அது அவளை விழித்துப் பார்த்தது.


"ஆமாண்டி, என்ன அப்படிப் பாக்குறே? சும்மா அப்படிப் பாத்து ஏதாச்சும் பேசினே, ஓடுற ரயில்லேந்து கீழே பிடிச்சுத் தள்ளிடுவேன். ஆமா....பெத்தவளா அவ? ஒன்னை அஞ்சு ரூபாய்க்கு வித்தவ."

நாணயத்துடனும், நேர்மையுடனும் வாழ வேண்டும் என்று எதிர்பார்க்கிற சமூகத்திலேயே பொய்யும், புரளியும் நிறைந்திருக்கிற இந்தக் காலத்தில், பசி ஒன்றையே தம் சொத்தாகக் கொண்டு, வறுமையின் மடியிலே வாழ்ந்து, மறைந்து வரும் பிச்சைக்கார சமூகத்தில் உயர்ந்த லட்சியங்களை எதிர்பார்க்க முடியுமா?



கிழவியும், அதுவும் புகை வண்டியில் பிரயாணத்தைத் தொடர, இனி நாம் ரயிலில் பிரயாணம் செய்யும்போதெல்லாம் அது பாடப் போகும் பாடலைக் கேட்டு, அந்தத் தொண்டு கிழவியைப் பரிதாபத்துடன் பார்த்து நயா பைசாக்களைத் தகரக் குவளையில் போட்டாள், அதைத்தான் நாம் தர்மம், புண்ணியம் என்கிற பெயரில் செய்துவிட்ட கடமையாக நினைத்து இறுமாந்து போவோம்.





இடமில்லை! இடமில்லை!!

எங்கும் இடமில்லை என்பதே பேச்சு — பெற்றோர் எல்லோரும் ஏக்கத்துடன் திரும்பலாச்சு

பிரதி வருடமும் ஜூன், ஜூலை மாதங்களில் ஒவ்வொரு வீட்டிலும் பெற்றோர்களின் இந்த பேச்சுத்தான் ஒலிக்கிறது. அட்டைக் கிளாஸ் அம்பிப் பயல் முதல், கல்லூரிகளில் காலெடுத்து வைக்கும் அண்ணன் வரையில் 'அட்மிஷனை' வேண்டிப் பிள்ளையார் கோவிலை முற்றுகையிடும் மாதங்கள் இவை. தேங்காய் வியாபாரிகளுக்கு நல்ல லாபம் தேடித் தரும் மாதங்கள் என்றும் சொல்லலாம்.

வெளியூரில், தன் தாத்தாவின் வீட்டில் இருந்து, படித்துக் கொண்டிருந்த என் குமாரன் விடுமுறைக்கு இங்கே, எங்களிடம் வந்திருந்தான். ஐந்து வருடங்களாக, அவன் பெற்றோரைப் பிரிந்து தான் அவ்வூரில் கல்வி பயின்று வருகிறான். பட்டண வாசத்தின் கெடுபிடிக்குப் பயந்துகொண்டு, மகனைக் கிராமத்துக்குப் படிக்க அனுப்பியிருக்கிறோம் என்பது இல்லை. என் குழந்தைக்கு ஆறாவது வயதிலேயே இங்கே பள்ளியில் இடமில்லை!

வீட்டிலேயே கல்வி போதித்து, எடுத்த எடுப்பிலேயே இரண்டாம் வகுப்பில் சேர்க்க எண்ணம் கொண்டு, ஆரம்பப் பள்ளிக்கு அழைத்துச் சென்றபோது, அங்கே பையனின் தகுதியைப் பரீட்சை செய்து பார்த்தார்கள்.

''உங்கள் பையன் மூன்றாவது வகுப்புக்குக் கூட ஏற்றவனாயிருக்கிறான். ஆனால் எங்கள் பள்ளியில், இரண்டு, மூன்று, வகுப்புகளில் ஒரு இடம் கூடக் காலியாக இல்லை. முதல் வகுப்பில் வேண்டுமானால் சேர்த்துக் கொள்கிறோம்'' என்று கூறினார்கள். எனக்குச் சொல்லி முடியாத கோபம்.

''இதைச் சொல்லத்தானா பரீட்சைசெய்து பார்த்தீர்கள்? போன வருடம் முதல் வகுப்பில் இடம் இல்லை என்றீர்கள். என் தந்தையும் ஒரு உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் தாம். அங்கே.....''

'சட்'டென்று இடைமறித்தார் தலைமை ஆசிரியர்.

''அப்படியானால் ரொம்பவும் சௌகரியமாயிற்று. அங்கேயே பையனை நீங்கள் விரும்பிய வகுப்பில் சேர்க்கலாமே'' என்று போதிக்க செய்தார். கிராமத்துப் பள்ளியில், என் மகனுடைய தகுதிக்கு ஏற்பக் கலபமாக இடம் கிடைத்தது! இதெல்லாம் ஐந்து வருடங்களுக்கு முன்பு ஏற்பட்ட அனுபவம்.

வருடா வருடம் கோடை விடுமுறையின்போது நான் குழந்தையைப் பார்க்கும் பாக்கியம் கிடைக்கும். இப்போது, என் மகன், முதல் பாரம் தேறி, இரண்டாவது பாரம் (தற்போதைய ஏழாம் வகுப்பு) செல்ல விருக்கிறான். இந்த வருடமாவது நாம் இருக்கும் இடத்திலேயே மகனைப் பள்ளியில் சேர்க்கவேண்டும் என்கிற ஆவல் உந்தித் தள்ள ஜூன் முதல் வாரத்தில் ஒரு நாள், நாங்கள் வசிக்கும் பகுதியிலுள்ள உயர்நிலைப் பள்ளிக்குப் பையனை அழைத்துச் சென்றேன்.

பள்ளி நிர்வாகிகளும், தலைமை ஆசிரியரும் ஒரு மேஜையின் முன் குழ்ந்தமர்ந்து 'அட்மிஷ' னுக்காக வருபவர்களைக் கவனித்துக் கொண்டிருந்தார்கள். என்னிடமும் விஷயத்தை விசாரித்தார்கள்.

''இரண்டாவது பாரத்துக்கு என்றால் இங்கே இடமில்லை. நான்காவது பாரத்துக்குத் தான் இருக்கிறது. முதல் பாரத்துக்குக் கூட மூன்று 'சீட்' உள்ளது.....''

இப்படித்தான் பதில் வந்தது!

''குறிப்பிட்ட கிராமத்தின் உயர்நிலைப் பள்ளியில் முதல் பாரம் தேறியிருக்கிறான்; இப்போது இரண்டாவது பாரம் தானே படிக்க வேண்டும்'' என்றேன். அவர்களில் இருவர் ஜாடையாக ஏதோ பேசிக் கொண்டார்கள்.

''ஹைஸ்கூலில் இருந்து வரும் பையனா? வயது என்ன? பெயர் என்ன?'' என்று குழந்தையை விசாரித்தார்கள்.

''சரி. நாளைக்காலை பத்து மணிக்குள் கட்ட நிதிக்கான பணம் இருபது ரூபாயுடனும், 'அட்மிஷ'னுக்காக ஸ்பெஷல் பீஸ் வகையறாவுடனும், டி. ஸி. யுடன் வாருங்கள். ஒரு 'சீட்' இருக்கிறது. நாளைக் காலைக்குள் அது பூர்த்தியாகாமல் இருந்தால் சேர்த்துக் கொள்கிறோம்....'' என்றார்கள்.

''டி. ஸி. ஊரிலிருந்து தானே வரவேண்டும்? இன்று அவசரக் கடிதம் எழுதுகிறோம். நாளையே கடிதம் அவர்களுக்குக் கிடைத்தாலும் உடனே தபாலில் அனுப்பி வைப்பார்கள். தயவு செய்து நாளை மறுநாள் வரையில் அவகாசம் அளிக்க வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டேன்.



"அதுவரை எங்களால் காத்திருக்க முடியாது. வேண்டுமென்றால் இன்று இப்போதே, அவசரத் தந்தி கொடுத்து, யாராவது ஒருவரை டி. ஸி.யுடன் இன்றிரவு ரயிலில் புறப்பட்டு நாளைக் காலையில் வரச் சொல்லுங்கள்....." என்றார்கள்!

மதுரை ஜில்லாவிலுள்ள கிராமத்திலிருந்து உடனடியாகச் சென்னைக்கு வர ஏற்படும் செலவு, எக்ஸ்பிரஸ் தந்திக்கு ஆகும் செலவு, பள்ளிக்குத் தர வேண்டிய பணம், ஆக இந்தச் செலவு நூறு ரூபாய். இனி புத்தகங்கள், நோட்டுக்கள் வேறு இருக்கின்றன. உடை விஷயம் தனி! சர்க்கார் குமாஸ்தா ஒருவர் இத்தகைய செலவுகளுக்கு (அதுவும் ஒரு பையனைப் பள்ளியில் சேர்க்க; மற்றக் குழந்தைகள் கணக்கு வேறு) ஈடு கொடுக்க எங்கே போவது? நாடே கடன் வாங்குகிறது. நமக்கு என்ன, என்று கடன் வாங்கியாவது செலவு செய்யலாம் என்றால், "நாளைக் காலை பத்து மணிக்குள் வந்தால் தான், அதுவும் இடம் பூர்த்தியாகாமல் இருந்தால் தான்" என்ற நிபந்தனைகள் வேறு. ரயில் தாமதமாக வந்தால் என்ன செய்வது? வீண் செலவுக்கு எவர் பொறுப்பாளியாக முடியும்? என் பொறுமை எல்லை மீறி விட்டது.

"இவ்வளவு சிரமப்பட்டு டி.ஸி. வாங்கி வந்தால், இடமளிப்பதாய் உறுதி கூறுகிறீர்களா?" என்று கோபத்தில் என்னிடமிருந்து சொற்கள் வெடித்தன.

"அது உங்கள் அதிருஷ்டத்தைப் பொறுத்தது...." என்று பதில் வந்தது.

எப்படியிருக்கிறது விஷயம்? அரசனை நம்பிப் புருஷனைக் கைவிட்ட கதை போலத்தான். முடிவு? இந்த வருடமும் மகனைப் பிரிந்திருக்க வேண்டிய கட்டாயம் தான்! அடுத்த வருடமாவது இப் பிரச்னைக்கு வழி காண முடியுமா?

அண்ணனின் 'அட்மிஷன்' விஷயம் இப்படி என்றால், அம்பிப் பயலைச் சேர்க்க வேறு விதக் கஷ்டம். ஆரம்பப் பாடசாலையில் அவனுக்கு இடம் வேட்டை ஆரம்பமாயிற்று.

"எங்கள் பள்ளியில், பள்ளி நேரம் முடிந்ததும் மேலே ஒரு மணி நேரம் பிரத்தியேக வகுப்பு நடத்துகிறோம். அதற்காக மாதம் மூன்று ரூபாய் தர வேண்டும். ரசீது கிடையாது. புதிதாகச் சேரும் மாணவன் ஒவ்வொருவருக்கும் இது கட்டாயம்" என்றார்கள்.

'என். ஜி. ஓ.க்களின் குழந்தைகளுடைய படிப்புக்குச் சம்பளமில்லாத சலுகை என்று பெயர். ஆனால் நடைமுறையிலோ?...."

உமா குருமூர்த்தி
சென்னை – 33


"அப்பா! லிச்சு பாஸாயிட்டான். நம்பர் வந்திருக்கு!" காதருகில் இரைந்து கத்தினான் எனது இரண்டாவது பையன். இன்னும் சற்று நேரம் தூங்க இருந்தவன் திடுமென்று எழுந்து உட்கார்ந்தேன். தீபாவளி போல் எல்லோரும் அதிகாலையிலேயே எழுந்திருந்து, என் கட்டிலைச் சூழ்ந்து கொண்டு விட்டார்கள். "இதோ பாருப்பா நம்பர்." எனது கடைக் குட்டி பேப்பரைக் கொண்டு வந்து என் முன்னால் நீட்டினான். "இரண்டாம் கிளாஸில் பாஸ் பண்ணி யிருக்கிறான்" என்றாள் என் பெண் அதற்குள்.

அன்று எனது 'ஆபீஸில்' கிடைத்த வாழ்த்துக்களுக்குக் குறைவே இல்லை. ஆனால் வீடு வந்ததும், இருந்த மகிழ்ச்சியெல்லாம் போன இடம் எனக்கே தெரியவில்லை. காரணம் "அப்பா, நான் நாற்பத்தெட்டு சதவீதம்தான் மார்க்குகள் வாங்கியிருக்கிறேன்" என்று என் பையன் சொன்னதுதான். இந்தக் காலத்தில், அதுவும் இந்த பம்பாயில், நாற்பத்தெட்டு சதவீதம் வாங்கியவனுக்கு எந்த 'காலேஜில்' உடனே இடம் கிடைக்கும்?

அடுத்த நாள், எல்லா காலேஜுகளையும் சுற்றிப் பார்த்து விட்டு, "அறுபது சதவீதம் வாங்கியவர்களைத்தான் அப்பா சேர்த்துக் கொள்ளுகிறார்கள்" என்றான் பையன். மனைவியோ, "நீங்கள்தான் எங்கேயாவது சிபாரிசு பிடித்துக் குழந்தையைச் சேர்த்து விடுங்களேன்" என்று நச்சரித்தாள். அன்று இரவு முழுதும் யாரைக் 'காக்காய் பிடிப்பது' என்று எண்ணமிட்டவாறே படுத்திருந்தேன். அதிகாலையில் எண்ணம் உதயமாயிற்று.

எனது 'கம்பெனி' முதலாளி பக்கத்திலிருந்த காலேஜுக்கு நன்கொடை கொடுத்திருந்தார். அவர் பெயராலேயே அந்தக் காலேஜும் விளங்கியது. எனக்கோ அவர் பெயர் தெரியுமே தவிர அவரைக் கண்டதில்லை. ஒருவாறு என் தயக்கத்தினை நொந்து கொண்டு மானேஜர் காலைப் பிடிக்கக் கிளம்பினேன். நான் சரணம் என்று அவர் காலைப் பிடிக்க, அவரும் அபயம் அளித்துப் 'போனைக்' கையில் எடுத்தார். என் பெயரையும், பையனின் பெயரையும் சொல்லி முதலாளியிடம் போனில் ஏதோ பேசினார். போனைக் கீழே வைத்த அவர் முகம் மலர்ந்தது. எனக்குச் சந்தோஷம் தாங்கவில்லை. "பையனை அழைத்துக் கொண்டு காலேஜ் 'பிரின்ஸிபா'லைப் போய்ப் பாருங்கள். முதலாளியும் போனில் பிரின்ஸிபாலுக்குச் சொல்லி விடுவார்" என்றார் புன்னகையோடு.

விழுந்தடித்துக் கொண்டு நேராகக் காலேஜுக்கு ஓடினேன். பிரின்ஸிபாலிடம் பேசி அவனுக்கு ஓர் இடம் நிச்சயம் செய்து வைத்துவிட்டு, பிறகு பையனைப் பணம் அனுப்பினால் போதாதா என்ற எண்ணம் ஒருபுறம். நான் செய்துவிட்ட அருமையான செயலைத் திரு



மென்று வெளிப்படுத்த வேண்டுமென்ற நைப்பாசை மற்றொரு புறம்.

என்ன ஆச்சரியம்! பிரின்ஸ்பால் அறைக்குள் நுழைந்தவுடன் என் பெயரை சொல்லிக் கூப்பிட்டு, "உங்கள் பையனுக்குத்தானே இடம் தரச் சொன்னார் 'சேட்'? பையனை அழைத்து வந்திருக்கிறீர்களா?" என்று கேட்டார். "இல்லை நான் மட்டும் தான் வந்தேன்...." என்று இழுத்தேன்.

"பரவாயில்லை நாளை உங்கள் பையனைப் பணத்துடன் அனுப்பி வையுங்கள்: சேர்த்துக் கொள்கிறோம்" என்றார்.

உச்சி குளிர ஓடி வந்தேன். எனது சாகஸத்தை வெளியிட்டேன். எல்லோரும் என்னையே பார்த்துக் கொண்டு நின்றார்கள். "டேய்! நாளைக்குப் பணத்தைக் கட்டிவிட்டுச் சேர்த்துக்கோ. போ, நல்லாப்படி" என்று மிரட்டினேன் பையனைப் பார்த்து.

அடுத்தநாள் மாலை வீட்டுக்குள் நுழைந்ததும் அதிர்ச்சி காத்திருந்தது. "அப்பா பிரின்ஸிபாலைப் பார்த்து என் பெயரைச் சொன்னவுடன் 'யாரடா, கிருஷ்ணமூர்த்தி. எல்லாக் கிருஷ்ணமூர்த்திகளையும் சேர்த்துக் கொண்டாகி விட்டது. இங்கு இடமில்லை. போய் வா' என்று கத்தி அனுப்பி விட்டார்" என்றான் அழாக்குறையாக. இரண்டு வினாடி ஸ்தம்பித்து நின்று விட்டேன். பிறகு கோபம் பொத்துக் கொண்டு வந்தது. பையனைக் கரகரவென்று இழுத்துக் கொண்டு டாக்ஸியில் மானேஜரின் வீட்டை அடைந்தேன். அவரும் கலவரமுற்று முதலாளிக்குப் போன் செய்தார். ஆனால் என்னுடைய அதிர்ஷ்டம் அவர் கிடைக்கவில்லை.

"சார்: நீங்கள் நேராக முதலாளியைச் சென்று பாருங்கள். இதோ ஒரு கடிதம் எழுதித் தருகிறேன்" என்று சொல்லி என்னிடம் ஒரு கடிதத்தையும் எழுதிக் கொடுத்தார். டாக்ஸியில் பறந்தேன் அவர் வீட்டுக்கு. இரவு எட்டு மணிக்குத்தான் அவர் வந்தார். கடிதத்தை அவரிடம் கொடுத்து அழாக்குறையாக எல்லாவற்றையும் விளக்கினேன்.

"நாளைக்கு பிரின்ஸிபாலை நீங்களே சென்று பாருங்கள். நான் விசாரிக்கிறேன்" என்று சொல்லி முடித்தார். எனக்கு அசாத்திய கோபம் வந்தது. ஒரு ஸிபாரிசுக் கடிதம் எழுதிக் கொடுக்க முடியாதா அவரால்! ஆனால் என்ன செய்வது? எப்படிச் சொல்வது?

அடுத்த நாள் பையனையும் அழைத்துக் கொண்டு பிரின்ஸிபாலைப் பார்த்தேன். முதலாளி 'போன்' செய்து விட்டார் என்று அவர் பேச்சிலிருந்து தெரிந்தது.

"ரொம்ப 'ஸாரி' சார். நேத்து உங்க பையன் வருவதற்கு முன்னால் வேறொரு பையன் வந்தான். சேர்த்துக் கொண்டு விட்டோம். ஏனென்றால் அவனுக்கும் உங்களுடைய பையனின் பெயர்தான். உங்க பையன் என்று அவனை நினைத்து விட்டேன்" என்றார் புன்னகையோடு. நல்ல காலமாகக் கையோடு என் பையனையும் சேர்த்துக் கொண்டார். போதுமா ஸிபாரிசுத் தொல்லை?

சுப்பிரமணியன்,
பம்பாய்-22

தெரு முனையில் தோன்றிய அந்த உருவத்தைக் கண்டதும் துளசி துணுக்குற்றாள். மனத்தில் ஒருவகை பதற்றம். அப்படியும் இருக்குமா என்ற விபரீதமான வியப்பும் பொங்கி எழுந்தது.

மெள்ள நடந்து வந்த அந்த மனிதரை அவள் கூர்ந்து கவனித்தாள். அதே நடை, அதே உயரம், அதே தோற்றம்! எல்லாம் அப்படியே இருந்தன. கொஞ்சமும் வேற்றுமை இல்லை. மேலே போட்டிருந்த காவித்துணியை ஒரு கையில் தாங்கித் தவழவிட்டிருந்ததுகூட அதே பாணிதான். அப்படியானால் அவர் அவளுடைய தாத்தாதானா? ஐந்து வருடங்களுக்கு முன்னால் இறந்து போனாரே. அந்தத் தாத்தாவா அவர்?

எவ்வளவு அசம்பாவிதமான நிகழ்ச்சி! இது எப்படிச் சாத்தியமாகும்? ஐந்து வருடங்களுக்கு முன்பு அவர் இறந்து போகாமல், காணாமல் போய் விட்டிருந்தால் இந்நேரம் 'தாத்தா, தாத்தா' என்று கூவிக் கொண்டே அவரை நோக்கி ஓடியிருப்பாள் துளசி. ஆனால் அவர் இறந்த நிகழ்ச்சியும் அப்போது ஊர் முழுதுமே திரண்டு நின்று கண்ணீர் வடித்த காட்சியும் அவள் மனத்தில் தெளிவாக மலர்ந்தன. நிச்சயமாக எதிரே வருபவர் தாத்தாவாக இருக்க முடியாது. நிச்சயமாக முடியாது. ஆனால் கண்ணெதிரே அவர் நடந்து வருகிறாரே! அவளுடைய தாத்தாவே பிரத்யட்சமாக அவள் முன்பு ஒவ்வோர் அடியாக எடுத்து வைத்து வந்து கொண்டிருக்கிறாரே! நிச்சயமான ஒரு பொய்யாகவும் நிச்சயமான ஓர் உண்மையாகவும் அவளை நோக்கி வந்து கொண்டிருக்கிறாரே!

துளசி செயலிழந்து நின்று விட்டாள். அவள் மனத்தை மெள்ளப் பற்றிக் கொண்ட பீதியை அவளால் உணர முடிந்தது. அதை உணர்ந்ததாலோ அல்லது அதை மறைப்பதற்கோ அவள் வலிய ஒருமுறை சிரித்தாள்.

'தாத்தாவாவது வருவதாவது! இதென்ன நினைப்பு, குழந்தை போல. எல்லாம் வெறும் பிரமைதான்!'

துளசி தன்னையே சமாதானப்படுத்திக் கொண்டு முகத்தை வேறு திசையில் திருப்பினாள். அப்போதுதான் அவளுக்கு எதற்காகத் தான் வெளியே வந்தாள் என்பது நினைவுக்கு வந்தது. காக்கைக்கு அன்னம் இடுவதென்றால் அவளுக்கு உற்சாகம் பிறந்து விடும். இன்று சமையல் முடிந்து பூசையும் ஆன பிறகு அத்தகைய உற்சாகத்துடன்தான் அவள் வெளியே ஓடி வந்தாள். அவள் வீட்டுக்கெதிரே இருந்த வேப்ப மரத்தில் நிறையக் காக்கைகள் இருந்தனவா என்று பார்க்கும் ஆவல். ஆனால் வேப்ப மரத்தைக் காணுமுன் அவள் தாத்தாவை யல்லவா கண்டு விட்டாள்!


வே. கோவிந்தராசன்

இப்போதுவேப்ப மரத்தை அவள் கண்கள் துழாவினாலும் அது வேப்ப மரம்தானா, அதில் காக்கைகளும் இருந்தனவா என்று உணர்ந்து கொள்ளும் நிலையில் அவள் இல்லை. குழப்பமும், அச்சமும், வியப்பும் நிறைந்த உள்ளத்தோடு அவள் நிலையிழந்து நின்றாள். அந்தக் கிழவரை மறுபடியும் பார்க்க வேண்டும் என்ற ஆவல் கட்டுக்கடங்காமல் எழவே, அவள் விழிகள் மெள்ள நகர்ந்து அவர் மேல் பதிந்தன.

சாவதானமாக நடந்து வந்த அந்தப் பெரியவர் ஒரு வீட்டின் முன்பு சற்றுத் தயங்கி நின்றார். தலையைச் சற்று நிமிர்த்தி, அவ்வீட்டைப் பார்க்கையில் அந்தப் பார்வையில் தெறித்து விழும் அலட்சியம். அது தாத்தாவின் பார்வையேதான்!

நின்றவர் மறுகணம் நடையைத் தொடர்ந்தார். ஒரு கை அங்கவஸ்திரத்தைத் தாங்க, மற்றொரு கையை வீசியவாறு, தலை சற்றே தாழ அவர் நடந்தார். ஓரிரு வீடுகளைக் கடந்து திரும்பவும் நின்று அவர் இரு பக்கமும் பார்வையைச் செலுத்தினார். பிறகு மீண்டும் மெள்ள நடக்க ஆரம்பித்தார்.

துளசிக்குப் பரபரப்பு அதிகமாயிற்று. அவளுடைய தாத்தா இறந்ததும், அப்போது அவள் கண்ணீர் விட்டு அழுததும் எல்லாமே வெறும் கனவுகளா! எதிரே வருவது அவள் தாத்தாவே



தானோ! நேற்று வரை எங்கேயோ உறங்கியிருந்து விட்டு இன்று எழுந்து வருபவர் போலல்லவா அவர் அமைதியான, முழுமையான தோற்றமாய் அவள் எதிரே வந்து கொண்டிருக்கிறார்!

இதோ அவர் துளசியின் வீட்டை நெருங்கிவிட்டார். மேல் துண்டைத் தாங்கியிருந்த கையில் திரு பிரம்பும் இருந்தது. தாத்தா கூடக் கையில் பையோடு வருவ

துண்டு. அப்படி அவர் பையை எடுத்துக் கொண்டு வந்தால் அதில் துளசிக்கு ஏதாவது இருக்கும். தாத்தாவைக் கண்டால் எவ்வளவுக் கெவ்வளவு பயமாக இருக்குமோ அவ்வளவுக் கவ்வளவு மகிழ்ச்சியாகவும் இருக்கும். எப்படியோ அந்த மாதிரியான உணர்வை அவர் அவள் மனத்தில் ஏற்படுத்தி யிருந்தார். ஒரு வார்த்தை அவர் சேர்ந்து பேசியது கூட இல்லை. இருந்தாலும் அப்படி ஒரு மரியாதை.

ஒரு முறை அவர் அவளைக் கோபித்ததும் உண்டு. அப்போது அவள் பன்னிரண்டுவயதுச் சிறுமி. வீட்டுத் திண்ணையில் இதே போல் தான் உட்கார்ந்திருந்தாள். தாத்தாவும் இப்படித்தான் வெய்யிலில் மென்ன நடந்து வந்தார். மற்றொரு பெரிய மனிதரும் அவரோடு வந்தார். ஏதோ நினைவாக அவர்களைக் கண்டும் எழாமல் உட்கார்ந்திருந்தாள் துளசி. அமைதியாக வந்த அந்தக் கிழட்டு மனிதர் அவளை ஒரு பார்வை பார்த்தாரே! அதை இப்போது நினைக்கும்போதும் உடல் சிலிர்த்தது துளசிக்கு. அந்தப் பார்வைக்குத்தான் எவ்வளவு சக்தி! வெலவெலத்துப் போய், 'சட்'டென எழுந்து நின்று உள்ளே ஓடிப்போனாள் துளசி. அதைப் பற்றித் தாத்தாவும் பின்னர் அவளிடம் எதுவும் கேட்கவில்லை, அவளும் அந்த நிகழ்ச்சியை மறக்கவில்லை. அந்த நினைவிலிருந்து விடுபட்டுக் கிழவரை நோக்கிய துளசி இடுக்கிட்டான். அந்த மனிதர் இவள் வீட்டருகில் அல்லவா நிற்கிறார்! நின்று இவளையே அல்லவா பார்க்கிறார்! அந்தப் பார்வை — ? ஐயோ! அதே தாத்தாவின் பார்வை. அதே சக்தி வாய்ந்த பார்வை.!

'சட்'டெனத் திண்ணையிலிருந்து எழுந்து நின்று கொண்டாள் துளசி. பெரியவர் முன்னால் அப்படி உட்கார்ந்திருந்தது தப்புத் தானே!

சே! என்ன பைத்தியக்காரத்தனம்! அவர் யாரோ, அவள் யாரோ! அவரைக் கண்டு அவள் ஏன் எழுந்து நிற்க வேண்டும்? இருந்தாலும் அந்தப் பார்வைக்கு அவ்வளவு சக்தி இருந்திருக்க வேண்டாம், சுரீரென முள் தைப்பது போல்.

இவள் எழுந்து நின்றதும் பார்வையின் கடுமை மறைந்தாற் போலிருந்தது. எல்லாம் வெறும் பிரமைதானா! அந்த முகம் இப்போது எவ்வளவு சாந்தமாக இருக்கிறது! பார்த்துப் பேசிப் பழகிய அதே முகம்? இவர் தாத்தாவேதானா? அப்படி மட்டும் இருந்து விட்டால் அது எவ்வளவு மகிழ்ச்சிகரமாக இருக்கும்!

இவளையே பார்த்து நின்ற அந்த மனிதரிடம் என்ன பேசுவது என்றே அவளுக்குப் புரியவில்லை. என்ன வேண்டும் என்றோ, என்ன பார்க்கிறீர்கள் என்றோ கேட்பது மரியாதைக் குறைவு. அவளுடைய தாத்தாவைப் பார்த்து அவளால் அப்படிக் கேட்க முடியுமா? 'வாருங்கள்' என்று வேண்டுமானால் கூறலாம். ஆனால் முன்பின் அறியாத ஒரு மனிதரை, எப்படி வரவேற்பது? இப்படித் 'திரு திரு' வென்று விழித்துக் கொண்டு நின்றாலும் தாத்தாவுக்குக் கோபம் வருமே!

''அம்மணி!''

கனிவு நிறைந்த அந்தக் கிழவரின் குரல் அவளைத் திகைக்க வைத்தது. அதே குரல் இருப்பதே அதிசயம். அதோடு, தாத்தா எப்படி அவளைச் செல்லமாக 'அம்மணி' என்று அழைப்பாரோ அதே போல் இந்த மனிதர்

ஆவிகள் உலவுகின்றன



அழைத்து விட்டாரே! இது எப்படிச் சாத்தியமாகும்? துளசி அவரைக் கலக்கத்துடன் நோக்கினாள்.

"கொஞ்சம் தண்ணீர் கொண்டுவாம்மா!"

துளசி பதற்றத்துடன் உள்ளே சென்றாள். குளிர்ச்சியாகவும் இருட்டாகவும் இருந்த சமையலறையில் அவள் உணர்ந்த தனிமை அவளுக்கு நிம்மதியைத் தந்தது. தாத்தாவின் கண்ணில் படாமல் மறைவாக இருக்கும் போது ஒருவகை விடுதலை உணர்ச்சி உண்டாகுமே அப்படி. பலகையின் மீது கவிழ்த்திருந்த செம்பின் மேல் புள்ளி புள்ளியான கறைகள். செம்பை எடுத்துத் தேய்த்துப் பளிச்சென்று விளக்கினாள். இவள் துலக்கும் பாத்திரங்கள் கண்ணாடியாக இருப்பதாகத் தாத்தாவே கூறுவதுண்டு. இப்போது அது பொய்த்துப் போகலாமா?

சுத்தமான தண்ணீரைச் செம்பில் நிறைத்து அவள் வெளியே கொண்டு வந்த போது அந்த மனிதர் திண்ணையில் சாய்ந்து கண்களை மூடிக் கொண்டிருந்தார். ஒரு குழந்தையைப் போல் நின்று அவரை வியப்புடன் பார்த்தாள் துளசி. அவர் முகம் வெய்யிலில் கறுத்து வேர்த்திருந்தது. கன்னத்தில் ஆங்காங்கே நரை மினுத்திருந்தது. களைப்பாலும் சோர்வாலும் கண் குன்றிப் போன தோற்றமாய் அவர் சாய்ந்திருந்தார். சற்று நேரம் அப்படியே படுத்திருந்தால் வேர்வை அடங்கி அவருக்குத் தெளிவு பிறக்கும்.

சிறிதும் அரவம் காட்டாமல் செம்பை மெள்ளத் தரையின் மீது வைத்தாள் துளசி. அந்த மென்மையையும் மீறி ஒரு சிறு மணியின் உறலில் மிக மெல்லிய ஒலி எழுந்தது. சாதாரணமாக யாவரும் அதைக் கவனிப்பது அரிது. ஆனால் கிழவர் கண்ணை விழித்தார்.

"தண்ணீர் கொண்டு வந்தாயா அம்மா!" என்று கூறிக் கொண்டே எழுந்து சென்று முகம் கைகால்களைக் கழுவிக் கொண்டு ஒரு வாய்த் தண்ணீரும் அருந்தி விட்டு வந்து திரும்பவும் அவர் சாய்ந்தார்.

"நல்ல வெய்யிலம்மா, ஆளைக் கொல்லும் வெய்யில்!"

துளசி பதிலொன்றும் கூறவில்லை. என்ன பதில் கூறுவதென்றும் அவளுக்குத் தோன்றவில்லை. அவரும் அவள் பதிலை எதிர்பாராமல் கண்களை மூடிக் கொண்டு துண்டை மடித்து விசிறிக்கொள்ள ஆரம்பித்தார்.

துண்டால் விசிறுவது எவ்வளவு சங்கடமான காரியம்! துளசி உள்ளே சென்று விசிறியொன்றை நன்றாகத் துடைத்து எடுத்துக் கொண்டு வந்தாள். அவள் வெளியே வரும் போது அவர் கண்களை மூடிக் கொண்டிருக்கவில்லை. அவள் வருவதையே பார்த்துக் கொண்டிருந்தார். ஏனோ அவரைப் பார்க்கும் போதெல்லாம் துளசிக்குச் 'சொரே'லென்றிருந்தது. அவளுடைய தாத்தாவே உயிர்பெற்று வந்து அவளிடம் ஏதோ கோபித்துக் கொண்டு திண்ணையில் படுத்திருப்பது போன்ற நினைவு. அவள் என்ன தவறு செய்தாள்? தாத்தாவுக்கு ஏன் அவள் மீது அத்தனை கோபம்?

"விசிறி எனக்காகவா அம்மா கொண்டு வந்தாய்? சரி, கொடு. இந்தக் களைப்பு சீக்கிரம் தீரட்டும்!"

அவர் விசிறியை வாங்கிக் கொண்டார். துளசி சிறிது நேரம் அங்கேயே நின்றாள். அவளுக்குத் தன் மீதே கோபமாக வந்தது. யாரோ அறிமுகம் இல்லாத ஒரு மனிதரைத் தாத்தாவாக உருவகப் படுத்திக் கொண்டு இப்படி உபசாரம் செய்வது வெட்கக்கேடு அல்லவா? அதனாலென்ன? தாத்தாவாக இருந்தாலும் இல்லா விட்டாலும் வயசான ஒருவருக்குத் தண்ணீர் தந்து விசிறியும் தருவது தப்பில்லைதான். துளசி உள்ளே போகத் திரும்பினாள். அதற்குள் கிழவரின் குரல் கேட்டது.

"இந்தாம்மா, துளசி!"

துளசி நின்றாள். அவள் முகம் பயத்தால் வெளிறியது.

துளசியா? அந்தப் பெயர் முன்பின் தெரியாத அந்த மனிதருக்கு எப்படித் தெரிந்தது? அப்படியானால்....

'டங்'கென்று சம்மட்டியால் அடிப்பது போன்று நடையிலிருந்த சுவர்க் கடிகாரம் ஒரு முறை ஒலித்தது. அதைத் தொடர்ந்து பயங்கரமான ஓர் உண்மையைத் துளசிக்கு உணர்த்துவதைப் போன்று ஒரு மணிச்சங்கு விறிட்டெழுந்தது. அமைதியான அந்த உச்சிப் பொழுதிலே தன்னந்தனியாக ஓர் அசாதாரணமான அனுதாபத்தைப் பெறும் நடுக்கம். துளசி சிலையாக நின்றாள். அந்த நிச்சப்தத்தின் கடுமையைத் தாளாது எங்கோ ஒரு பறவை கிறீச்சிட்டு அலறியது.

"இந்தாம்மா, துளசி!"

இந்த இரண்டாவது அழைப்பில் அவள் மேனி ஒரு முறை சிலிர்த்து அடங்கிற்று. அவள் மனத்தில் அச்சம் ஆர்வம் ஏதுமின்றி அவள் உணர்வெல்லாம் மரத்துப் போனாற் போலிருந்தது. அவள் தன்னையறியாது திரும்பிக் கிழவரைப் பார்த்தாள். கிழவரின் அமைதியான பார்வை அவள் மீதே பதிந்திருந்தது. அவருடைய வலக்கை அவளை நோக்கி நீண்டிருந்தது.

துளசிக்கு 'சட்'டெனப் பிரக்ஞை வந்தாற் போலிருந்தது. அவள் அவர் கையைப் பார்த்தாள். அதில் சற்றே வாடிய துளசி இலைகள் சில இருந்தன.

"துளசி வாங்கிக் கொள்ளம்மா!"

அவள் முழுப் பிரயாசையுடன் தன் குழப்பத்தை யெல்லாம் மறைத்துக் கொண்டாள். முந்தானையால் முகத்தைத் துடைத்துக் கொண்டு வணக்கத்துடன் இரு கைகளையும் நீட்டி அந்தத் துளசியை வாங்கிக் கண்களில் ஒற்றிக் கொண்டாள். அதற்கு மேலும் அவளுக்கு அங்கு நிற்கத் தோன்றவில்லை. வேகமாக உள்ளே சென்று பூஜையறையில் நுழைந்தாள்.

விமரிசையான அலங்காரத்துடன் மணந்து கொண்டிருந்த அவ்வறை அவளுக்கு நல்ல தெளிவைக் கொடுத்தது. சற்று நேரத்துக்கு முன்னால் தனக்கேற்பட்ட அர்த்தமற்ற பயத்தையும் குழப்பத்தையும் எண்ணி அவள் தனக்குள்ளேயே சிரித்துக் கொண்டாள். வேப்ப மரத்தில் காக்கைகள் இருந்தனவா என்றுகூட அவள் பார்க்கவில்லையே! கிழவரைக் கண்டதும் எல்லாவற்றையும் அவள் மறந்து விட்டாளே!

ஓர் இலையை எடுத்து அதில் அவசரமாக உணவு படைத்தாள். பிறகு இரு கைகளிலும் அவ்விலையை ஏந்திக்கொண்டு மெள்ள நடந்து

தரத்தில் உயர்ந்தது



ருசிக்கச் சிறந்த வகையில் கலவை செய்த ப்ரூக் பாண்ட் கபே பிராண்டு பிரெஞ்சு காபி இப்பொழுது எங்கும் கிடைக்கும். நறுமணத்தையும் சுவையையும் காக்க இவை ஸெலபோன் பைகளில் விற்பனை செய்யப்படுகின்றன. பிரெஞ்சு காபியில் நல்ல மணம், சுவை இவற்றைப் பெற ப்ரூக் பாண்ட் காபியையே விரும்பிக் கேளுங்கள். இதுவே நீங்கள் கொடுக்கும் பணத்திற்குச் சிறந்தது.

ப்ரூக் பாண்ட்

கபே பிராண்டு

பிரெஞ்சு காபி



JWTBB 403

வெளியே சென்றாள். கையில் இலையுடன் இவள் நுழைந்து வருவதைக் கண்ட கிழவரின் முகம் மலர்ந்தது. அவருடைய மலர்ச்சி அவளுக்கும் புரிந்தது. காகத்துக்கு உணவு படைப்பது அவளுடைய தாத்தாவுக்கு மிகவும் பிடிக்குமே!

மடமடவென்று அவள் நடந்து சென்று குறட்டில் இலையை வைத்தாள். பிறகு இனிய குரலில் 'கா, கா' என்று அழைத்தாள். அவ்வளவு இனிமையாக யாரும் அழைத்துப் பழக்கமில்லாததால் எந்தக் காக்கைக்கும் இவள் அழைத்ததே தெரியவில்லை. தூரத்தில் யாரோ 'கா, கா'வென்று கரகரத்த குரலில் அழைத்ததைக் கேட்டு அங்கிருந்த ஓரிரு காக்கைகளும் பறந்து போயின. துளசி ஏமாற்றத்துடன் நின்று கொண்டிருந்தாள்.

"அதுதானாக வரும், நீ வாம்மா!"

கிழவரின் பரிவான அழைப்பைக் கேட்டு அவள் வெட்கத்துடன் திரும்பி வந்தாள். அவள் சிறுமியாக இருந்த போது எவ்வளவு ஆர்வத்துடன் காக்கைகளைக் கூவி அழைப்பாள்! அவை 'விர்'ரென்று பறந்து வந்து சற்றுத் தூரத்தில் அமர்ந்து தலையைச் சாய்த்துச் சாய்த்துப் பார்க்கையில் எழும் மகிழ்ச்சிக்கு இணை ஏது? அப்பொழுதெல்லாம் தாத்தா திண்ணையில் சாய்ந்திருப்பார். அவளை இழுத்து அணைத்துக் கொண்டு, "நீ பெரியவளான பிறகும் இப்படியே இருக்க வேண்டும். விரதம் இருக்க வேண்டும், தர்மம் செய்ய வேண்டும். தெரியுமா?" என்பார். அப்போதெல்லாம் துளசிக்கு அவர் வார்த்தைகளின் உயர்வு புலனாகவில்லை. இப்போது தாத்தா இருந்தால் அவளைக் கண்டு பூரித்துப் போவாரே!

"என்ன அம்மணி நீயாகச் சிரிக்கிறாயே!"

துளசி திடுக்கிட்டாள். "ஒன்றுமில்லை..." என்றவள் பிறகு நிதானித்துக் கொண்டு, "காக்காய்களுக்குக் கூடப் பஞ்சம் வந்து விட்டது போலும்!" என்று கூறிவிட்டு வனப்புடன் சிரித்தாள்.

"இன்று காக்கைக்கெல்லாம் விருந்தாயிற்றே அம்மா! எவ்வளவோ அசம்பாவிதம் நடந்தாலும் இன்னும் இந்தப் பழைய வழக்கமெல்லாம் நசித்துப் போகவில்லை."

"நான் இதெல்லாம் தவறாமல் செய்வேன்."

"நல்ல பெண். அப்படியே செய்து வா! உன் வீட்டுக்காரர் கோபிக்க மாட்டார் அல்லவா?"

"ஏன் கோபிக்கணும்?"

"இல்லை. இந்தக் காலத்துப் பிள்ளைகள் என்ன சொல்வார்கள் தெரியுமோ? மனிதனுக்கே சோறு இல்லை, காகத்துக்கெல்லாம் இப்படிச் சோறு போட்டு வீணடிக்கலாமா என்பார்கள்."

"இவர் அப்படி இல்லை. இதையெல்லாம் கவனிக்கவே மாட்டார்."

"நல்ல பையன். சர்க்கார் வேலையா?"

"ஆமாம்!"

"துணைக்கு வேறு யாரும் இல்லையா?"

"இல்லை. எங்களோடு வந்து இருக்கும்படி யாருமில்லை!"

"அதனாலென்ன, நீதான் கெட்டிக்காரப் பெண்ணாக இருக்கிறாயே!"

சாய்ந்திருந்தவர் எழுந்து உட்கார்ந்தார். அவருடைய களைத்துப் போன முகத்தில் பொங்கி எழுந்த கருணை துளசியின் மனத்தை உருக்கிற்று. அவளுடைய தாத்தா உயிருடன் இருந்தால் இப்படித்தான் அவளோடு பேசிக் கொண்டிருப்பார். இந்தக் கிழவர் தாத்தாவைப் போலவே இவ்வளவு அன்புடன் பேசியதால் எழுந்த நன்றியின் உணர்ச்சிப் பெருக்கில் துளசி மனம் நெகிழ்ந்து பேசினாள்.

"உங்களைத் தெருக் கோடியில் பார்த்த போது என் தாத்தாவே நடந்து வருவது மாதிரி இருந்தது. நீங்களும் நேரே இங்கே வந்தீர்கள்!"

கிழவரின் முகம் சட்டென்று மாறிற்று. அது என்ன உணர்வு?

"நான் உன் தாத்தாவைப் போலவா இருக்கிறேன்....?"

"ஆமாம்! அப்படியே என் தாத்தாவைப் போலவே இருக்கிறீர்கள். என் தாத்தா என் மேல் உயிரையே வைத்திருந்தார். அவர் ரொம்ப ஆசாரமானவர். பூஜை, விரதம் இதெல்லாம் ரொம்பக் கண்டிப்பு. ரொம்ப, ரொம்பப் பெரியவராக வாழ்ந்தார்."

கிழவரின் முகம் மேலும் விகாரமடைந்தது.

"இன்னும் சொல்லப்போனால் நீங்க என்னை அம்மணின்னு கூப்பிட்ட போது என் தாத்தாவே உயிரோடு வந்துவிட்டாரோன்னு நினைத்தேன்."

கிழவர் சங்கடமான உணர்வுகளோடு தலையைத் தாழ்த்திக் கொண்டார். அவர் தோள்களைக் குறுக்கி, துண்டைச் சரியாகப் போர்த்திய பொழுது அதில் எண்ணற்ற கிழிசல்கள் தெரிந்தன. துண்டு விலகிய போது அவர் சட்டையின் கிழிசல் தோன்றி மறைந்தது.

துளசி தொடர்ந்தாள்.

"உங்களைப் போல்தான் தாத்தாவும் ஏதாவது காரியமாக அடிக்கடி வெளியே போவார்; வெய்யிலில் வாடிப்போய் அவர் வருவதைப் பார்த்தால் மனம் உருகிப் போகும்."

இதைச் சொல்லி விட்டு அவள் சற்று நேரம் மௌனமாக இருந்தாள். பிறகு நினைவின் பிடிப்பிலிருந்து விடுபட்டவளாய் அவரோடு பேச ஆரம்பித்தாள்.

"உங்களுக்கு இந்த ஊர்தானா?"

"இல்லையம்மா, எனக்கு மதுரை."

"அடேயப்பா! ரொம்பத் தூரம். இங்கே யார் வீட்டுக்குப் போகணும்?"

அவர் சிறிது தயங்கினார். எங்கே போவது என்று அவர் யோசிப்பது போல் இருந்தது.

"நீங்கள் ஏதாவது வியாபார விஷயமாக வந்தீர்களா?"

கிழவர் மேலும் குழப்பத்துடன் அவளைப் பார்த்தார். பிறகு இலேசாகக் கனைத்துக் கொண்டு, "ஆமாம், அம்மா! வியாபாரம் தான்" என்று கூறியவாறே துண்டின் ஒரு பக்கத்தைச் சற்று மடித்து அங்கிருந்த ஒரு கிழிசலை மறைத்தார்.

"ரொம்பக் களைத்துப் போயிருக்கிறீர்களே, கொஞ்சம் மோர் கொண்டு வரட்டுமா?"

கிழவரின் முகம் மலர்ந்தது. ஆனால் அவர் ஒன்றும் கூறவில்லை. தம் சக்தியை யெல்லாம் திரட்டி அவளிடம் எதையோ மறைக்க முயன்று கொண்டிருந்தார்.

ஒருகணம் அங்கு நிலவிய அமைதியைக் குலைத்தவண்ணம் பிச்சைக்காரன் ஒருவன் தெருவில் தோன்றினான். கறுத்துத் தடித்திருந்த அவன் தன் உருண்டு திரண்ட மார்பின் மீது ஒரு சட்டியைக் கவிழ்த்துத் தாள

பிட்டவாறு ஒரு சினிமாப் பாட்டைப் பாடிக் கொண்டே வந்தான். துளசியின் வீட்டை நெருங்கியதும் அவனுடைய பாட்டு, தாளம் எல்லாம் நின்று போயின. அவன் ஆவலுடன் ஓடி வந்து காக்கைக்கு இட்ட சோற்றை இலையோடு எடுக்கப் போனான்.

"அடடே, அதை எடுக்காதே அப்பா, அதை எடுக்காதே!" என்று கூவினாள் துளசி.

அவன் நின்று முறைத்தான்.

"என்னடா, பார்க்கிறே, அது காக்காய்க்கு என்று வைத்தது. அதைப் போய் நீ எடுக்கிறாயே!" என்றார் கிழவர்.

"என்ன சாமி, காக்காயைவிட நான் தாழ்ந்துபூட்டேனா? அட, அந்தக் காக்காய் நான் வரலே. இந்தக் காக்காய் இன்னும் கன்னு தெரிஞ்சுக்குங்களேன்!"

துளசி குறுக்கிட்டாள்.

"நீ என்ன எங்களைக் கிண்டல் செய்யறியா? பசின்னு கேட்டா நானே உனக்குச் சாப்பாடு போட்டிருப்பேன். நீ என்னடான்னு குதர்க்கம் பேசறே! முதல்லே இந்த இடத்தை விட்டு நீ நகரு."

அவன் எல்லாம் தெளிந்து எதையும் சட்டை செய்யாத ரகம். துளசியைப் பார்த்துக் குறும்பாகச் சிரித்தான்.

"காக்காய்க்குப் போடுவீங்க, மனுசனுக்குப் போட மாட்டீங்க, இல்லையா?"

"மனுசனுக்கும் போடுவேன். ஆனால் உன்னைப் போல இடக்குப் பேசற மனுசனுக்கு இல்லே...."

"நானும்மா பேசறேன்? என் பசி பேசுது, பசி!" என்று தன் வயிற்றை 'மொத்'தென்று அடித்துக் கொண்டான் அவன். "என் வயித்துலே பத்தி எரியுதே அந்தப் பசி பேசுது. தாராளமா ஒரு ஆளு சாப்பாட்டை இப்படிக் காக்காய்க்குன்னு வச்சிருக்கிங்களே. இது ஞாயமா?"

கிழவர் சற்று உயர்ந்த குரலில் பேசினார்.

"இந்தாப்பா, உனக்குச் சாப்பாடுதானே வேணும்? நீ போயிட்டு கொஞ்சம் நேரம் கழித்து வா! இந்த வீட்டில் சாப்பிட்டானதும் உனக்கும் போடுவார்கள். உம், நகரு!"

"சாமி, நீ நல்லா இரு! அம்மாவ்! நான் போயிட்டு அப்புறமா வாரேன். கோவிச்சுக் காதே தாயீ! கா....கா....கா...." இரு கைகளையும் இறக்கை போல் மடித்துக் கொண்டு அவன் நகர்ந்தான்.

"அவன் வந்தால் அவனுக்கு ஏதாவது போடம்மா! அவன் அப்படி வயிறெரிந்தது உனக்கு நல்லதல்ல."

ஐயோ! இது தாத்தாவேதான்! இதே வார்த்தைகளை அவர் வேறொரு முறை கூறியிருக்கிறாரே!

பழைய கலக்கம் திரும்பவும் துளசியைப் பற்றியது. விழியெல்லாம் வியப்பாக விரிய அவள் அவரைப் பார்த்தாள். அதே சாயலுடன் அதே தோரணையில் அதே பேச்சுக்களையும் சொன்னதுபோல் பேசுகிறாரே! இவரைத் தாத்தாவென்று நம்புவதா? அல்லது யாரோ என்று எண்ணிக் கொள்வதா? அவள் மீண்டும் பேசுகையில் அவள் குரலின் இயல்பு குன்றியிருந்தது.

"உங்களுக்கு மோர் வேண்டுமா?"

"அதெல்லாம் ஒன்றும் வேண்டாமம்மா!"

இயல்பாக யாரும் கூறும் வார்த்தைகளே வெளிவந்தன. அது வழி வழி வந்த பழக்கத்தின் வலிமையால் உதிர்ந்த வார்த்தைகளாகவன்றி அவர் உள்ளத்திலிருந்தும் ஏதேனும் உண்மைப் பொருளுடன் பிறந்தவையாகத் தோன்றவில்லை.

அவர் வேண்டாமென்று சொன்னாரோ, என்னவோ துளசியின் முகம் மகிழ்ச்சியால் ஒளி பெற்றது.

"எனக்குத் தெரியும், நீங்கள் சாப்பிட மாட்டீர்கள் என்று. நீங்களெல்லாரும் இப்படித்தான். என்னுடைய தாத்தா வெளியே எங்கேயும் பச்சைத் தண்ணீரைக் கூடத் தொட மாட்டார்."

கிழவரின் முகம் சுருங்கிற்று. அது என்ன உணர்வு ?

துளசி மேலும் தன் தாத்தாவின் ஆசாரத்தைப் பற்றி ஆர்வத்துடன் பேசிக் கொண்டே போனாள். அவர் மோர் அருந்தச் சம்மதித்திருந்தால் அவளுக்கு இவ்வளவு மகிழ்ச்சியும் பெருமிதமும் ஏற்பட்டிருக்குமா? நிச்சயமாக இருக்காதே! கிழவரின் முகத்தில் சிறுகச் சிறுக இளநகை அரும்பிற்று.

கிழவர் பேசாமலிருந்ததை உணர்ந்த துளசி தன் பேச்சை நிறுத்தினாள். வாட்டமுற்றிருந்த அவர் முகத்தில் அரும்பிய புன்னகையின் பொருள் என்ன? அவர் வந்ததிலிருந்து அவர் முகத்தில் தயக்கத்துடன் தங்கியிருக்கும் அவளுக்குப் புரியாத அந்த உணர்வு என்ன உணர்வு? 'உன் தாத்தாவையே உனக்குப் புரியவில்லையா, மடப்பெண்ணே!' என்று எண்ணித்தான் வருத்தத்துடன் நகைக்கிறாரோ!

வெய்யிலுக்கு ஒதுங்கிய ஒரு பெரியவருக்குத் தண்ணீர் தந்து உபசரிப்பது சர்வ சாதாரணமான ஒரு காரியம்தானே. ஏதோ தாத்தாவைப் போன்ற சாயல் இருந்ததால் இப்படி மனத்தைக் குழப்பிக் கொள்ளலாமா? இவ்வளவு பெரியவளான பின்னும் அவள் குழந்தை போலவா இருப்பது?

தெளிந்த உள்ளத்துடன் கிழவரைப் பார்த்தாள் துளசி. கண்களைச் சிறிதே மூடிய நிலையில் சிந்தனையில் ஆழ்ந்திருந்தார் அவர். இன்னும் அவருடைய களைப்பு நீங்கினதாகத் தோன்றவில்லையே !

"இப்படிக் களைத்துப் போயிருக்கிறீர்களே. இன்று இங்கேயே சாப்பிட்டு விடலாமே!"

கிழவர் சட்டென்று நிமிர்ந்து துளசியைப் பார்த்தார். அந்தப் பார்வையில் கனன்று ஒளிவிட்டது ஆர்வமா? அல்லது சினமா?

"நீங்கள் எதற்கும் யோசிக்க வேண்டாம். நாங்களும் சுத்தமாகவும் ஆசாரத்தோடும் இருப்பவர்கள்தான்."


எதிலிருந்தோ தப்பித்துக் கொள்ளும் அவசரத்துடன், "எனக்கு வேண்டாமம்மா, நீ போய்ச் சாப்பிடு!" என்றார் கிழவர்.

துளசி போகவில்லை. அவளுக்கு வருத்தமாக இருந்தது. 'இவரே நம் தாத்தாவாக இருந்தால் சாப்பிடாமல் இருப்பாரா?' என்ற வேதனை அவள் மனத்தில் எழுந்தது. 'இந்தக் கிழவர்தான் சாப்பிட்டால் என்னவாம்.'

'சட்' டென்று எதையோ நினைத்துக் கொண்டு "ஓஹோ! இப்போதுதான் நினைவுக்கு வந்தது" என்று நிம்மதியுடன் கூறினாள் துளசி.

கிழவர் வாய் திறக்கவில்லை. உணர்ச்சியற்று அவர் துளசியைப் பார்த்தார்.

"இன்று சனிக்கிழமையல்லவா. நீங்கள் விரதம் தானே? அதனால்தான் சாப்பிட மாட்டேன் என்கிறீர்களா? காலையிலிருந்தே ஒன்றும் சாப்பிட்டிருக்க மாட்டீர்களே! என் தாத்தாவும் இப்படித்தான். சனிக்கிழமைகளில் ஒன்றுமே சாப்பிட மாட்டார். பலகாரம் கூட. உடம்பு நன்னயில்லையென்றால் கூடக் கவலைப்படமாட்டார். இந்த விஷயத்தில் ரொம்பக் கண்டிப்பு...." மீண்டும் பெற்றுவிட்ட கரைகடந்த மகிழ்ச்சியுடன் அவள் பேசிக் கொண்டே போனாள்.



முதல் ஈ: டேய் ஜாக்கிரதை! இந்த ஓட்டல் காப்பியில் விழுந்து பிராணனை விடுவதற்குப் பதிலாகப் பச்சைத் தண்ணியில் விழலாம்.

களங்கமற்ற சின்னஞ் சிறு குழந்தையைப் பார்ப்பது போல் துளசியைப் பார்த்து நகைத்தார் அந்தப் பெரியவர்.

"உனக்கு எந்தக் குறையும் வராதம்மா! நீ இருக்கும் இடம் எப்போதும் லட்சுமீகரமாக விளங்கும். போம்மா. போய்ச் சாப்பிடு!"

துளசியின் மனம் நெகிழ்ந்தது. கண்களில் நீர் வரும்போலாயிற்று. உணர்ச்சி வசப்பட்ட அவள் 'சட்'டெனக் குனிந்து கிழவரின் கால்களைத் தொட்டுக் கும்பிட்டாள்.

"சௌக்கியமா இரும்மா!" என்று கூறும்போது கிழவரின் குரல் நடுங்கிற்று. அவர் தம் கண்களை மூடிக்கொண்டு துவண்டு சாய்ந்தார்.

அதற்கு மேல் துளசி அவரிடம் ஒன்றும் பேசவில்லை. அவர் அப்படியே சாய்ந்து ஓய்வு பெறட்டும் என்ற எண்ணத்தோடு சந்தடியின்றி உள்ளே சென்றாள்.

அவள் சென்றதும் கிழவர் கண் விழித்தார். அவர் முகம் தெளிவடைந்திருந்தது. விசிறியைத் திண்ணையில் வைத்து விட்டு மேல் துண்டைச் சரி செய்தவாறு அவர் திண்ணையை விட்டு இறங்கிக் குறட்டுக்கு வந்தார். அங்கு காக்கைக்குப் படைத்த அன்னம் அப்படியே இருந்தது. ஒரு கணம் அவர் தயங்கி நின்றார். பிறகு முகமெல்லாம் வேர்க்க, உடலெல்லாம் குன்றிப் போக, கைகள் இரண்டும் நடுநடுங்க அவர் அந்த இலையை அப்படியே எடுத்துத் துண்டில் வைத்து ஏந்திக் கொண்டார். அந்தப் பெரிய வீட்டுச் சின்னப் பெண் எங்கே தன்னைப் பார்த்து விடுவாளோ என்று ஒரு முறை திரும்பிப் பார்த்தார். பிறகு தெருவில் இறங்கி நடந்தார்.

வீட்டினுள் சென்ற துளசியின் நெஞ்சு உவகையால் நிறைந்து விம்மிற்று. 'சௌக்கியமா இரும்மா' என்று அவர் வாழ்த்திய வார்த்தைகள் அவள் காதில் இன்பமாக ஒலித்துக் கொண்டிருந்தன. அந்த மாதிரி அவளை வாழ்த்துவதற்கு யார் இருக்கிறார்கள்? தாத்தாதான் இறந்து போனார். அவரால் எப்படி அவளை விட்டுப் போக முடிந்தது? இறந்து போனாலும் அவரால் இவளைப் பிரிந்து இருக்க முடியுமா? முடியவே முடியாது. அவர் அங்கேதான், அவள் அருகேதான் இருப்பார். ஏன், திண்ணையில் இருப்பவர் அவளுடைய தாத்தாவைத் தவிர வேறு யாராக இருக்க முடியும்? அவருடைய புரியாத புன்னகையின் பொருளென்ன? 'உன் தாத்தாவையே உனக்குப் புரியவில்லையே மடப் பெண்ணே!' என்பதுதானே? ஆம்! திண்ணையிலிருப்பது அவள் தாத்தாதான்.

இறந்தவர்கள் சில சமயங்களில் வந்து பிரியத்துடன் பேசிச் சென்றதாக அவள் அறிந்த கதைகள் அவள் நினைவுக்கு வந்தன. அந்தக் கதைகளில் சிலர் இரவு நேரங்களில் வந்து கதவைத் தட்டிப் பிரியத்துடன் அழைத்தார்கள். சிலர் உச்சிப் பகலில் வந்து உரையாடி விட்டுச் சென்றார்கள். சிலர் நல்லது செய்யும் நல்லவர்களாக இருந்தார்கள். சிலர் தீமை செய்யும் கொடியவர்களாக இருந்தார்கள்.

என்னதான் ஆவியாக மாறி விட்ட பொழுதிலும் அவர்களுக்கு இந்த மண்ணின் நினைவு மாறுவதில்லை. உற்றார் உறவினரின் பந்தம் விடுவதில்லை. கனவாக, நினைவாக வந்து போவார்கள். உலகத்தில் உலவி, ஆவி உலகம் என்று ஒன்று உண்டு என்பதாகக் காட்டிக் கொள்ளுவார்கள். இப்படியாக அவளுக்குத் தான் படித்த பல கதைகள் நினைவுக்கு வந்தன.

முழுமையான தொரு நம்பிக்கையும், முழுமையான தொரு அவநம்பிக்கையும் ஒருங்கே எழுந்து இனம் விளங்கா உணர்வுகளை அவள் மனத்தில் எழுப்பின. 'தாத்தா நல்லவர். அவர் எனக்குக் கெடுதல் செய்ய மாட்டார்' என்று எண்ணியவாறு அவள் முழு வலிமையுடன் தன் அச்சத்தை விலக்கினாள். உயிர் பிரிந்த நிலையில் தாத்தாவின் அமைதியான முகமும் அதற்குப் பின்னணியாகச் சங்கின் நாதமும் அவள் நினைவில் பசுமையாக இருந்தன. அதே அமைதியான முகம் இப்போது திண்ணையில் இருக்கிறதே! அவள் மெய் சிலிர்த்தது. மீண்டும் அவள் தாத்தாவை—தாத்தாவின் ஆவியைக்காணும் ஆவல். நெஞ்சு படபடக்க திண்ணையை நோக்கி நடந்தாள்.

திண்ணையில் விசிறி கிடந்தது. தாத்தாவின் அடையாளமாகச் சில துளசி இலைகள் சிதறிக் கிடந்தன. துளசிக்கு அவற்றைத் தொடவே அச்சமாக இருந்தது. அவசரமாகச் சென்று வெளியே எட்டிப் பார்த்தாள். தெருக் கடைசியில் அவர் வேகமாகச் செல்வது தெரிந்தது. நடையின் வேகம் மிகுந்து அவர் ஓடவே ஆரம்பித்தார். ஓரிரு விநாடிகளில் அவர் உருவம் மறைந்து தெரு வெறிச்சிட்டது. துளசியின் கண்கள் பூத்தன.

அவள் உள்ளம் கனத்தது. அவர் ஏன் இப்படி ஓடிப் போனார்? நிச்சயமான ஓர் உண்மையாய் நிச்சயமான ஒரு பொய்யாய் அவர் தோன்றி மறைந்து போனார். உன்னதமான நம்பிக்கையில் அவள் மனம் குருடாகி இணையற்ற இன்பத்தில் ஆழ்ந்தது. அவள் கண்களில் 'குப்'பென்று நீர் பொங்கிற்று.

'தாத்தாவே! உபவாசம் இருக்கும் இந்த விரத நாளில்தானா நீங்கள் வர வேண்டும்?'' என்று அவள் அங்கலாய்த்துக் கொண்டாள்.

காக்கைக்கு இட்ட அன்னத்தை அவள் மறந்தே போனாள்.

மில்க் ஆப் மக்னீஷியா என்பது என்ன?

இது மெக்னீஷியம் ஹைட்ராக்ஸைடின் எமல்ஷன். அமில நாசினியும் மலமிளக்கியுமான இது இரைப்பை சம்பந்தமான (அஜீரணக்) கோளாறுகளின் சிகிச்சையில் ஏராளமாக உபயோகப்படுத்தப்படுகிறது.

மில்க் ஆப் மக்னீஷியாவிற்கு, மெக்னீஷியம் ஹைட்ராக்ஸைட் மிக்ஸ்சர் B.P., மெக்னீஷியா மாக்மா யு. எஸ்.' பி.. க்ரீம் ஆப் மக்னீஷியா B.P. போன்ற பெயர்களும் உண்டு. எப்பெயரால் அழைக்கப்பட்டாலும் இதன் அடிப்படையான பொருள் ஒன்றே. மேலும் ஒரு அங்கீகாரமான ஔஷதகரண விதியின் கண்டிதமான நியதிக்கும், பிரமாணத்திற்கும் தக்கபடி இது உற்பத்தி செய்யப்படுகிறது. இது எந்த வர்த்தகப் பெயரில் விற்பனை செய்யப்பட்டாலும் சரி அப்பெயர் தயாரிப்பாளரை சுட்டிக் காட்ட அனுகூலமாகுமே தவிர இதன் தரத்தை உயர்த்தவோ, தாழ்த்தவோ செய்யாது.

இருந்த போதிலும், விற்பனைப் பெயர், வாடிக்கையாளரை பொறுத்த மட்டில் மிகவும் முக்கியம். ஏனென்றால் நன்கு தெரிந்த ஒரு பெயர் அவருக்கு தயாரிப்பாளரின் நம்பகத்தன்மையைப் பற்றி உறுதியளிக்கிறது. இக்காரணத்தினால் தான் கணக்கற்ற வாடிக்கையாளர்கள் அன்றாடம் 'மந்த்' (MandH) மில்க் ஆப் மக்னீஷியாவை வாங்குகிறார்கள். இது யுனைடெட் ஸ்டேட்ஸ் ஔஷதகரண விதிகளின்படி தயாரிக்கப்பட்டு குணத்திற்கும் தரத்திற்கும் நன்கு பரிசீலனை செய்யப்படுகிறது. ஆகையால் இதன் தரமும், தூய்மையும் கேள்விக்கு இடமற்றதாக விளங்குகிறது. எல்லாவற்றிற்கும் மேலாக, மற்ற எல்லா 'மந்த்' (MandH) தயாரிப்புகளைப் போலவே, மருந்துகள் தயாரிப்பதில் 50 வருடங்களுக்கு மேலாக உள்ள அனுபவத்தின் சிறப்பையும் பெற்றுள்ளது.

மார்டின் & ஹாரிஸ் (பிரை) லிட்., மெர்கண்டைல் பில்டிங்ஸ், லால்பஜார், கல்கத்தா-1

M/FIT

TA

படித்துப்  பாருங்கள்

1. சிலம்பின் பாயிரம்

"நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்றோர் மணியாரம் படைத்த தமிழ் நாடு" என்னும் மகா கவியின் வாக்கு நூற்றுக்கு நூறு உண்மை என்பது அவ்வரும் பெருங் காப்பியத்தை நுகர்ந்தவர்களுக்கெல்லாம் தெரியும். தமிழ்க் காப்பியங்களுக்குள், சிலப்பதிகாரத்தை நாடகக் காப்பியம் எனக் கூறுகின்றனர். அதற்கேற்ப அது நாடகப் பாணியிலேயே பல இடங்களில் அமைந்துள்ளது.

முறை தவறும் மன்னனை தர்ம தேவதையே கூற்றுவனாக மாறி அழித்து விடுவாள் என்னும் உண்மையும், பத்தினிப் பெண்கள் வழிபடு தெய்வமாக வணங்குவதற்கு உரியவர்கள் என்னும் உண்மையும், ஊழை வெல்லும் வன்மை யாருக்குமே இல்லை இல்லை என்னும் உண்மையும் இக்காப்பியத்தின் மூலம் வலியுறுத்தப்படுகின்றன.

சிலப்பதிகாரத்தின் தொடக்கத்தில் உள்ள மங்கல வாழ்த்துப் பாடலை மட்டும் எடுத்துக் கொண்டு "சிலம்பின் பாயிரம்" என்னும் நூலில் ஆசிரியர் மிக விரிவாக விளக்கியிருக்கிறார். இளங்கோவடிகள் பாயிரத்தில் இறைவனை வாழ்த்தாமல், மதி, ஞாயிறு, மழை, புகாரென்ற நான்கினையே வாழ்த்தியிருப்பதை ஆசிரியர் தெளிவுபடுத்தி விளக்கியிருப்பது நன்றாயிருக்கிறது. பாயிரத்திலேயே கதையின் முடிவு, போக்கு ஆகியவற்றைச் சூசகமாகக் காட்டியிருக்கும் திறமையை ஆசிரியர் அழகாக விளக்கியிருக்கிறார். அது யாரும் கவனிக்கவேண்டிய குறிப்பு.

பாயிரத்தைப் பற்றித் தெரிந்து கொள்ள இவ்வளவு இருக்கிறதா என்று வியந்து பாராட்டும் வண்ணம் இந்நூல் அமைந்திருக்கிறது. சிலப்பதிகாரத்தின் பழைய உரையான அடியார்க்கு நல்லார் உரையையும் ஆங்காங்கு எடுத்தாண்டிருக்கிறார். விலை ரூ. 2.00.

2. சிலம்பின் இரசனை

"சிலம்பின் இரசனை" என்ற நூல் சிலப்பதிகாரம் முழுவதையும் துருவி ஆராய்கிறது; ஒவ்வொரு பாத்திரத்தின் குண பேதங்களையும் எடுத்துக் கொண்டு அலசிப் பார்த்துப் பாத்திரத்தின் தரத்தை நிர்ணயிக்கிறது. சிலப்பதிகாரம் ஒரு நாடகக் காப்பியம் ஆதலால் அதை விளக்க ஆசிரியர் எடுத்துக் கொண்டிருக்கும் முயற்சி நல்லதோர் ஆராய்ச்சியாக இருக்கிறது.

"நாடகம்" என்ற தலைப்பில் ஆசிரியர் எழுதியிருக்கும் அரிய விளக்கங்கள் மீண்டும் மீண்டும் படிக்கத் தூண்டுவனவாக உள்ளன.

"நாடகக் கதை எழுதுவதனை ஒரு வழியில்லாத மலையின் மீது ஏறி இறங்குவதற்கு ஒப்பிடலாம். மலையின் உச்சி நம் கண்ணுக்குத் தெரியாமல் மறைந்திருப்பது நாம் ஏறிச் செல்லுவதற்கு உதவியாயிருக்கிறது. கால்கள் கடுக்கத் தொடங்கும் காலங்களில், இதோ உச்சி வந்து விடும் என்ற எண்ணம் ஊக்க மலை ஏறி உச்சியை அடைந்து விடுகிறோம். அங்கிருந்து பார்க்கும் பொழுது நாம் புறப்பட்ட இடமான மலையடிவாரம் மிக அருகில் இருப்பது போலத் தோன்றுகிறது. இதுவே இறங்கி வரும் காலத்தில் நம்மைத் துன்பத்துக்குள்ளாக்குகிறது...." என்று நாடகம் எழுதுவதிலுள்ள சிரமத்தை வெகு அழகாக எல்லோருடைய மனத்திலும் பதியும் வண்ணம் கூறுகிறார் ஆசிரியர்.

இது போன்ற விளக்கங்கள் நூல் முழுவதும் பின்னிக் கிடந்து பொலிகின்றன.

அறிமுகம், அமைப்பு, நாடகம், அவல நாடகம், காப்பியம், சிக்கல், விளக்கம், அமைதி, அடிகள், தகுதி என்னும் புதுத் தலைப்புக்கள் வகுத்துக் கொண்டு ஆசிரியர் சிலப்பதிகாரக் காப்பியத்தை மிக அழகாகத் திறனாய்வு செய்திருக்கிறார். யாரும் படித்துப் பயனடைய வேண்டிய நூல். விலை: ரூ. 3.75.

இரண்டு நூல்களையும் எழுதியவர்: எஸ். ஆர். மார்க்கபந்து சர்மா எம். ஏ., பிரசுரம்: தொல்காப்பியர் நூலகம், 202, ஜானிஜான் கான் தெரு, சென்னை-14;

ஒரே ரத்தம்

மனித உடலுக்குள்ளே ஓடும் ரத்தத்துக்கு நிற வேறுபாடு கிடையாது. அப்படி ஒரே ரத்தத்தில் பிறந்து வளர்ந்த மனிதன், நாடு, மொழி, இனம் என்று பல்வேறு பாகுபாடுகளைச் சிருஷ்டித்துக் கொண்டு இல்லாத பல பகைகளையெல்லாம் வளர்த்துக்கொள்கிறான். அப்பகை உயிர்க் கொலைவரைகூடக் கொண்டு விட்டு விடுகிறது.

ஈழத்திலே தலைவிரித்தாடிய இனவெறியைப் பகைப்புலனாகக் கொண்டு எழுதப்பட்ட இந்த நவீனத்திலே இராச துரை என்பவன் எத்தகைய பெருந் தியாக சீலனாகத் திகழ்கிறான் என்பதைக் காண்கிறோம்; சில்வா என்பவன் எப்படி இனவெறி கொண்டு திரிகிறான் என்பதைக் காண்கிறோம். பிரேமதாச, கணபதி என்று பெயர் கொண்ட இரு புதல்வர்களுக்குத் தாயாகத் திகழ்ந்த பொடிநோனாவின் தாயுள்ளத்தையும் அவள் செய்த தீரச் செயலையும் ஒரே ரத்தத்தின் பெருமையையும் காண்கிறோம்.

ஏறக் குறைய 347 பக்கங்கள் கொண்ட இந்நூலின் கதை, ஆரம்பத்தில் 25 பக்கங்களுக்குள்ளேயே ஒரு சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளது. பின் வளர்ந்து மேலே குறிப்பிட்ட பக்கங்கள் வரை நீண்டு நிறைவெய்துகிறது.

இப்படி முன்கூட்டியே தெரியும் கதையை முழுதும் படிக்க வாசகர்களுக்குப் பொறுமையிருந்தால், இந்நூல் எழுதியவர், தாம் பட்ட சிரமத்துக்குப் பயன் பெற்றவர் ஆவார் என்பது உறுதி.

எழுதியவர்: திரு எம். ஏ. அப்பாஸ்; பிரசுரம்: ஜெமினி பிரசுரம், எல்லையம்மன் காலனி, சென்னை-6; விலை: ரூ. 5.00.

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs Bharathan Publications Private Limited at the Kalki Press Kilpauk Madras-10
Managing Editor T. Sadasivam.

REGISTERED No. M. 4392

Registered as a Newspaper in Ceylon



சட்டை, வேட்டி, சேலை, ரவிக்கை, துண்டு, சிறுவரின் உடைகள் ... நம் வீட்டுத் துணிகள் எல்லாவற்றுக்கும் ஏற்ற சலவை ... வீட்டிலேயே ஸர்ப் சலவை ... வெகு இலகுவாக வெள்ளைவெளேரென்று துப்புரவாக்கும் சலவை! எல்லாம் ஸர்ப் செயல், அதன் அளவுகடந்த ஆற்றல்! இன்றே செய்வீர் ஸர்ப் சலவை ... இல்லத்திற்கான இணையற்ற சலவை!

ஸர்ப் சலவை: வெள்ளைவெளேர் சலவை!

இந்துஸ்தான் லீவர் தயாரிப்பு

SU. 24-X